Old Paths (TAMIL)

# பூர்வ பாதைகள்

கிறிஸ்தவர்களை
அவர்கள் இருக்கும் நிலையிலிருந்து
அவர்கள் இருக்கவேண்டிய நிலைக்குக்
கொண்டுவரும் அருட்செய்திகள்

R. ஸ்டான்லி



# பூர்வ பாதைகள்

கிறிஸ்தவர்களை
அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து
அவர்கள் இருக்கவேண்டிய இடத்திற்குத்
திருப்பிக் கொண்டுவரும் அருளுரைகள்

**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

இப்புத்தகத்திலுள்ள அத்தியாயங்கள்
2010 அக்டோபர் 1-3இல், காரைக்குடியில் நடந்த
பூர்வ பாதைகள் முகாமில் கொடுக்கப்பட்ட செய்திகள்

R. Stanley
13 Church Colony
Vellore 632 006, India
<*stanleyonbible@hotmail.com*>

**Old Paths** (Tamil)

Copyright 2017 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006

*00 91 98437 07600*
*00 91 98430 11943*

First Edition: September 2017

திருமறையின் பழையதும் புதியதுமான
மொழியாக்கங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

Typeset by
Miss Sangeetha,
Blessing Computers, Vellore

Pageset by
Mr. K. Gunasekaran,
Retired Missionary, Blessing Youth Mission

Price Rs. 60/-

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

*— அர்ப்பணம் —*

திரு. T. மைக்கல் செல்லத்துரை (*1933-2003*)
மற்றும்
திரு. D.P. ஞானதுரை (*1941-2005*)

நாசரேத்தைச் சேர்ந்த இவ்விரு தேவ மனிதர்
என்னை 1962இல் கிறிஸ்துவிடம் நடத்தினார்கள்;
பள்ளியிலும் கல்லூரியிலும்
எனக்கு ஆசிரியர்களாகவும் இருந்தார்கள்.



## *இறையழைப்பு*

"வழிகளில் நின்று,
பூர்வ பாதைகள் எவை என்று கேட்டு
விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து,
அதில் நடந்திடுங்கள்;
அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு
இளைப்பாறுதல் கிடைக்கும்
என்று கர்த்தர் சொல்லுகிறார்!"

*(எரேமியா 6:16)*

*நமது கதறல்*

“கர்த்தாவே,
எங்களை உம்மிடம்
திருப்பிக்கொள்ளும்;
அப்பொழுது திரும்புவோம்;
பூர்வ காலத்தில்
இருந்ததுபோல எங்கள் நாட்களைப்
புதியவையாக்கும்!”

*(புலம்பல் 5:21)*



## உள்ளே ...


1. பூர்வ பாதைகள் ... 7
2. திருமறை எனும் பூர்வ பாதை ... 19
3. ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை ... 37
4. தனித்திருத்தல் எனும் பூர்வ பாதை ... 61
5. எளிமை எனும் பூர்வ பாதை ... 85
6. தியாகம் எனும் பூர்வ பாதை ... 105
7. ஆத்துமாதாயம் எனும் பூர்வ பாதை ... 125

# 1

# பூர்வ பாதைகள்

Old Paths





1

பூர்வ பாதைகள்

Old Paths

தமிழகத்திலுள்ள பல திருச்சபைகள் 1960களில் அசாதாரண மான எழுப்புதல் ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவித்தன. இந்த உயிர்மீட்சி பெரும்பாலும் வாலிபரிடையே தோன்றியது. பல்வேறு நகர்களிலுள்ள இவ்வாலிபர் ஆச்சரியவிதமாய் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு பக்திவிருத்தியடைய ஒருவருக்கொருவர் உதவி னர். இவர்களில் முப்பது பேர் மூன்று நாட்கள் இறைப்பிரசன்னத்தில் காத்திருக்கக் காரைக்குடியில் கூடிவந்தனர். தேவாதீனத்தின்படி இக்கூடுகையை நான் முன்னின்று நடத்தினேன். இவ்வாலிபரில் பலர் தொழில்நுட்பக் கல்வி பயின்றுவந்த கல்லூரி மாணவராவர். ஏதோவொரு திட்டத்திற்காக அல்லது கூட்டத்திற்காக ஜெபிப்பதற் காக அல்ல, இவ்விதக் காலங்களில் அவர்களைக் குறித்தத் திருச் சித்தம் அறிவதற்காகவே அவர்கள் இவ்விதம் கூடிவந்தனர். இது 1970 அக்டோபரில் நடந்தது.

தேவன் தமது அனாதிக் கிருபையின்படி இக்கூடுகையில் விண்ணப்பத்தின் ஆவியைப் பொழிந்தருளினார். மூன்றாம் நாளில் எசேக்கியேல் 34:26இன் வாயிலாக ஒரு தீர்க்கதரிசனச் செய்தியுடன் தேவன் இவர்களைச் சந்தித்தார். ''நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்ற காலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்!'' புதிய ஏற்பாட்டுப் பாணி நற்செய்தியறிவிப்பைப் பிறப்பிக்கும் பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலுடன் தேவன் இவ்வாலிபரை ஆசீர் வதிக்கச் சித்தங்கொண்டுள்ளார் என்பது இதன் மூலம் தெளி வாயிற்று.

தேவன் இவ்வாலிபர் நடுவில் செய்ததும் அவர்களோடு பேசியதுமான காரியங்களை எங்குமுள்ள வாலிபரோடு பகிர்ந்துகொள்வதற்காக 1971 ஜனவரியில் தஞ்சாவூரிலுள்ள எனது மாமனாரின் தோட்டத்தில் ஆசீர்வாத முகாம் (Blessing Retreat) என்ற மூன்றுநாள் முகாம் ஒன்றிற்குத் தமிழகமெங்குமிருந்து ஏறத்தாழ 170 வாலிபரைக் கூட்டினர். பங்குபெற்றோர் மீது பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாய் இறங்கினார். இது வருடாந்திர நிகழ்ச்சியாகி, நூற்றுக்கணக்கான ஜெபக் குழுக்களையும் நற்செய்தியறிவிப்புக் குழுக்களையும் எழுப்ப ஏதுவாயிற்று. ஆவியானவரது இந்த அசைவாட்டமே எழுப்புதலுக்கும் நற்செய்திப்பணிக்கும் அர்ப்பணிக்கப்பட்டுச் சபைப்பிரிவு பாகுபாடற்ற நிலையில் இயங்கிவரும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தைப் (Blessing Youth Mission) பிறப்பித்தது. 1960களிலும் 1970களிலும் இவ்விதம் பல இயக்கங்கள் தோன்றின.

அதே நகராகிய காரைக்குடியில் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் (1970-2010) இந்தியாவெங்குமிருந்து ஏறத்தாழ 750 விசுவாசிகளாக நாம் இன்று கூடிவந்திருக்கிறோம். தேவன் தமது திருவசனத்திலிருந்து பூர்வ பாதைகளைக் கண்டறிய நம்மை ஏவியுள்ளதால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக்கூடுகைக்குப் "பூர்வ பாதைகள் முகாம்" (Old Paths Retreat) எனப் பெயரிட்டுள்ளோம். இக்கூடுகைக்கான கருப்பொருள் வசனம், எரேமியா 6:16, "வழிகளிலே நின்று, **பூர்வ பாதைகள்** எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடந்திடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' ஆதிநிலையேகும் இப்பயிற்சியில் நான்கு படிகள் உள்ளன: (1) நில்லுங்கள் (2) விசாரியுங்கள் (3) கண்டுபிடியுங்கள் (4) அதில் நடந்திடுங்கள். (Stop, Enqurie, Find, Walk!)

தீர்க்கன் எரேமியா மூலம் தேவன் விடுத்த இந்த அழைப்பிற்கு மக்களது பதில் என்ன? ''அவர்களோ, நாங்கள் அதில் நடக்கமாட்டோம் என்கிறார்கள்!'' நாமும் இவ்விதக் காலங்களில்தான் வாழ்கிறோம். நமது விருப்பத்தின்படித்தான் நாம் காரியங்களைச் செய்ய விரும்புகிறோம். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இதுவே



பாவங்களிளெல்லாம் பாவமாம். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன்? ஏசாயா 53:6ஐப் பாருங்கள்: ''நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்தோம்.'' ''வழிதப்பித் திரிதல்'' என்றால் என்ன? தொடர்ந்து இவ்வசனத்தை வாசியுங்கள்: ''அவனவன் தன்தன் வழியிலே போனோம்.'' ''நம்மெல்லாருடைய இந்த அக்கிரமத்தைத் தான்'' சிலுவையில் கிறிஸ்துமீது தேவன் விழப்பண்ணினார்.

நமது கருப்பொருள் வசனமாகிய எரேமியா 6:16க்குத் திரும்ப வந்து அடுத்த வசனத்திலேயே தேவன் எவ்விதம் புலம்புகிறாரென்று பார்ப்போம்: ''நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்திற்குச் செவிகொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ: நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்'' (வச 17). ''தேவனது வார்த்தைகளைவிடத் தங்கள் நினைவுகளையே'' பற்றிக்கொண்டார்கள் (வச 19). தேவனது நியாயப்பிரமாணத்தை வெறுத்தார்கள். அப்படியானால் அவர்கள் மார்க்கபக்தியற்றவர்களானார்கள் என்பது பொருளல்ல. தங்களுக்கு வசதியான மார்க்கத்தைத் தெரிந்துகொண்டார்கள். தங்களது தாராளமான காணிக்கைகள் மூலம் தங்களது கீழ்ப்படியாமையை மறைக்க முயன்றார்கள். ஆனால் தேவனுக்கு லஞ்சம் கொடுக்கமுடியாது. அவரது கடிந்துகொள்ளுதலைக் கவனியுங்கள்: ''சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கமும், தூர தேசத்திலுள்ள சுகந்த பட்டையும் எனக்கு என்னத்துக்கு? உங்கள் சர்வாங்க தகனங்கள் எனக்கு விருப்பமல்ல; உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது'' (வச 20). அவர்களது காணிக்கைகளைவிட அவர்கள் முழுமனதாய்த் திரும்பிவருவதையே தேவன் விரும்பினார். சேபாவின் தூபவர்க்கம் அவருக்குச் சுகந்த வாசனையாயில்லை; தூர தேசத்துச் சுகந்த பட்டையும் அவருக்கு இனிப்பாயில்லை! பிரியமானவர்களே, தேவனது செய்தியைத் தெளிவாய்ப் புரிந்துகொள்வோம். திட்டங்கள், நிகழ்ச்சிகள், செயல்பாடுகள், காணிக்கைகள் போன்ற எதுவும் தேவனது பூர்வ பாதைகளுக்கு நாம் திரும்பிவருவதற்கு மாற்றாகா.

தீர்க்கன் எரேமியாவிடமிருந்து மட்டும்தான் இவ்வித அழைப்பு வந்தது என்று சொல்ல முடியாது. காலாகாலமாய் அநேக தீர்க்கர்களின் அழைப்பும் இதுவே. அவற்றில் சிலவற்றை எடுத்துக்காட்டுகளாய்ப் பார்ப்போம் —

***மோசே*** (உபா 30:2,3), ''உன் தேவனாகிய கர்த்தரிடத்திற்கே **திரும்பி** ... முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவரது சத்தத்திற்குச் செவிகொடுத்தால்.... உன் சிறையிருப்பைத் **திருப்பி** உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்வார்.''

***சாமுவேல்*** (1 சாமு 7:3), ''உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடம் **திரும்புகிறவர்களானால்** ... உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கினால் ... உங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கிவிடுவார்.''

***ஏசாயா*** (ஏசா 31:6; 55:7), ''இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் முற்றிலும் விட்டுவிலகினவரிடம் **திரும்புங்கள்** ... துன்மார்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கர்த்தரிடம் **திரும்பக்கடவன்**; அவர் அவன் மேல் மனதுருகுவார்.''

***ஓசியா*** (ஓசி 12:6; 14:1,2), ''நீ உன் தேவனிடம் **திரும்பு**; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு'' ''இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடம் **திரும்பு** ... வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடம் **திரும்புங்கள்**.''

***யோவேல்*** (யோவேல் 2:12,13), ''இப்பொழுதே உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடம் **திரும்புங்கள்** என்று கர்த்தர் சொல்லு கிறார் ... உங்கள் ஆடைகளையல்ல, இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடம் **திரும்புங்கள்**.''

***ஆமோஸ்*** (ஆமோஸ் 4:6,8,9,10,11), ''நீங்கள் என்னிடம் **திரும்பாது** போனீர்கள் ... என்று கர்த்தர் சொல்லுகிறார் ... என்னிடம் **திரும்பாது** போனீர்கள் ... என்னிடம் **திரும்பாது** போனீர்கள் ... என் னிடம் **திரும்பாது** போனீர்கள் ... என்னிடம் **திரும்பாது** போனீர்கள்!''

***சகரியா*** (சக 1:3), ''சேனைகளின் கர்த்தர் உரைப்பது என்ன வென்றால் ... என்னிடம் **திரும்புங்கள்** ... அப்பொழுது நான் உங்க ளிடம் திரும்புவேன்.''

***மல்கியா*** (மல் 3:7), ''என்னிடம் **திரும்புங்கள்**, அப்பொழுது உங்களிடம் **திரும்புவேன்** என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார்; நாங்கள் எந்தக் காரியத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள்.''



தீர்க்கன் சகரியா மூலம் தேவன் கொடுக்கும் எச்சரிப்பைக் கவனியுங்கள்: ''உங்கள் பிதாக்களைப்போல் இராதீர்கள்; *முந்தின தீர்க்கதரிசிகள்* அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழிகளையும் செயல்களையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள் ... வேதத்தையும் சேனைகளின் கர்த்தர் தமது ஆவியின் மூலம் *முந்தின தீர்க்கதரிசிகளைக்* கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளையும் கேளாதபடித் தங்கள் இருத யத்தை வைரமாக்கினார்கள்'' (சக 1:4; 7:7,12).

''முந்தின தீர்க்கதரிசிகளின்'' வார்த்தைகளைத் தேவன் எவ் வளவாய் உறுதிப்படுத்துகிறார் பாருங்கள்! இன்று ''தீர்க்கதரிசி'' எனும் பதம் பிரபலமானது. தீர்க்கதரிசி என்பவன் பிரதானமாக முன்ன றிவிப்பவன் அல்ல, முகத்திற்கு முகம் தைரியமாய்ப் பேசுகிறவன்! அவனது சொற்கள் கூர்மையாகவும் இருதயங்களைத் துளைக்கிறவை யாகவும் இருக்கும். திருச்சபையை மனந்திரும்ப அறைகூவி அழைப் பதே புதிய ஏற்பாட்டுத் தீர்க்கனின் பிரதான பணி. முந்தின தீர்க்கர் யாவரும் இவ்வித மனந்திரும்புதலின் அழைப்பையே கொடுத்தனர். இறைமக்களும் தலைவர்களும் பின்மாறும்போதும், திருமுழுக்கினன் யோவான் போன்ற ஒரு தீர்க்கதரிசனச் சத்தத்தைத் திடீரென பாலைநிலத்திலிருந்து தேவன் தொனிக்கப்பண்ணுவார் (மல் 3:1; மத் 3:1,2). ஆம், இறைமக்களுக்குத் தேவனது அழைப்பு எப்போ துமே மனந்திரும்பிப் பூர்வ பாதைகளுக்குத் திரும்பவேண்டும் என்பதே.

பூர்வ பாதைகளில் தேவன் பிரியப்படுகிறவர். சில எடுத்துக் காட்டுகளைக் கவனிப்போம். விவாகரத்தைக் குறித்துச் சில மார்க்கத் தலைவர்கள் இயேசுவுடன் விவாதித்துக்கொண்டிருந்தனர். அவர் உடனே விவாகம் குறித்து ஆதியிலிருந்து தேவன் கொண்டிருந்த திட்டத்தைச் சுட்டிக் காட்டினார்: மத் 19:4-6, ''ஆதியிலே மனிதரை உண்டாக்கியவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும் ... இருவரும் ஒரே உடலாயிருப்பார்கள் என்று சொன்ன தையும் நீங்கள் வாசிக்கவில்லையா? ஆகையால் தேவன் இணைத்

ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.'' அவர்களோ இன்னும் விடாமல் இயேசுவிடம் கேட்டது: ''அப்படியானால் தள்ளுதல் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளை யிட்டார்'' என்றனர் (வச 7). இக்கேள்விக்கு இயேசு கொடுத்த பதில் நம்மைப் பூர்வ பாதைகளைச் சிந்திக்க வைக்கிறது: ''உங்கள் மனை விகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தின் பொருட்டு மோசே உங்களுக்கு இடம் (அனுமதி) கொடுத்தார்; **ஆதி முதல்** அப்படி இருக்கவில்லை'' (வச 8). இங்குதான் தேவனது ''பரி பூரணச்'' சித்தத்திற்கும் அவரது ''அனுமதிச்'' சித்தத்திற்கும் வேறு பாடு உள்ளது. (Perfect will vs. Permissive will). விவாகரத்து என்பது தேவனது ''அனுமதிச்'' சித்தம் மட்டுமே; அதுவும் மக்களது இருதயக் கடினத்தினாலேயே. பிரியக்கூடாது என்பதே தேவனது ''பரிபூரணச்'' சித்தமாம். பிரியமானவரே, உங்கள் வாழ்வில் ஒருபோதும் தேவனது அனுமதிச் சித்தத்தில் தங்கிவிடாது, எப்பொழுதும் அவரது பரி பூரணச் சித்தத்தையே நாடுங்கள்.

இன்னுமோர் எடுத்துக்காட்டைக் கவனிப்போம். இது பெற்றோ ருக்குப் பிள்ளைகளின் கடமை என்பதையடுத்தது. பொருளாதார ரீதியிலும் மற்றெல்லா வகையிலும் பெற்றோரைப் பிள்ளைகள் பரா மரித்துத் தாங்கவேண்டும். ஆனால் தேவனது இப்பரிபூரணச் சித்தத் திற்கு முரண்பாடான திட்டம் ஒன்றை இயேசுவின் காலத்து மார்க்கத் தலைவர்கள் அமுலாக்கினர். ''ஒருவன் தனது தந்தையையாவது, தாயையாவது பார்த்து: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் எனும் காணிக்கையாகக் கொடுக் கிறேன் என்று சொல்லிவிட்டால் அவனது கடமை தீர்ந்தது'' என்பதே அவர்கள் வகுத்த நூதனத் திட்டம் (மாற் 7:11). இந்தப் பணத்தை அந்த மகன் ஒருவேளை தனது வியாபாரத்தில் முதலீடு செய்து, அதில் ஒரு பகுதியை ஆச்சாரியனுக்கும் கொடுத்திருப்பான். இது மாபெரும் வஞ்சகம்; இவ்வித அவபக்தியான செயல்பாடுகளை இயேசு வெகுவாய்க் கண்டித்து, பெற்றோரைப் பிள்ளைகள் கனப் படுத்தவேண்டுமென்ற தேவனது திட்டத்தையே சுட்டிக்காட்டினார் (வச 10). தங்களது பாரம்பரியங்களைத் தேவ வார்த்தைகளுக்குப்



பதிலாக்கின அவர்களது தந்திரத்தை இயேசு கடிந்துகொண்டார் (வச 13). பிரியமானவரே, தேவனது ஆதித் திட்டங்களுக்கு மாற்றாகக் கண்டுபிடிக்கப்படுபவைகளைக் குறித்துக் கவனமாயிருங்கள்.

இன்றைய நிலையும் இதுவே. ஏறத்தாழ எல்லாச் சபைப்பிரிவு களுமே ஏதோவொரு வகையில் மனிதரது பாரம்பரியங்களை இறை வார்த்தைக்கு மாற்றாக்கியுள்ளன. ''அப்போஸ்தல'' உபதேசத்திற்குத் திரும்பிவருவதே நமது இன்றையப் பொறுப்பு. ஆதிச்சீடரின் நாற்பரிமாண வளர்ச்சியில் முதலாவது வருவது ''அப்போஸ்தலரின் உபதேசமே'' (அப் 2:42) அடுத்த மூன்று பரிமாணங்களாகிய ஐக்கியம், அப்பம் பிட்குதல், ஜெபம் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தி முதலாவதையோ ஓரங்கட்டிவிட்டோம். ''அப்போஸ்தலர் உபதேசம்'' எனும் சொற்களே பல கிறிஸ்தவர்களுக்கு ஒரு புதிர்தான்! ஆனால் அன்றையச் சபைகளுக்கு ஆதி அப்போஸ்தலர் அவ்வப் போது தங்களது உபதேசங்களை நினைவுபடுத்தினர்: ''சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலோ நிருபத்தினாலோ நாங் கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்'' (2 தெச 2:15; 3:6). நமது உபதேசங்களும் செயல்பாடுகளும் அப் போஸ்தலர் கற்பித்தவையாக இருக்கவேண்டும். ஏன்? கிறிஸ்துவை மூலைக்குத் தலைக்கல்லாகக் கொண்டு, ''அப்போஸ்தலர் தீர்க்கதரிசி கள் என்பவர்களின் அடித்தளத்தின்'' மீதுதான் திருச்சபை கட்டப் பட்டுவருகிறது (எபே 2:20).

திருமறையிலேயே யோபுவின் புத்தகம்தான் மிகப் பழைமை யானது எனலாம். இப்புத்தகத்திலிருந்து வரும் தெளிவானதோர் அழைப்பைப் பாருங்கள்: 8:8-10, ''நீர் முந்தின தலைமுறையாரிடம் விசாரித்து, அவர்களது முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்து பாரும். நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்; பூவுலகில் நமது நாட்கள் நிழல் போலிருக்கின்றன. அவர்கள் உமக்கு உபதே சித்து, உமக்குத் தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங் களை வெளிப்படுத்துவார்கள் அல்லவோ?'' இதுவே மகிமையான முடிவுக்கு வழிநடத்தும் இரகசியம். நமது அனுபவம் குறைவு; நமக்கு

வெளிப்படுத்தப்பட்டதும் குறைவு; நமது முன்னோர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி நமது பழைய வேதாகமத்தின் பரிசுத்தப் பக்கங்களைத் திருப்புவோம்.

விசுவாசிக்கிற யாவருக்கும் ஆபிரகாமே தந்தை. தேவனிட மிருந்து இதோ குறிப்பானதொரு அழைப்பு: ஏசா 51:1,2, ''நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்; நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட குழியையும் நோக்கிப் பாருங்கள். உங்கள் தகப்பனா கிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள். அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்.'' உங்கள் கோத்திரப் பிதாவாகிய ஆபிரகாமையும் கோத்திர மாதாவாகிய சாரா ளையும் நோக்கிப் பாருங்கள்! அப்போஸ்தலன் பவுல் தனது நிருபங் களில் அடிக்கடி ஆபிரகாமை மேற்கோள் காட்டுகிறார். இதை ரோமர் 4ஆம் அத்தியாயத்தில் வாசித்துப் பாருங்கள். அப்படியே சாராளை அப்போஸ்தலன் பேதுரு மேற்கோள் காட்டுகிறார் (1 பேது 3:5,6). நாம் பொதுவாக ''ஆபிரகாமின் பிள்ளைகள்'' என்றழைக்கப்படு வோம்; ஆனால் இங்கு விசுவாசிகளான பெண்களைச் ''சாராளின் குமாரத்திகள்'' என்று பேதுரு அழைக்கிறார்! இதில் குறிப்பு என்ன வெனில், திருமறையில் நாம் சந்திக்கும் முற்பிதாக்களிடமிருந்து நாம் ''பூர்வ பாதைகளைத்'' தெரிந்துகொள்ளவேண்டும் என்பதே.

''எலியாவின் தேவன் எங்கே?'' என்று தீர்க்கன் எலிசா கேட்ட கேள்வியையே நாம் அடிக்கடி எழுப்புகிறோம். தேவனது அதிசய வல்லமை வெளிப்படவேண்டும் என்றே எலிசா இக்கேள்வி கேட்டார். நமது கருப்பொருளோ ''பூர்வ பாதைகளுக்குத் திரும்புதல்'' என்பதாகும். எனவே, ''ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவன் எங்கே?'' என்பதே நமது கேள்வியாயிருக்கவேண்டும். இது யேகோவா தேவனது அடிப்படைப் பெயர்களில் ஒன்றாகும். இது அவரது அற்புதங்களையல்ல, அவரது உடன்படிக்கைகளை அடுத் தது. நமது கருப்பொருளைத் தெளிவாக்கும் பகுதியாகிய யாத்தி



ராகமம் 3:13-16ஐப் பாருங்கள்: ''மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் மக்களிடம் போய், உங்கள் **பிதாக்களுடைய** தேவன் உங்களிடம் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும் போது, அவரது பெயர் என்ன என்று அவர்கள் என்னிடம் கேட்டால், அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றார். அதற்குத் தேவன்: **இருக்கிறவராக இருக்கிறேன்** என்று மோசேயிடம் சொல்லி, இருக் கிறேன் என்பவர் உங்களிடம் என்னை அனுப்பினர் என்று சொல்லு என்றார். மேலும் தேவன் மோசேயைப் பார்த்து: ஆபிரகாமின் தேவ னும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் **பிதாக்களின்** தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லு; **என்றென்றைக்கும்** இதுவே எனது பெயர், தலைமுறை தலைமுறையாக இதுவே எனது நினைவுச் சின்னம்.''

தமது போதனைகளில் இக்குறிப்பை மேற்கோள் காட்டுவதில் இயேசு பிரியமாயிருந்தார். இறந்தோர் உயிர்த்தெழுவர் என வாதாடும் போது, ''ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன்'' என்று பிதாவாகிய தேவனை அவர் அழைத்தார் (லூக் 20:37). அத்துடன் அவர் சொன்னது: ''அவர் இறந்தோரின் தேவனா யிராமல் உயிருள்ளோரின் தேவனாயிருக்கிறார்'' (வச 38). அதாவது, இந்த முற்பிதாக்கள் இறந்துவிட்டாலும் உயிருள்ளோருக்கு அவர் களிடமிருந்து செய்தி உண்டு என்பதே இங்கு பொருள். அதற்குப் பின்னர் அவரிடம் எவரும் கேள்வி கேட்கத் துணியவில்லை எனு மளவுக்கு இவ்விவாதம் பலமாயிருந்தது (வச 40). மோசேயின் பாடலிலும் இது மையக் கருத்தாயிருந்தது (உபா 32:1-43). வசனம் 7ஐப் பாருங்கள்: ''**பூர்வ நாட்களை** நினை; **தலைமுறை தலை முறையாய்ச்** சென்ற ஆண்டுகளைக் கவனித்துப்பார்; உன் **தகப் பனைக்** கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் **மூப்பர்களைக்** கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்.''

அப்படியானால் நமக்கு ஒரு கேள்வி எழலாம்: ''**முந்தியவை களை** நினைக்க வேண்டாம்; **பூர்வமானவைகளைச்** சிந்திக்க வேண்டாம். இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.'' என்று

ஆண்டவர் சொல்லியதின் பொருளென்ன (ஏசா 43:18,19)? ‘‘பாலை நிலம், பாழ்வெளி’’ என்று சுட்டிக்காட்டப்படும் இஸ்ரவேலரின் சீரழிந்த நிலையிலிருந்து மீளுதல் என்பதையே இது குறிக்கும் (வச 19,20). இங்கு ‘‘முந்தியவை’’ எனப்படுவது ‘‘நெடுங்காலம் பாழாய்க் கிடந்து பூர்வத்தில் இடிந்து அழிந்து கிடந்தவற்றையே’’ குறிக்கும் (ஏசா 61:4).

2 கொரிந்தியர் 5:17ஐக் குறித்தும் இதுபோன்றதொரு கேள்வி எழலாம். ‘‘ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுப்படைப்பாயிருக்கிறான்; பழையவை ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.’’ ‘‘மனுவுடலில்’’ இயேசு மற்றும் ‘‘உயிர்த்தெழுதலின் மகிமையில்’’ இயேசு என்ற இரண்டிற்குமுள்ள வேறுபாடுதான் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 16ஆம் வசனம் பாருங்கள்: ‘‘நாங்கள் கிறிஸ்துவை மனித முறைப்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மனித முறைப்படி அறியோம்.’’ ‘‘இப்படியிருக்க’’ என்ற சொல் 17ஆம் வசனத்தை 16ஆம் வசனத்துடன் இணைக்கிறது. அதனதன் சூழமைவிலேயே எந்த வசனமும் வியாக்கியானிக்கப்பட்டால்தான் அது சரியாக விளங்கும். 2 கொரிந்தியர் 5:17இன் ‘‘புதியன’’ என்பது பழைய உடன்படிக்கையானது அழிந்துபோய் புதிய உடன்படிக்கைக்கு வழியுண்டாக்கியதையும் நமக்குப் போதிக்கிறது (எபி 8:13). எனவே பிரியமானவர்களே, ‘‘பூர்வ பாதைகள்’’ என்பதைக் குறிப்பிடும் நமது கருப்பொருள் வசனமாகிய எரேமியா 6:16ஐ ஏசாயா 43:18,19; 2 கொரிந்தியர் 5:17 போன்றவற்றோடு குழப்பிக்கொள்ளாதிருங்கள்.

மனந்திரும்பிப் பூர்வ பாதைகளுக்குத் திரும்பிவரும்படித் தேவன் தமது மக்களுக்கு அழைப்பு விடுத்தபோதெல்லாம் பெரும்பான்மையினரின் பதில் எதிர்மறையாகவே இருந்தது. ஒரு சிறு கூட்டமே தேவனது செய்திக்குச் சாதகமாய் அடிபணியும். அச்சிறுபான்மையினரைத்தான் நாம் ‘‘மீதியானோர்’’ (remnant) என்றழைக்கிறோம். இச்சிறுபான்மையினர் எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும் அவர்கள் முக்கியமானவர்கள். இந்த மீதியானோர்தான் எதிர்காலத்தை நிர்ணயிப்பர். எடுத்துக்காட்டாக, ஏசாயா 1:9ஐப் பாருங்கள்: ‘‘சேனைகளின் கர்த்தர் நமக்குக் கொஞ்சம் **மீதியை** வைக்காதிருந்தாரானால், நாம் சோதோமைப்போல் ஆகி, கொமோராவுக்கு ஒப்பாயிருந்திருப்போம்.’’ தேவனுக்குத் தமது மக்களோடுள்ள ஈடுபாட்டின் சரித்திரத்தில் இந்த மீதியானோரே இணைப்பாயிருக்கின்றனர். ஒவ்வொரு தலைமுறையிலும் இவ்விதம் மீதியானோர் என்று ஒரு கூட்டம் இருக்கும் என்பதே நமக்கு உற்சாகம்: ரோமர் 11:5, ‘‘**இக்காலத்திலேயும்** கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது.’’ நாம் ஏற்கனவே பார்த்தபடி மீதியான இவர்கள் ‘‘கொஞ்சம்’’ என்றே இருப்பர் (ஏசா 1:9). அவர்கள் ‘‘குச்சி’’ போலவும், ‘‘குடிசை’’ போலவுமே இருப்பர் (வச 8). ஆனால் மீதியாயிருக்கும் இச்சிறு கூட்டத்தின் மூலமாகவே தேவன் ஆதிகாலத்துக் கனிநிறைவைக் கொண்டுவருவார்: ஏசாயா 37:31,32, ‘‘மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள் … சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும்.’’ மீந்திருப்போர் எனும் இச்சிறுபான்மையினரோடு நாம் சேர்ந்துகொள்வோமா? அப்படியானால், தீர்க்கன் எரேமியாவுடன் சேர்ந்து இவ்விதம் ஜெபிப்போம்: ‘‘கர்த்தாவே, எங்களை உம்மிடம் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது **திரும்புவோம்; பூர்வ காலத்தில்** இருந்ததுபோல எங்கள் நாட்களைப் **புதியவைகளாக்கும்’’** (புல 5:21).

இந்தப் பின்னணியுடன் நமது கருப்பொருளைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் அடுத்துள்ள அத்தியாயங்களில் தியானிப்போம் —

1. திருமறை எனும் பூர்வ பாதை (Scripture)
2. ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை (Spirit)
3. தனித்திருத்தல் எனும் பூர்வ பாதை (Solitude)
4. எளிமை எனும் பூர்வ பாதை (Simplicity)
5. தியாகம் எனும் பூர்வ பாதை (Sacrifice)
6. ஆத்துமாதாயம் எனும் பூர்வ பாதை (Soulwinning)

**௨**

# திருமறை எனும் பூர்வ பாதை

Old Path of the Scripture





**௨**

# திருமறை எனும் பூர்வ பாதை

Old Path of the Scripture

‘‘பூர்வ பாதைகளைக்’’ கண்டறிவது எப்படி? பைபிள் எனும் திருமறைக்குத் திரும்புவதே ஒரே வழி. அதுவே இயேசு கையாண்ட முறை. தாம் எவ்விதம் மக்களால் புறக்கணிக்கப்பட்டுத் தள்ளப் படுவார் என்பதைச் சீடர்களிடம் முன்னறிவித்துக்கொண்டிருக்கை யில், ‘‘வீடு கட்டுகிறவர்கள் ஆகாது என்று தள்ளின கல்லே மூலைக் குத் தலைக்கல் ஆயிற்று என்று எழுதியிருக்கிற வாக்கியத்தை நீங்கள் **வாசிக்கவில்லையா?’’** என்று வினவினார் (மாற் 12:10,11). உயிர்த் தெழுதலைக் குறித்த ஒரு விவாதம் எழுந்தபோது, ‘‘தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருப்பதை நீங்கள் **வாசிக்கவில்லையா?’’** என்று அவர்களிடம் கேட்டார் (மத் 22:31). இந்த முறையையே அப்போஸ்தலரும் பின்பற்றினர். கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கு முன்னு தாரணமாக ஆபிரகாமைச் சுட்டிக்காட்டியபோது, ரோம் நகர் விசு வாசிகளிடம் அப்போஸ்தலன் பவுல் கேட்டது: **‘‘வேத வாக்கியம்** என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது’’ (ரோ 4:3). பவுல் வேறொரு இடத்தில் கேட்பது: ‘‘எலியாவைக் குறித்துச் சொல்லிய இடத்தில், **வேதம்** சொல்லுகிறதை அறியீர்களா?’’ (ரோ 11:2). அடிமையானவளின் மகனுக்கும் சுயாதீனமுள்ளவளின் மக னுக்குமுள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும்போதும் பவுலும் இதே கேள்வியைக் கேட்கிறார்: ‘‘அதைக் குறித்து **வேதம்** என்ன சொல்லு கிறது?’’ (கலா 4:30). ஆம், பூர்வ பாதைகளைக் கண்டறிய முதன்மை யான தகவல் தருவது திருமறையே.

தேவனது வசனமே தேவனது வழி. தனது நீண்ட விடுதலைப் பாடலில் தாவீது சொன்னது: ‘‘தேவனது **வழி** உத்தமமானது;

கர்த்தரது **வசனம்** புடமிடப்பட்டது'' (2 சாமு 22:31). தேவனுடைய வார்த்தையை ''ஆதிமுதலான தீர்ப்புகள்'' என்றும், ''நெடுநாளாய் அறிந்திருக்கும் சாட்சிகள்'' என்றும் சங்கீதக்காரன் அழைக்கிறார் (சங் 119:52,152). எனவேதான் பிரதானமாய்க் கூவியறிவிக்கப்பட வேண்டிய செய்தியை ஏசாயா 40:6-8 இவ்விதம் முன்வைக்கிறது: ''கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மனுவுடல் எல்லாம் புல்லைப் போலவும், அதின் மேன்மை எல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து, பூ உதிரும். மக்களே புல். புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய **வசனமோ** என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது.'' இவ்வசனப் பகுதியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்த அப்போஸ்தலன் பேதுரு இதனைத் தனது நிருபத்தில் மேற்கோள் காட்டுகிறார் (1 பேது 1:24,25). தேவனது ஆதித் திட்டங்களை மக்களுக்கு அறிவிக்க முற்படும்போது அவர்கள் எதிர்த்து முன்வைக்கும் அவர்களது கோட்பாடுகளால் நாம் மனம் தளர்ந்துவிடுகிறோம். கவலை வேண்டாம்; மனிதன் எவனும் புல் தான்! அவனது படிப்பு, சாதனை, உடைமை யாவும் புல்லின் பூதான் — ரோஜாப்பூ என்றுகூட சொல்லமுடியாது! திருமறை எனும் பூர்வ பாதைக்குத் தைரியமாய்த் திரும்பி வாருங்கள்!

திருவசனத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய இடத்திற்கு அதைக் கொண்டுவராவிடில் குழப்பமும் குருட்டுத்தனமும்தான் நிலவும். ஆச்சாரியனாகிய ஏலியின் சரிதையில் இது ஒரு சித்திரமாய் விளங்குகிறது: 1 சாமுவேல் 3:1-3, ''சாமுவேல் எனும் சிறுவன் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குத் திருப்பணி செய்துகொண்டிருந்தான்; அந்நாட்களில் கர்த்தரது **வசனம்** அபூர்வமாயிருந்து; வெளிப்படையான **தரிசனம்** இருந்ததில்லை ... பார்க்கக்கூடாதபடி ஏலியின் **கண்கள்** இருளடைந்திருந்தன ... ஆலயத்தில் தேவனது **விளக்கும்** அணைந்துகொண்டிருந்தது.'' இழக்கப்பட்டிருந்த தேவ மகிமை திரும்பக் கொண்டுவரப்பட்டது திருவசனத்தின் மூலமாகவே: ''கர்த்தர் மறுபடியும் சீலோவிலே **தரிசனம்** தந்தருளினார்; கர்த்தர் சீலோவிலே தமது **வார்த்தையினாலே**_சாமுவேலுக்குத் தம்மை



வெளிப்படுத்தினார்'' (வச 21). தேவன் மீதியாய் வைத்திருப்பவர்களைச் சாமுவேல் குறிப்பிடுகிறார். அவருக்குத் தேவனது வெளிப்பாடு அவரது ''வார்த்தை'' மூலமே வந்தது! நவீனப் பிரசங்கிமாரும் தங்களைத் தாங்களே தீர்க்கதரிசிகளாக்கிக்கொண்டவர்களும் தேவனிடமிருந்து எவ்வளவோ வெளிப்பாடு பெறுவதாகக் கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால் அவையெல்லாம் இறைவார்த்தைக்கு ஒத்திராவிடில் அவற்றை ஏற்றுக்கொள்ள நாம் கடன்பட்டவர்களல்ல ''ஒருவன் போதித்தால் தேவனது வாக்கியங்களின்படி போதிக்கட்டும்'' (1 பேது 4:11). வரங்கள் பெற்றிருந்த கொரிந்திய விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் கொடுத்த அறிவுரை: ''ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசி என்றாவது, ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு **எழுதுபவை** கர்த்தரது **கட்டளைகள்** என்று அவன் ஏற்றுக்கொள்ளட்டும்'' (1 கொரி 14:37).

நாம் செய்யும் யாவற்றிலும் திருவசனத்திற்கே முதலிடம் தரப்படவேண்டும் என்பதை மன்னன் யோசியாவின் ஆட்சி சித்தரிக்கிறது. எட்டு வயதாயிருக்கும்போதே அவர் சிம்மாசனம் ஏறினார். கற்பனை செய்யமுடியாதது! முப்பத்தொரு ஆண்டுகள் எருசலேமில் அரசாண்டார். அவரைக் குறித்த சாட்சி இதோ: ''அவர் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தார்'' (2 இரா 22:2). தேவனது வீட்டைச் சுத்தம் செய்வதே அவர் மேற்கொண்ட முதற்பணிகளில் ஒன்று. பரவசமானதொரு காரியம் நிகழந்தது. கர்த்தரின் ஆலயத்தில் நியாயப்பிரமாணப் புத்தகத்தைப் பிரதான ஆசாரியன் ''கண்டுபிடித்தான்'' (வச 8). தேவனது புத்தகம் தேவனது வீட்டிலேயே ''காணாமற்போனதை'' உங்களால் கற்பனை செய்யமுடிகிறதா? நமது இன்றையச் சபைகள் பலவற்றின் நிலையும் இது தானே? வேத வசனத்திலிருந்து தேவனது வழிகளைக் கற்றுக் கொள்ள முயலாது ஏதோ நமது நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டேயிருக்கிறோம். சாப்பான் என்ற வேதபாரகன் கர்த்தரது புத்தகத்தை மன்னன் யோசியாவுக்கு வாசித்துக் காட்டியபோது, அவர்கள் தேவனது வார்த்தையை வாசிக்கவும் கைக்கொள்ளவும் இல்லையே என்ற ஆழ்ந்த துக்கத்தினால் மன்னன் தனது ''ஆடைகளைக் கிழித்தார்''

(வச 11). ‘‘நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியும் செய்ய நமது பிதாக்கள் இப்புத்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாத படியினால், நம்மீது பற்றியெரிந்த கர்த்தரது கோபம் பெரியது’’ என்று அவர் அறிக்கையிட்டார் (வச 13). பின்பு அவர், ‘‘இந்த உடன்படிக் கையின் **புத்தகத்தில் எழுதியிருக்கிறபடியே** உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்கா கொண்டாடுங்கள்’’ என்று அனைவருக்கும் கட்டளையிட்டார் (23:21). ‘‘இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியா யாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேலின் ராஜாக்கள் யூதா வின் ராஜாக்கள் ஆகிய அவர்களது அனைத்து நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா கொண்டாடப்படவில்லை’’ என்று எழுதப்பட்டிருக்கிறது (வச 22). ஆம், பிரியமானவர்களே, திருமறை எனும் பூர்வ பாதைக்கு நாம் திரும்பிவிட்டால் என்னெல்லாம் நடக்கும் என்று கற்பனை செய்தும் பார்க்கமுடியாது!

நமது சபைகளிலும் சங்கங்களிலும் எவ்வளவுதான் நிகழ்ச்சி களும் கூட்டங்களும் நடந்துகொண்டிருந்தாலும் கொடூரமான திரு வசனப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. இதைத்தான் குறிப்பாய்த் தீர்க்கன் ஆமோஸ் முன்னறிவித்தார்: ‘‘இதோ, நான் நாட்டின்மீது பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண் டாகும் பஞ்சமல்ல, தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் உண்டாகும் தாக முமல்ல, கர்த்தரது **வசனம்** கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்பு வேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய **வசனத்தைத்** தேட ஒரு கடல் தொடங்கி மறு கடல் வரை, வடதிசை தொடங்கிக் கீழ்த்திசை வரை, அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமல் போவார்கள். அந்நாளிலே அழ குள்ள கன்னியரும் வாலிபரும் தாகத்தினால் சோர்ந்துபோவார்கள்’’ (ஆமோஸ் 8:11-13). நாம் இருப்பது இந்த நாட்களில்தானே? கூட்டம் கூட்டம் என்று மக்கள் அலைந்து திரியவில்லையா? பொரு ளாதார நன்மைகளைத்தானே மக்கள் நாடியலைகிறார்கள்? வாலிப ருக்குக் கிடைப்பது பரவசம்தான், பக்திவிருத்தியல்ல. ஆண்டவரே, இத்தலைமுறையினர்மீது இரக்கமாயிரும்! எந்த ஊழியத்தைப் பார்த்தாலும் ‘‘மக்களுக்கு விடுதலை கொண்டுவருகிறோம்’’ என்



கின்றனர்; ஆனால் திடமான வேத போதனை எங்கே? 2 நாளாகமம் 15:3,4இல் சொல்லப்பட்டுள்ளதுதான் திரும்ப நடக்கிறது: ‘‘இஸ்ர வேலில் அநேக நாட்களாய் மெய்யான தேவனும் இல்லை; உபதே சிக்கிற ஆச்சாரியனும் இல்லை, வேதமும் இல்லை. தங்கள் நெருக் கத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடம் திரும்பி, அவரைத் தேடியபோதோ, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார்.’’ இன்றும் எல் லாமே உடனடி விளைவுகளுக்கும் குறுகியகால நன்மைகளுக்குமே!

நாட்டளவிலும் உலகளவிலும் திருச்சபையானது திருமறை எனும் பூர்வ பாதைக்குத் திரும்பிவரவேண்டுமானால், திருமறை யைத் தவறாது கிரமமாய்த் தியானிக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னை அர்ப்பணிக்கவேண்டும். இதற்கு மூன்று முக்கிய வழிமுறை களை முன்வைக்கிறேன். இவை அடிப்படையானவை, அதே வேளையில் அடித்தளமானவை.

### 1. பைபிளை ஆர்வத்துடன் நிறைய வாசியுங்கள்.

அட்டை முதல் அட்டை வரை பைபிளைத் திரும்பத் திரும்ப எந்த வரிசையில் வேண்டுமானாலும் வாசியுங்கள். புரிகிறதோ புரியவில்லையோ, எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாசியுங்கள். முதல் தடவை வாசிக்கும்போது புரியாதது அடுத்த முறை வாசிக்கும் போது புரியலாம். புல்லின்மீது இறங்கும் பனித்துளிபோல் தேவனது வார்த்தையாகத் திருமறை எப்பொழுதும் புத்துணர்வளிக்கும் (உபா 32:1,2). ஒவ்வொரு முறை ஒரு வேதப்பகுதியை வாசிக்கும்போதும் தேவனிடமிருந்து ஒரு புதிய செய்தி பெறுவீர்கள். தேவனது வார்த்தையை வாசிக்கும்போது அவரது சத்தம் கேட்பீர்கள். தமது வார்த்தைகள் ‘‘ஆவியாகவும் உயிராகவும்’’ இருக்கின்றன என்றார் இயேசு (யோ 6:63). பள்ளிப் படிப்பிற்கு ஒரு வகை, கல்லூரிப் படிப் பிற்கு அடுத்த வகை என்று பல்வேறு நிலைகளுக்குப் பல பாடப் புத்தகங்கள் உண்டு. இளநிலைப்பட்டப் படிப்பிற்கான பாட நூல்கள் வேறு, தொடக்கப்பள்ளிப் படிப்பிற்கான பாட நூல்கள் வேறு; ஆனால் பைபிளைப் பொருத்தவரை, நீங்கள் இப்பொழுதுதான் கிறிஸ்துவிடம் வந்திருந்தாலும், பல்லாண்டுகள் அவரோடு நடைபோட்டிருந்தாலும்,

எல்லா நிலைகளுக்கும் அது ஒன்றேதான். நமக்கு வயதாகிவிடலாம்; பைபிளுக்கோ வயதாகிவிடுவதில்லை! எனவேதான் அது ''ஜீவனுள்ள தேவ வசனம்'' எனப்படுகிறது (1 பேது 1:23-25).

தமது மக்களின் சீர்திருத்தத்திற்காய் எஸ்றாவையும் நெகேமியாவையும் தேவன் பயன்படுத்தினார். இச்சீர்திருத்தவாதிகளின் வெற்றி நிறைந்த பணியின் இரகசியம் அவர்கள் திருவசனத்திற்கு முதன்மைத்துவம் அளித்ததே. அதைக் குறித்து வேதம் கூறுவதைக் கவனியுங்கள்: ''முதலாம் நாள் தொடங்கிக் கடைசி நாள் வரை, தினந்தோறும், தேவனது நியாயப்பிரமாணப் புத்தகம் வாசிக்கப்பட்டது'' (நெகே 8:18). இதைப் பைபிள் மாரத்தான் (Bible Marathon) என்றழைப்பேன். விசுவாசிகளாகிய உங்களில் சிலர் இவ்வித மாரத்தான் ஒழுங்குபண்ணலாமே. அதின் பயன் விவரிக்கமுடியாததாயிருக்கும். இவ்விதப் பயிற்சியின் மூலம் உங்கள் ஆவியில் அசாதாரணமான புத்துயிர் பெறுவீர்கள்.

யோசுவாவின் காலத்திலும் இவ்விதமானதொரு காரியம் நடந்தது. ஆயி எனும் நகர்மீது வெற்றி கண்ட பின்னர், ''மோசே எழுதியிருந்த நியாயப்பிரமாணத்தை அவர் அங்கே கற்களில் ஒரு நகலாய் எழுதினார்'' (யோசு 8:32). பின்பு அவர் எல்லா இஸ்ரவேலரையும், மூப்பர்கள், அதிபதிகள் நியாயாதிபதிகள், மற்றும் அந்நியர்கள் யாவரையும் கூட்டிச் சேர்த்தார். ''அதற்குப் பின்பு அவர் நியாயப்பிரமாணப் புத்தகத்தில் ஆசீர்வாதமும் சாபமுமாகிய **எல்லா** வார்த்தைகளையும் வாசித்தார் ... முழுச்சபைக்கும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், அந்நியர்களுக்கும் ஒரு வார்த்தையும் **விடாமல்** வாசித்தார்'' (வச 34,35). இதனை உடன்படிக்கையின் புதுப்பிப்பு என்றழைக்கலாம். யோசுவா ''எல்லா'' வார்த்தைகளையும் ''ஒன்றையும் விடாது'' வாசித்தார் என்பதே இங்கு அழுத்திக் கூறப்பட்டுள்ளது! ''எல்லாருக்கும்'' வாசிக்கப்பட்டது; பிள்ளைகளும் விடப்படவில்லை. இன்னொரு காரியம், நியாயப்பிரமாணத்திலுள்ள ''ஆசீர்வாதங்களை'' மட்டுமல்ல, ''சாபங்களையும்'' யோசுவா வாசித்தார். இங்குதான் நம்மில் அநேகர் தவறுகிறோம். நிபந்தனைகளையும் சாபங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு வாக்குகளை மட்டும் எடுத்துக்கொள்ளுகிறோம்.



பைபிளில் இரு பகுதிகள் உண்டு: வாக்குகள், எச்சரிப்புகள். கீழ்ப்படிவோருக்கு ஆசீர்வாதங்கள், கீழ்ப்படியாதோருக்குச் சாபங்கள். பிரியமானவர்களே, பைபிளை வாசிக்கும்போது பிரியமான பகுதிகளை மட்டும் எடுத்துக்கொள்ளும் பழக்கத்தைக் கைவிடுங்கள்.

முழு வேதத்தையும் வாசித்தாலன்றி நாம் முழு வளர்ச்சி அடையமுடியாது. தீமோத்தேயுவுக்கு எழுதும்போது பவுல் இதனை வலியுறுத்தினார்: 2 தீமோ 3:16,17, ''வேத வாக்கியங்கள் **எல்லாம்** தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன; தேவ மனிதன் தேறினவனாகவும், **எந்த** நற்செயலும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி அவை ... பயனுள்ளவையாயிருக்கின்றன'' ''சிறுவயதிலிருந்து'' (childhood) முழு ''மனிதனாகும்'' (manhood) வளர்ச்சிக்குத் திருவசனத்தின் அத்தியாவசியத்தைப் பவுல் இங்கு சுட்டிக் காட்டுகிறார் (வச 15,16). ''இரட்சிப்பு'' (Salvation) என்று துவங்கி ''நற்செயலாற்றத் தகுதி'' (Service) என்பது வரை அதனைக் கொண்டு வருகிறார். தேவையற்றது என்று எதுவும் பைபிளில் கிடையாது. வம்ச வரலாறு போன்ற பகுதிகள் போரடிக்கலாம். ஆனால் திருமறையானது சரித்திரப்பூர்வமானது என்பதை நமக்கு நினைப்பூட்டுவது இவைதான். பைபிளின் எந்தப் பகுதியையும் ஒதுக்குவது நமக்குத்தான் பாதகம். இரு ஏற்பாடுகளும் தேவன் நம்மோடு பேசும் அவரது இரு உதடுகளாம்!

திருவிவிலியத்தைத் திரும்பத் திரும்ப வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டுவரவேண்டுமானால் ஒரு வேத வாசிப்பு அட்டவணை (Bible Reading Calendar) உங்களுக்குக் கைகொடுக்கும். இந்த அட்டவணைகள் பல்வேறு வாசிப்புத் திட்டங்களைத் தருகின்றன. ஒரே ஆண்டில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை வாசித்து முடிப்பதற்கான ஒரு திட்டம் உண்டு. அன்றாடக வேதப் பகுதிகள் காலை மாலை என்று இத்திட்டத்தில் பிரிக்கப்பட்டிருந்தாலும், இவ்வளவு வாசிப்பது சிலருக்குக் கடினமாயுள்ளது. வேதம் முழுவதையும் ஈராண்டுக் காலத்தில் வாசித்து முடிக்கும் திட்டம் அடங்கிய அட்டவணை ஒன்று நான் வெளியிட்டுள்ளேன். அன்றன்றுள்ள பகுதிகளிலிருந்து மனனம் செய்வதற்கான வசனங்களையும் வரிசைப்படுத்தி

யுள்ளேன். இத்திட்டத்தைப் பின்பற்றினால் நீங்கள் ஆண்டொன்றுக்கு 100 வசனங்களை மனனம் செய்யலாம். ஒவ்வொரு முறை ஒராண்டு அல்லது ஈராண்டுத் திட்டத்தை முடித்து அடுத்த ஆண்டிற்குள் நுழைகையில் வேறொரு மொழியாக்கத்தைத் (Version) தெரிந்துகொள்ளலாம். எந்த மொழியாக்கமும் பூரணமானது அல்ல; எனவே இவ்வித மாற்றங்களினால் திருமறைச் செய்தியில் உங்களுக்குக் கூடுதல் தெளிவு கிடைக்கும். ஓரிரு முறை நீங்கள் கால வரிசை வேதாகமங்களையும் (Chronological Bibles) பயன்படுத்தலாம். இவ்வகை வேதாகமங்களில் வேதத்தின் புத்தகங்களும் பகுதிகளும் கால வரிசையில் எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

பக்தன் ஜார்ஜ் முல்லர் (1805-1898) அவர்கள் ஒரு விசுவாச வீரராய் இருந்தார். ஆயிரக்கணக்கான அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் பணியைத் தேவன் அவருக்குத் தந்திருந்தார். இதற்காய்ப் பிரம்மாண்டமான கட்டிடங்கள் கட்டினார்; விரிவான திட்டங்களை மேற்கொண்டார். ஆனால் மக்களிடமிருந்து அவர் ஒருபோதும் பணவுதவி கேட்கவில்லை எனப்படுகிறது. தனது தேவைகளைத் தேவனுக்கு மட்டும் சொல்லி அவர்மீது நம்பிக்கையாயிருந்தார். இம்மனிதனின் விசுவாசத்தைத் தேவன் எவ்வளவாய்க் கனம்பண்ணி அவரது ஜெபங்களுக்குப் பதில் கொடுத்தார் என்பதை அவரது சரிதைப் புத்தகங்களை வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். அவரது விசுவாசத்தின் இரகசியம் என்ன என்று ஒருமுறை கேட்கப்பட்டபோது அவரது உடனடிப் பதில்: ''திருமறையை இதுவரை நாற்பத்தெட்டு தடவை முழங்காலில் நின்று வாசித்திருக்கிறேன்!'' ஆம், விசுவாசம் தேவனது வசனத்தைத் திரும்பத் திரும்பக் கேட்பதாலும் வாசிப்பதாலுமே வருகிறது, வளருகிறது (ரோ 10:17).

திருமறையை அமைதியாகவும் சத்தமாகவும் வாசியுங்கள். எனது கல்லூரி நாட்களில் காடுகளுக்குள் சென்று பைபிளைச் சத்தமாய் வாசிப்பேன். நான் வளர்ந்த நாசரேத்திலுள்ள ஆலய ஆராதனைகளில் முதல் பாடம், இரண்டாம் பாடம் என்று திருவசனப் பகுதிகள் கம்பீரமாய் வாசிக்கப்படுவதை வியப்புடன் கவனித்திருக்கிறேன். இது



தானே இயேசுவின் பழக்கமாகவும் இருந்தது (லூக் 4:16)? அவர் வாசித்த தோரணை ஜெபாலயத்தில் கூடிவந்திருந்தோரின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை அவர் வாசித்து முடித்து உட்கார்ந்தவுடன், ''ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவரையே உற்று நோக்கியிருந்தன'' என்று வாசிக்கிறோம் (வச 20). ''ஆவிக்குரிய'' சபைகள் எனப்படும் பலவற்றில் வேத பாடங்கள் வாசிக்கப்படும் இவ்விதப் பரிசுத்தப் பழக்கம் மறைந்துபோயிற்று. பாரம்பரியங்கள் எல்லாவற்றையும் மொத்தமாகத் தவறு என்று சொல்லிவிடமுடியாது. பிள்ளையைக் குளிப்பாட்டிய தண்ணீரை வெளியே கொட்டும்போது பிள்ளையையும் சேர்த்து எறிந்துவிடக்கூடாது! கூடுகைகளில் சத்தமாய்த் திருவசனம் வாசிக்க நமது வாலிபர் நங்கையர் பழக்குவிக்கப்படவேண்டும். வாசிக்கும்போது எங்கு நிறுத்தம், எங்கு அழுத்தம் தேவை என்பதெல்லாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படவேண்டும். ''வாசிக்கிறதில் கவனமாயிரு'' என்று அப்போஸ்தலன் பவுல் இளைஞன் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினார் (1 தீமோ 4:13). இது கூடுகைகளில் திருவசனம் வாசிக்கப்படுவதையே குறிக்கும். பூர்வ பாதைகளுக்குத் திரும்புவோம்!

பழைய, புதிய ஏற்பாடுகளில் அடங்கியுள்ளவைகளால் நிறையப்பட்டிருக்கும் ஒரு கருவூலமாய் உங்கள் இருதயம் இருக்கவேண்டும். இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: மத்தேயு 13:52, ''விண்ணரசுக்கு அடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் எடுத்துக் கொடுக்கிற இல்லத் தலைவனாகிய மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான்.'' தங்கள் பிள்ளைகளின் இருதயங்களுக்குள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு திருவசனங்களைப் புகுத்திவைக்கப் பெற்றோருக்கு அறிவுறுத்துகிறேன். தனது மகன் இயேசுவுக்கு அன்னை மரியாள் அப்படிச் செய்ததாலேயே, அவர் பன்னிரண்டு வயதிலேயே திருமறை மேதைகளுடன் உட்கார்ந்து வேதாகமச் சத்தியங்களைப்பற்றிக் கலந்துரையாட முடிந்தது. இதைக் குறித்து லூக்கா எழுதியுள்ளது: ''அவர் பேசக் கேட்ட யாவரும் அவரது

புத்தியையும் அவர் கொடுத்த பதில்களையும் குறித்து மலைத்துப் போயினர்'' (லூக் 2:46,47). எனக்கும் என் தம்பிக்கும் எங்கள் தாயார் இவ்விதமே செய்தார்கள். ஓர் இளைஞனாய் என்னைப் பயிற்றுவித்த போது, தேவன் ஒரு நாள் என்னை ஒரு வேதப் போதகனாய் மாற்ற விருக்கிறார் என்பதை என் தாயார் அறிந்திருப்பார்களோ? அவர்களை வாழ்த்த நான் உயிர்த்தெழுதலின் காலையை எதிர்நோக்கியிருக் கிறேன்.

கைபேசிகளில் (mobilephones) திருமறையைப் பதிவு செய்து வைத்திருப்பதைப்பற்றி என்ன சொல்லலாம்? சில குறிப்பிட்ட சமயங்களுக்காய் அது உதவியாயிருக்கலாம், ஆனால் அது ஒரு போதும் அச்சடிக்கப்பட்ட வேதப் புத்தகத்திற்கு மாற்றாக முடியாது. நன்கு கவனமாய் அடிக்கோடிடப்பட்ட வேதாகமம் பெரும் சொத்து. பக்கங்களின் ஒரங்களில் நாம் எழுதும் சிறு சிறு குறிப்புகள் மற்றும் தேவன் நம்மோடு பேசிய நாட்குறிப்புகள் ஆகியவை நமது வேதப் புத்தகத்தை நமது ஆன்மீகப் பயணக் கையேடாக (Spiritual Journal) ஆக்கிவிடும். எண்களை மனதிலிருத்த முடியாதவர்கள் எந்த வசனம் எந்த இடத்தில் இருக்கிறதென்பதை நினைவில் வைத்து எளிதாகக் குறிப்புகளுக்குத் திருப்பிவிடலாம். கைபேசிகளிலேயே வேதத்தை வாசித்துக்கொண்டிருந்தால் திடீரென்று வரும் குறுந்தகவல்கள் (SMS) நமது கவனத்தைச் சிதறடித்து எண்ணங்களைச் சிதறடிக்கும். இதோ, சங்கீதக்காரனின் சாட்சி: ''நான் வீண் சிந்தனைகளை வெறுத்து உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்'' (சங் 119:113). நான் இங்கு சொல் வது கற்காலம் போல் தோன்றலாம்; ஆனால் இவையெல்லாம் காலத்தால் அழிக்க முடியாத உண்மைகள்.

## 2. அவசரப்படாமல் திருமறையைத் தியானியுங்கள்.

தேவனது வசனத்தைத் தியானிக்கத் தரமான நேரம் எடுத்துக் கொள்ளமுடியாத அளவு இன்றையச் சமுதாயத்திற்கு அலுவல் பெருகிவிட்டது. திருமறைத் தியானம் தவிர்த்து மற்ற யாவற்றிற்கும் நமக்கு நேரமுண்டு. சராசரிக் கிறிஸ்தவர்கள் நாளொன்றுக்குப் பதினைந்து நிமிடங்கள்கூட வேதத்தோடு செலவிடுவதில்லை.



அப்படியே வேதம் வாசிக்க நேரம் எடுத்துக்கொண்டாலும், அதைத் தியானிப்பது அரிதாகிவிட்டது. வேதத் தியானம் என்பது கிட்டத்தட்ட மறைந்த கலையாயிற்று. பிலிப்பியர் 4:8இல் வரிசைப்படுத்தப் பட்டுள்ள எட்டு பரிசோதனைகளிலும் தேறுவது இறைவார்த்தை யாகிய பைபிள் மட்டுமே. அது ''உண்மையுள்ளது, கண்ணியமானது, நேர்மையுள்ளது, தூய்மையானது, விரும்பத்தக்கது, பாராட்டுதற்குரி யது, நற்பண்புடையது, போற்றுதற்குரியது!'' இந்த வேதாகமத்தைத் தியானிப்பதே நமது மனதிலும் இதயத்திலும் ''தேவ சமாதானம்'' அருளும்; ''சமாதானத்தின் தேவனை'' நமக்குள் தாராளமாய்க் குடி கொள்ளச் செய்யும் (வச 7,9). இங்கும் சங்கீதக்காரன் கூறும் சாட்சி: ''உமது வேதத்தில் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! அது நாள் முழு வதும் எனது தியானம்'' (சங் 119:97).

சராசரிக் கிறிஸ்தவர்கள் போதுமான நேரத்தைத் திருமறைத் தியானத்தில் செலவழிக்காததற்கு ஒரு காரணம் எப்படித் தியா னிப்பது என்று தெரியாததே. ஜெபம் மற்றும் திருமறைத் தியானத் தின் அடிப்படை வழிமுறைகளைப் போதிப்பதற்கு அநேக சபைகள் சீடத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதில்லை. புராதனச் சபைகளி லும் புதிய சபைகளிலும் இதுதான் நிலைமை. தங்கள் சபையாருக்கு இவையெல்லாம் தெரியும் என்று ஆயர்கள் நினைத்துவிடுகிறார்கள். எனவேதான் பல கிறிஸ்தவர்களது அன்றாடகக் கடமைகளில் ''தேவ னோடு தனித்திருக்கும் அமைதி வேளை'' (Quiet time) என்று எதுவும் கிடையாது.

திருமறைத் தியானத்தைப்பற்றிப் போதிப்பது இந்நூலின் நோக்க மல்ல; ஆனாலும் சுருக்கமாக சில நடைமுறை ஆலோசனைகள் தருகிறேன். வேதத் தியானத்திற்கென்று நேரம் குறியுங்கள். நன்கு தூங்கியெழுந்தபின் மனது தெளிவாயிருக்கும் அதிகாலை நேரமே சாலச் சிறந்தது. சுவிசேஷங்களில் துவங்கிப் பின்னர் நடபடிகளுக்கும் நிருபங்களுக்கும் செல்லுங்கள். ஒரே அத்தியாயத்தைப் பலமுறை வாசியுங்கள். அந்தப் பகுதியைக் குறித்துக் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள் —

- ☐ நான் விட்டுவிடவேண்டிய *பாவம்* எதுவும் இப்பகுதியில் கண்டிக்கப்பட்டுள்ளதா?
- ☐ நான் கவனிக்கவேண்டிய *எச்சரிப்பு* எதுவும் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதா?
- ☐ நான் தழுவிக்கொள்ளவேண்டிய *திருவாக்கு* எதுவும் இப் பகுதியில் உரைக்கப்பட்டுள்ளதா?
- ☐ நான் பின்பற்றவேண்டிய *முன்மாதிரி* எதுவும் இப்பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா?
- ☐ நான் மனதிற்கொள்ளவேண்டிய *வழிநடத்துதல்* எதுவும் இப்பகுதியில் தரப்பட்டுள்ளதா?
- ☐ நான் நிறைவேற்றவேண்டிய *கடமை* எதுவும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதா?
- ☐ நான் ஆயத்தப்படவேண்டிய *எதிர்கால நிகழ்வு* எதுவும் இப்பகுதியில் முன்னறிவிக்கப்பட்டுள்ளதா?

இவ்விதக் கேள்விகளுக்கான பதில்களை ஒரு குறிப்பேட்டில் எழுதி வைப்பது நல்லதொரு பழக்கமாயிருக்கும். இதைத்தான் எரேமியாவிடம் தேவன் சொன்னார்: எரே 30:2, ''நான் உன்னோடு சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புத்தகத்தில் எழுதிக்கொள்.'' இவ்விதத் தியானக் குறிப்புகளை நாம் உடனுக்குடன் எழுதிவைக்காவிடில் அவை சாத்தானால் பறித்துக்கொள்ளப்படும் (மத் 13:4,19). தங்களது காலத்தின் தலைசிறந்த வேதப் போதகனது பிரசங்கங்களைக் கேட்டபின்னரும் வீட்டுப்பாடம் படித்த பெரோயரைப் போலிருங்கள் (அப் 17:10,11). எனது தனித்தியானக் குறிப்பேடுகளிலிருந்துதான் பெருவாரியான எனது பிரசங்கக் குறிப்புகள் உருப்பெற்றன. இப்படியிருப்பதால் எனது பிரசங்கங்களைக் கேட்போரிடம், ''நான் கர்த்தரிடம் பெற்றுக்கொண்டதை உங்களுக்கு அறிவிக்கிறேன்'' என்று என்னால் தைரியமாய்ச் சொல்லமுடிகிறது (1 கொரி 11:23;15:3).



இந்நாட்களில் நமக்கிருக்கும் ஏராளமான ஆராய்ச்சி வேதாகமங்களுக்காய் (Study Bibles) ஆண்டவரைத் துதிப்போம். பழங்கால ஆராய்ச்சி வேதாகமங்களில் தலைசிறந்தவை, C.I. ஸ்கோபீல்டு (1843-1921), F.C. தாம்சன் (1858-1940) மற்றும் F.J. டேக் (1902-1987) ஆகியோர் தயாரித்தவை ஆகும். நவீன கால ஆராய்ச்சி வேதாகமங்களில் *ESV Study Bible, NKJV Study Bible* மற்றும் *NIV Study Bible* போன்றவை நம்பகமானவை. இந்த ஆராய்ச்சி வேதாகமங்களிலுள்ள ஒத்து வசனக் குறிப்புகளும் சுருக்கமான விளக்கவுரைகளும் உங்களது வேத ஆராய்ச்சியை மேம்படுத்தும். ஆனாலும், தனித்தியானத்தின்போது ஆராய்ச்சி உதவிகள் இல்லாத வேதாகமத்தையும், ஆராய்ந்து படிக்கும்போது ஆராய்ச்சி வேதாகமங்களையும் பயன்படுத்துவது நன்று. திருவசனப் பகுதிகள்மீது தேவனிடமிருந்து வரும் நேரடி வெளிப்பாடுகள் மற்றும் தூயாவியானவரின் அகத்தூண்டுதல்கள் ஆகியவற்றிற்குச் சில சமயங்களில் ஆராய்ச்சி வேதாகமக் குறிப்புகள் தடையாய் அமையலாம். வசனங்களை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவதே வேதத் தியானத்தின் பிரதான நோக்கமாயிருக்கவேண்டும்.

திருமறையில் தனித்தியானம் என்பது நமக்கு ''அன்றன்றுள்ள அப்பம்'' போன்றது. ஏதோ தவிர்க்கமுடியாத காரணம் இருந்தாலன்றி தேவனோடு செலவழிக்கவேண்டிய தனித்தியான வேளையை விட்டுவிடாதிருங்கள். வனாந்திரத்தில் இஸ்ரவேலர் ''மன்னாவை'' அனுதினமும் சேகரித்தார்கள் (யாத் 16:4). அனுதினத் தியானம் நமக்கு அனுதின நடத்துதல், அனுதின வலிமை மற்றும் அனுதினக் கிருபை அருளும் (புல 3:22-25). தேவ ஊழியர் தயாரித்துள்ள பல்வேறு தினசரித் தியான நூல்களும் உண்டு. இவற்றைத் தாராளமாய்ப் பயன்படுத்தலாம்; ஆனால் நேரடியான தனித்தியானத்திற்கு இவை மாற்றாக முடியாது. வயல்வெளியில் அங்குமிங்குமிருந்து ரூத் பொறுக்கிய தானிய அளவைவிடப் போவாசிடமிருந்து நேரடியாய்ப் பெற்றது ஆறுமடங்காகும் (ரூத் 2:17;3:15)! காலைத் தியானத்தை மதிய உணவுக்கான இடைவேளையின்போது நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். காலையில் தேவன் தந்த வாக்குகள், நடத்துதல்கள்,

எச்சரிப்புகள் போன்றவற்றின் மூலம் அந்த நாள் முழுவதிலும் தேவன் உங்களை எவ்விதம் நடத்தினாரென்று இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் நினைவுபடுத்திப்பாருங்கள். கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!

### 3. வசனங்களை ஆர்வமுடன் மனனம்செய்யுங்கள்.

வேத வசன நாட்காட்டிகள் மற்றும் *பாலியர் நேசன்* போன்ற சிறுவர் பத்திரிகைகளில் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைத் தினம் ஒன்று என்று பெற்றோரின் வற்புறுத்துதலால் எனது இளம்பிராயத்தில் மனனம் செய்தேன். மனனம் செய்யும் இவ்விதப் பழக்கங்கள் இப்போது மறைந்து வருகின்றன. கணினிமயமாகிவிட்ட இக்காலத்தில் மனனம் செய்யும் நமது திறன் பயன்படுத்தப்படாது கிடக்கிறது. நமது இருதயத்திலும் மனதிலும் சேர்த்துவைக்கவேண்டியவை கணினியில்தான் பதிவாகின்றன.

இறைமக்களுக்கு மோசே கொடுத்த கட்டளையை நினைவுபடுத்துவோம்: உபா 11:18-20, ''நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மீது அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கும்போதும், படுத்துக்கொள்ளும்போதும், எழுந்திருக்கும்போதும் அவைகளைக் குறித்துப் பேசுங்கள்.'' எவ்வளவு தெளிவும் திட்டமுமான வழிமுறை! எனது சொந்தவூராகிய நாசரேத்திலுள்ள முதிர்ந்த தேவமனிதரில் ஒருவராகிய Dr. டேனியல் சுந்தரராஜ் (1919- ) அவர்களது இல்லத்தில் பலமுறை தங்கியிருக்கிறோம். பழைய நாட்காட்டிகளிலிருந்து வசனங்களைச் சிறுசிறு துண்டுத்தாள்களாக வெட்டி ஒரு கிண்ணத்தில் சாப்பாட்டு மேசையில் வைத்திருப்பார்கள். காலைச் சிற்றுண்டிக்காய் உட்காரும்போது அத்துண்டுகளிலிருந்து ஒரு சில வசனங்களை எடுத்து வாசிக்கவேண்டும். ''மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்வான்'' என்ற சத்தியத்தை இப்பழக்கம் எவ்வளவாய் நினைவூட்டுகிறது (மத் 4:4; உபா 8:3)!



வசனங்களை மனனம் செய்யச் செய்ய உங்களது ஆனந்தம் பெருகும். இதுதான் சங்கீதக்காரனின் அனுபவம்: சங் 19:10, கர்த்தருடைய கற்பனையும் அவரது நியாயங்களும் ''தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதாய்'' இருக்கின்றன. இன்னொரு இடத்தில் அவர் வியந்து கூறுவது: ''உமது வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவை; என் வாய்க்கு அவை தேனிலும் மதுரமாயிருக்கும்'' (சங் 119:103). அவர் தேவனிடம் உண்மையாய் அறிக்கையிட்டுச் சொன்னது: ''எந்நேரமும் உமது நீதிநெறிகளை முன்னிட்டு என் உள்ளம் ஏங்கி உருகுகின்றது'' (வச 20). இதுதான் நமது அனுபவமா? பைபிளுக்கு நாம் அடிமைகளாவோம்! (Let's become Bible-addicts!)

வசனங்களை மனனம் செய்வதால் உண்டாகும் பயன்கள் ஏராளம். சோதனை வேளையில் சத்துருவை மேற்கொள்ள உதவுவது அதின் உடனடிப் பயன்களில் ஒன்று. இதோ, சங்கீதக்காரனின் சாட்சி: ''நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்துவைத்தேன்'' (சங் 119:11). இது இயேசுவானவர் வனாந்தரத்தில் சந்தித்த சோதனைகளின்போது வெளிப்படையாகிறது. தமது ஞாபகத்திலிருந்து பொருத்தமான வசனத்தை ஒவ்வொரு சோதனைக்கு எதிராகவும் மேற்கோள் காட்டினார். ''எழுதப்பட்டிருக்கிறதே'' என்பதற்கு எதிராகப் பேசுவதற்குப் பிசாசிடம் ஒன்றுமில்லை (மத் 4:4,7,10). உபாகமத்திலிருந்து இயேசுவானவர் மேற்கோள் காட்டிய ஒவ்வொரு வசனமும் பிசாசுக்கு அடிமேல் விழுந்த அடியாய் இருந்தது (உபா 8:3; 6:16; 6:13; 10:20). எதிர்பாராத வேளையில் பிசாசு உங்களைத் தாக்கும்போது பைபிளில் நீங்கள் வசனங்களைத் தேடிக்கொண்டிருக்கமுடியாது. உங்கள் இருதயத்திலிருக்கும் தேவனது வார்த்தையே ஆவியானவரது பட்டயமாகும் (எபே 6:17). இந்த இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆன்மீகப் போர்க்கலன்களில் ''தாக்கும்'' ஆயுதம் திருவசனமாகிய பட்டயம் மட்டுமே.

நாமெல்லாரும் மனத்தொய்வு அடையும் வேளைகளுண்டு. இவ்வித வேளைகளில் வழக்கம்போல் திருவசனத்தைத் தியானிப்

பதே அரிதாகிவிடுகிறது. நமது ஞாபகத்தில் பல வசனங்களைச் சேகரித்து வைத்திருந்தால், பரிசுத்த ஆவியானவர் பொருத்தமான வசனங்களை நமக்கு ''நினைப்பூட்டுவார்'' (யோ 14:26). சங்கீதக்கார னின் சாட்சியைக் கேளுங்கள்: ''உமது வேதம் எனது மனமகிழ்ச்சி யாய் இராதிருந்தால் என் துக்கத்திலே அமிழ்ந்துபோயிருப்பேன் ... நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின'' (சங் 119:92,54). வேதம் வாசிக்கமுடியாத அளவு வியாதிப்படும்போது, அல்லது முதிர்வயதினால் கண் பார்வையும் காது கேட்கும் திறனும் குறையும்போது, சென்ற ஆண்டுகளிலெல் லாம் நாம் மனனம் செய்திருந்த வசனங்கள் நமக்குக் கைகொடுக்கும். கொடிய காலங்களுக்காய் யோசேப்பைபோல் நாமும் தானியங்களைச் சேகரித்து வைப்போம்!

நல்லது கெட்டது என்பதற்கிடையில் அல்ல, நல்லது சிறந்தது என்பதற்கிடையே தெரிந்தெடுப்பு என்பது கடினமானவைகளில் ஒன்று! (Not between good and bad, but between good and better!) பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலே இறைமக்களது சிலாக்கியங் களில் உன்னதமானது (ரோ 8:14). நம்மை வழிநடத்த ஆவியானவர் பிரதானமாய்க் கையாளுவது திருவசனமே. ஏனெனில் அவர்தான் திருமறையின் ஆக்கியோன் (2 பேது 1:20,21). ஞாபகத்திலிருக்கும் வசனங்கள் இங்கு பேருதவியாயிருக்கும். தாவீதின் அனுபவம் இதுவே: சங் 40:8, ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் எனது **உள்ளத்திற்குள்** இருக்கிறது.'' பொதுவாய்ச் சொன்னால், திருவசனமே திருச்சித்தம். எனவே, வசனங்களை மனனம் செய்வது ஏட்டுச் சுரைக்காய் அல்ல என்ற முடிவுக்கு வருகிறோம்.

## பூர்வ பாதைகளும் திருமறையும்

நாம் திரும்பி வந்து சேரவேண்டிய ''பூர்வ பாதைகளில்'' முதலா வதானது திருமறைதான் என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. ஓரேபிலிருந்து காதேஸ்பர்னேயா வரையுள்ள பாலைவனத்தைப் பதினொரு நாட்களிலேயே கடந்துவிடலாம் (உபா 1:2)! ஆனால்



வாக்குப்பண்ணப்பட்ட நாட்டைச் சுதந்தரிக்க இஸ்ரவேலரைத் தேவன் நாற்பது ஆண்டுகள் பயணம்பண்ணச் செய்தார். ''மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு **வார்த்தையினாலும்** பிழைப்பான்'' எனும் அதிமுக்கியச் சத்தியத்தைப் போதிப்பதற்காகவே தேவன் அப்படிச் செய்தார் (உபா 8:2,3). உன்னதமாய் ஆராதிப்பதற்கு ஒரே வழி திருவசனமே. குறிப் பிடத்தகும் இவ்வசனத்தைப் பாருங்கள்: சங் 56:10, ''தேவனை முன் னிட்டு அவரது **வார்த்தையைப்** புகழுவேன்; கர்த்தரை முன்னிட்டு அவரது **வார்த்தையைப்** புகழுவேன்.'' அப்படியே தாவீது தேவனிடம் சொன்னது: ''உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையின் பொருட்டும் உமது உண்மையின் பொருட்டும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகலப் புகழையும்விட உமது **வார்த்தையை** நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்'' (சங் 138:2).

''நீங்கள் ஏன் அந்தச் சபைக்குப் போகிறீர்கள்'' என்று விசுவாசி களைக் கேட்டால், ''அங்கு ஆராதனை வேளை நன்றாயிருக்கிறது'' என்பர். நல்லது! ஆனால் பேதுருவையும் மற்ற சீடரையும் இயேசு வோடிருக்கும்படிப் பிடித்து வைத்திருந்தது **திருவசனமே** (யோ 6:66, 68,69). ஆராதனை வேளை முக்கியம்தான்; ஆனால் இந்நாட்களில் பல இடங்களில் அது வெறும் பரவசமாகிவிடுகிறது. திருவசனம் உத்தமமாய்ப் பிரசங்கிக்கப்பட்டாலோ அது எப்பொழுதும் பக்தி விருத்தி உண்டாக்கும். பயபக்தியான தொழுகை, திடமான வேத போதனை ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்தும் சபையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

திருமறை எனும் பூர்வ பாதைக்குத் திரும்புவோம்!

# 3

# ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை

Old Path of the Spirit





3

ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை

Old Path of the Spirit

நமது கருப்பொருள் வசனமாகிய எரேமியா 6:16இல் மறுபடியும் தொடங்குவோம்: ''வழிகளில் நின்று, **பூர்வ பாதைகள்** எவை என்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடந்திடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.'' நாம் ஏறெடுக்கவேண்டிய விண்ணப்பம்: ''கர்த்தாவே, எங்களை உம்மிடம் திருப்பிக்கொள்ளும்; அப்பொழுது திரும்புவோம்; **பூர்வ காலத்தில்** இருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவையாக்கும்'' (புல 5:21).

முந்திய அத்தியாயத்தில் ''திருமறை எனும் பூர்வ பாதை'' குறித்துச் சிந்தித்தோம். ''ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதையை'' இவ்வத்தியாயத்தில் தியானிப்போம். இவையிரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை; ஏனெனில் திருமறையின் ஆக்கியோனே ஆவியானவர்தானே? 2 பேது 1:20,21, ''**வேதத்திலுள்ள** எந்தத் தீர்க்கதரிசனமும் எவரது சொந்த விளக்கத்திற்கும் உட்பட்டது அல்ல என்று நீங்கள் முதலில் அறியவேண்டும். தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய விருப்பத்தினால் உண்டாகவில்லை; தேவனது பரிசுத்த மனிதர் **பரிசுத்த ஆவியினால்** ஆட்கொள்ளப்பட்டுப் பேசினார்கள்.'' நாம் பூர்வ பாதைகளுக்குத் திரும்ப வேண்டுமானால், எல்லாவற்றிற்கும் திருமறையைத்தான் திறந்துபார்க்க வேண்டும்; எல்லாவற்றிற்கும் ஆவியானவரையே சார்ந்திருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர்மீது நாம் சார்ந்திருக்கவேண்டுமென்று நம்மை அழைக்கும் வேதப் பகுதிகளில் பிரதானமானதொன்று

யூதர்களுக்கு ஆளுநராயிருந்த செருபாபேலுக்கு ஆண்டவர் சொன்ன வார்த்தைகளே: சக 4:6, ''செருபாபேலுக்குச் சொல்லப்படும் கர்த்தரது வார்த்தை என்னவென்றால்: ஆற்றலினாலும் அல்ல, வலிமையினாலும் அல்ல, எனது ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' இந்தச் சத்தியம் செருபாபேலுக்குச் சொல்லப்பட்டது ஏன்? அவர் பின்வாங்கியிருந்தாரோ? சேனைகளின் கர்த்தரை விட்டு அவன் அஷ்டரோத் அல்லது பாகாலுக்குப் பின்னால் போய்விட்டாரோ? இல்லை! அதற்கான காரணம் 8ஆம் 9ஆம் வசனங்களில் தரப்பட்டுள்ளது: ''செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு **அடித்தளம்** போட்டன; அவன் கைகளே இதை **முடிக்கும்**.'' இங்கு வலியுறுத்தப்படுவது என்னவென்றால், தூயாவியால் துவங்கியதை நாம் மனிதனின் ஆற்றலால் முடிக்க முயலக்கூடாது என்பதே. கலாத்தியச் சபையினரின் தவறுதல் இதுவே (கலா 3:3). நமது வாழ்க்கையையும் பணியையும் ஆவியானவரின் வல்லமையில் துவங்கி, நாளாவட்டத்தில் நமது திறமைகள் மற்றும் வசதிகள்மீது சார்ந்திருக்க வழிவிலகுவது மதியீனத்திலும் மதியீனம் என்பதையே பவுல் இங்கு வலியுறுத்துகிறார்.

புத்திக் கூர்மை, நிறுவனக் கட்டமைப்பு, பொருளாதாரச் செழிப்பு, உடல் பலம், மக்கள் ஆதரவு போன்றவற்றையே சபைகளும் சங்கங்களும் தங்களை அறியாமலே ஆவியானவரின் வல்லமைக்கு மாற்றுக்களாக்கிவிடுகின்றன. துவக்கக் காலங்களில் தீர்மானங்கள் எடுக்குமுன்னர் தேவனுக்குமுன் முழங்காலிட்டு அவரது மனதை அறிந்துகொள்ள விழைகிறோம். நாளாவட்டத்தில் அதிகமதிகமாய் நிர்வாகக்குழுக் கூடுகைகளையே சார்ந்து மேலிருந்து வரும் நடத்துதலைவிட விவாதங்களையே பெரிதாக எண்ணுகிறோம். ஜெபக் கூடுகைகளைவிடத் திட்டமிடுவதற்கான கூடுகைகளே அதிகரிக்கின்றன. ஆரம்ப காலத்தில் நமக்குக் கட்டிடங்களோ அதுபோன்ற வசதிகளோ கிடையாது. காலப்போக்கில் கட்டிடங்களும் சாதனங்களுமே நமக்குப் பக்கபலமாகவும் அந்தஸ்தின் அடையாளங்களாக வும் மாறிவிடுகின்றன. ஒரு காலத்தில் நமது தேவைகள் எல்லாவற்றையும் தேவனிடம் ஜெபத்தில் சொல்லிவந்தோம். இப்பொழுதோ தேவைகளை மக்கள்முன் சமர்ப்பித்து, வணிகப் பாணிகளில் பணம் திரட்ட முயலுகிறோம். இந்தப் போக்கு நீடிக்குமானால் நாமும் லவோதிக்கேயரது நிலைக்கு வந்துவிடுவோம். நமது ஆன்மீகத் தரித்திரத்தைப் பார்க்க முடியாதபடி நமது கண்களைச் செல்வப் பெருக்கும் வசதிகளின் நிறைவும் குருடாக்கும் (வெளி 3:17). நமது கட்டமைப்புகளில் கிறிஸ்துவுக்கு இடமேயில்லை எனுமளவிற்கு நாம் சுயதிருப்தியடைந்து விடுகிறோம். அவரோ நம்மை விட்டுவிடாதபடி வாசற்கதவைத் தட்டி நிற்கிறார் (வச 20). முதல் நூற்றாண்டுச் சபை ஒன்றிற்கே இந்நிலை வரக்கூடுமானால், இன்று என்னதான் நடக்காது? தலையாகிய கிறிஸ்து இல்லாமலேயே நமது நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் நடத்திக்கொண்டிருப்பதுதான் இங்கு பரிதாபம்!



நமது பல சபைகளும் ஊழியச் சங்கங்களும் அன்றைய சிம்சோன் போலிருக்கின்றன என்பது பெரும் துக்கம். அவனைவிட்டுக் கர்த்தர் விலகியதை அவன் ''அறியாதிருந்தான்'' (நியா 16:20). நாமும் அவனைப்போலவே நம்மை நாமே ''உலுக்கிக்''கொள்ளுகிறோம்! இன்று நமது சபைகளை விட்டுப் பரிசுத்த ஆவியானவர் எடுத்துக் கொள்ளப்படுவாரானால், நாம் செய்து கொண்டிருப்பவைகளில் எதுதான் நின்றுவிடும்? ஆடல் பாடல் இல்லாதுபோகுமோ? பிரசங்கம் நின்றுபோகுமோ? அப்பம் பிட்குதல் ஒழிந்துபோகுமோ? இல்லை, எல்லாமே வழக்கம்போல் நடந்துகொண்டேயிருக்கும். ஆவியானவர் போய்விட்டார் என்று நமக்குத் தெரியவே தெரியாது! சிம்சோனைப் போல நம்மை நாமே உலுக்கிக்கொண்டுதானிருப்போம்! சபையில் ஓர் உறுப்பினர் குலுங்கத் துவங்கியதும் தொற்று நோய்போல் எல்லாரும் குலுங்குவர்! உடனே நாம், ''ஆவியானவர் வல்லமையாய் அசைவாடுகிறார்'' என்று இன்னும் குதிப்போம். இவ்விதம் நம்மீதே சார்ந்திருப்பதிலிருந்து மனந்திரும்பி ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதைக்குத் திரும்புவோம். பரிசுத்த ஆவியானவர்மீது எப்பகுதிகளிலெல்லாம் சார்ந்திருக்கவேண்டுமென்று பார்ப்போம் —

## 1. பரிசுத்த ஆவியானவரும் மறுபிறப்பும்

யோவான் 3:6-8இல் ஆண்டவராகிய இயேசு மறுபிறப்பை அழகாய் வரையறுக்கிறார். நிக்கொதேமு எனும் யூதத் தலைவன்

ஒருவரோடு ஓர் இரவில் உரையாடியபோது மறுபிறப்பில் ஆவியானவரின் செயல்பாட்டைக் கர்த்தர் விளக்குகிறார்: ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்; ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு விருப்பமான இடத்தில் வீசுகிறது; அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆனாலும் அது எங்கிருந்து வருகிறதென்றும் எங்கு போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான்.'' தெய்வீக வல்லமை வெளிப்படுவதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. மறுபிறப்பையோ தனிப்பட்டவரது இரட்சிப்பையோ இரண்டு மூன்று படிகளில் கிடைத்துவிடும் என்று சாரமற்றதாக்கிவிடாதீர்கள். இவ்விதப் படிகள் அவசியம்தான். ஆனால் வாய்ப்பாட்டின்படி விடை கிடைத்துவிடுவதுபோல் மறுபிறப்படைவது உத்திரவாதமல்ல. அது ஆவியானவராகிய தேவனது செயல். அது ஓர் அற்புதம்!

பிரசங்கி 11:5இலும் மறுபிறப்பிலுள்ள விந்தை குறிப்பிடப்பட்டுள்ளது: ''ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பிணியின் கர்ப்பத்தில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருப்பது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனது செயல்களையும் நீ அறியாய்.'' மக்களது மனந்திரும்புதலிலும் குணப்படுதலிலும் ஆச்சரியமானதை எதிர்பார்த்து அதனைத் தழுவிக்கொள்வோம். இறையியல் தத்துவம் எதுவும் இதற்கு முழு விளக்கம் தர முடியாது. ''நீங்கள் எதையும் விளக்க முடிந்தால் அது அற்புதம் அல்ல; தேவன் அதில் செயல்படவில்லை'' என்றார் ஒருவர்! அநேகர் இரட்சிக்கப்படவேண்டும் என்ற நமது ஆர்வக் கோளாறினால் நாம் மக்களை அதற்குள் பிடித்துத் தள்ளக்கூடாது. காலத்திற்குமுன் சிசுவைப் பிறக்கவைக்க முயலக்கூடாது!

மக்கள்மீது இரட்சிப்பின் அனுபவத்தை நாம் திணித்தால், ஈசாக்குகளை அல்ல இஸ்மவேல்களையே பெற்றெடுப்போம். ஆவியின்படிப் பிறப்போரை ஈசாக்கும், மாம்சத்தின்படிப் பிறப்போரை இஸ்மவேலும் அடையாளப்படுத்துகின்றனர் (கலா 4:29).



இருவரும் ஆபிரகாமின் வித்தாயிருக்கிறபடியால் இஸ்மவேலும் ஈசாக்கு போலவே காணப்படுவான். விருத்தசேதனம் எனும் சடங்கும் இஸ்மவேலுக்குச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவன் ஒருபோதும் ஈசாக்காய் மாறமாட்டான். நமது அநேக சபைகளில் ஈசாக்குகளைவிட இஸ்மவேல்கள்தான் அதிகம். இவர்களுக்கிடையே எப்பொழுதும் போராட்டம்தான். இஸ்மவேல்மீது தண்ணீர் தெளிப்பதாலேயோ அல்லது அவனை முழுக்காட்டுவதாலேயோ அவனுக்கு ஈசாக்கு என்று பெயர் வைத்துவிடமுடியாது! தனி நபர்களைப் பரிசுத்த ஆவியானவர் பாவ உணர்வுக்குள் நடத்தி, அவர்களது பாவப் பரிகாரியாக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள அவர் அவர்களைச் சிலுவையிடம் நடத்தவேண்டும். அதுதான் இரட்சிப்பிற்கேதுவான மனந்திரும்புதல்.

வெறும் விவாதம் ஒரு மனிதனைச் சம்மதிக்கச் செய்யும், ஆனால் உணர்த்தாது. பாவவுணர்வு என்பது முழுக்க முழுக்க ஆவியானவர் அருளுவது. அப்போஸ்தலன் பவுலுக்கிருந்த அறிவுத்திறன் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் அவரது அறிக்கையைப் பாருங்கள்: 1 கொரி 2:4,5, ''உங்கள் விசுவாசம் மனிதருடைய ஞானத்தில் அல்ல, தேவனுடைய வல்லமையில் நிற்கும்படி என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய கவர்ச்சியான சொற்களாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.'' சுவிசேஷத்தின் சரித்திரப் பூர்வமான தகவல்களை நம்புவதால் மட்டும் எவனும் இரட்சிக்கப்பட்டுவிடமுடியாது. அவன் கிறிஸ்தவத்திற்கு இன்னொரு ரசிகனாவான், அவ்வளவுதான். மறுபிறப்பிற்கான விசுவாசத்திற்குள் நடத்துவது ஆவியானவரது உணர்த்துதலே. மக்களை இரட்சிப்பிற்குள் நடத்த பலவித யுக்திகளைக் (techniques) கையாளுவதைக் குறித்து எச்சரிக்கை! ''நீ இரட்சிக்கப்பட்டுவிட்டாய்'' என்று எவரிடமும் நீங்கள் சொல்லவேண்டிய அவசியமில்லை; அவனுக்கே அது தெரியும்; அதுதான் அற்புதம்! அவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான் என்று ஆவியானவரே அவனது உள்ளத்தில் சான்று பகர்வார் (ரோ 8:16).

அப்போஸ்தலன் பேதுருவின் பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்தது. பெந்தெகொஸ்தே நாளன்று அது

3000 பேரைப் பாவவுணர்வுக்குள் நடத்தியது. ''இரட்சிக்கப்பட விரும்புவோர் முன்னால் வாருங்கள்'' என்று அவர் அழைப்பு கொடுக்கவில்லை; மாறாக, மக்களாகவே ''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டு முன்வந்தனர் (அப் 2:37). அவர்கள்மீது ஆவியானவர் கொணர்ந்த பாவவுணர்வு அவர்களது ''இருதயங்களைக் குத்தியதாம்!'' இதனால்தான், நாம் மக்களுக்குப் ''பிரசங்கிக்குமுன்'' அவர்கள் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்காய்ப் ''பிரார்த்திக்கவேண்டும்'' (1 தீமோ 2:1,4). ''ஆண்டவரே, மக்களை இரட்சியும்'' என்று ஏனோதானோவென்று கேட்டுவிடுவதல்ல; அவர்களுக்காக ''விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், நன்றிகளையும்'' ஏறெடுக்க வேண்டும். பாவிகளை இயேசுவிடம் வரும்படிக் கூவியழைக்கும்போது ஆத்துமாதாயகரும் பிரசங்கிமாரும் முழுக்க முழுக்க ஆவியானவர்மீது சார்ந்திருக்க வேண்டும். இயேசுவிடம் திருத்துவத்தின் இரண்டாம் நபரது வல்லமை இருந்தாலும், அவர் திருத்துவத்தின் மூன்றாம் நபரது வல்லமையின்மீதே சார்ந்திருந்து நமக்கு முன்மாதிரியை வைத்துச் சென்றார் (லூக் 4:16-20; அப் 10:38). விவிலியத்தின் இறுதிப்பக்கத்திலும்கூட இரட்சிப்பிற்கான அழைப்பு ஆவியானவரிடமும் திருச்சபையாகிய மணமகளிடமுமிருந்து சேர்ந்தே வருகிறது (வெளி 22:17).

மனந்திரும்புதலின் செய்திகள் இன்று வெகுவாய்க் குறைந்து வருகின்றன. பாவவுணர்வுக்குள் மக்களைப் பரிசுத்த ஆவியானவர் கொண்டுவரவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதில்லை. மனந்திரும்புதல்கள் இன்று ஆழமாயில்லாதிருப்பதில் ஆச்சரியமில்லையே. நாம் விதைப்பதைத்தானே அறுப்போம்? உருவக் குத்துகிற மனந்திரும்புதலின் செய்திகளை ஆவியானவரது வல்லமையில்தான் பிரசங்கிக்கமுடியும். இதோ, தீர்க்கன் மீகாவின் அறிக்கை: மீகா 3:8, ''யாக்கோபுக்கு அவனது மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவனது பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்.'' இன்று போல் நாடெங்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளும், தரிசனம் பார்க்கிறவர்களும், குறிசொல்லுகிறவர்களும் நிறைந்திருந்த



காலத்திலேயே மீகா இவ்விதம் சொன்னார் (வச 6,7). மக்களைப் பிரியப்படுத்திப் பெருந்திரள்களைக் கவருவதற்காகவே அவர்கள் ''சமாதானம், சமாதானம்'' என்று கூறினர் (வச 5). தேவ ஊழியனாகிய டேவிட் வில்கர்சன் (1931-2011) அவர்கள் இவ்வித ஊழியரைத் ''தலையணைத் தீர்க்கர்கள்'' (Pillow Prophets) என்றழைக்கிறார்.

## 2. பரிசுத்த ஆவியானவரும் திருப்பணியும்

எல்லாவற்றையும் அல்ல, தேவன் நாம் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை மட்டும் செய்வதுதான் இறைப்பணி. இயேசுவின் வாழ்நாட்களில் இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஜீவ அப்பம் இல்லாது ஆத்துமாக்கள் மாண்டுகொண்டுதானிருந்தார்கள்; ஆனால் அவர் இந்தியாவுக்கும் வரவில்லை, ஆப்பிரிக்காவிற்கும் செல்லவில்லை. ஆனாலும் சிலுவையில் தொங்கிய வேளையில் ''எல்லாம் முடிந்தது'' என்ற வெற்றி முழக்கமிட்டாரே! சிலுவைக்குச் செல்லுமுன்னர்கூட தமது பிதாவிடம் ''நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த வேலையைச் செய்துமுடித்தேன்'' என்று அறிக்கையிட்டார் (யோ 17:4ஆ). நாம் தேவனது ''வேலைக்காரர்.'' தான் விரும்புவதையெல்லாம் வேலைக்காரனால் செய்ய முடியாது: தனக்கு இடப்படும் ஆணைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும்தான் அவன் அடிபணிய வேண்டும். சங்கீதக்காரன் கர்த்தரிடம் எவ்விதம் அறிக்கையிடுகிறார், பாருங்கள்: ''இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் தலைவர்களின் கையைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும், வேலைக்காரியின் கண்கள் தனது தலைவியின் கையைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும் எங்கள் கண்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரைப் பார்த்த வண்ணமிருக்கின்றன'' (சங் 123:2). நாம் என்ன செய்யத் தேவன் விரும்புகிறார் என்று எப்படி அறிந்துகொள்வது? தமது ஆவியானவர் மூலமாகவே அவர் அதை நமக்கு வெளிப்படுத்துகிறார். இறைப்பணியில் நம்மை நடத்தும் ஆளுநர் பரிசுத்த ஆவியானவரே (ரோ 8:14). நாம் தினமும் ஜெபிக்கவேண்டியது: ''கர்த்தாவே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உமது நல்ல **ஆவி** என்னைச் செவ்வையான வழியில் நடத்துவாராக'' (சங் 143:10).

ஊழியச் சங்கங்களுக்கிடையே ‘‘பங்காளித்துவம்’’ (partnership) என்று பேசுகிறேம். நமது பிரதான பங்காளித்துவம் தேவனோடுதான் இருக்கவேண்டும். நாம் தேவனுக்கு ‘‘உடன் வேலையாட்களாய்’’ இருக்கிறோம் (1 கொரி 3:9அ). தேவனோடுள்ள இந்த உடன்பாடு பரிசுத்த ஆவியானவரின் மூலமே செயல்படும். ஆதிச் சீடருக்கு இந்த அறிவும் உணர்வும் தெளிவாயிருந்தன. அவர்கள் எருசலேமைக் கிறிஸ்துவின் உபதேசத்தினால் நிரப்பியபோது, ‘‘நீங்கள் அந்தப் பெயரைக் குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா?’’ என்று பிரதான ஆசாரியன் அவர்களிடம் கேட்டார் (அப் 5:27,28). பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் கொடுத்த உடனடிப் பதில்: ‘‘மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம்’’ (வச 29). அதைத் தொடர்ந்து அவர்கள் சொன்னது: ‘‘இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின **பரிசுத்த ஆவியும்** சாட்சி!’’ (வச 32). அவ்வளவு பயமுறுத்தல்களின் நடுவிலும் இவ்விதத் தைரியத்தைச் சீட ருக்குக் கொடுத்தது பரிசுத்த ஆவியானவரே. பரிசுத்தப் பங்காளித்துவம்! Holy Partnership! தமது மரணத்திற்குமுன் அவர்களுக்கு இயேசு வாக்களித்ததும் இதுவே: யோ 15:26,27, ‘‘சத்திய ஆவியாகிய உறுதுணையாளர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்; நீங்களும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.’’ ஆதிச்சபையுடன் ஒப்பிடும்போது நாம் நற்செய்தியறிவிப்புப்பணியில் பலங்குன்றிதான் இருக்கிறோம். அதற்கு அடிப்படைக் காரணம் நாம் ஆவியானவர்மீது போதுமான அளவு சாராதிருப்பதே. ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசுவிடம் வருவதற்கான கடைசி அழைப்பு திருமறையில் கொடுக்கப்படும்போது தூயாவியானவரும் திருச்சபையும் சேர்ந்தே செயலாற்றுகின்றனர்: ‘‘ஆவியாரும் மணமகளும், வா, என்கிறார்கள்!’’ (வெளி 22:17).

பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நாம் பேசும்போதும் அவரது நடத்துதலைவிட அவரது வல்லமையையே அதிகம் நாடுகிறோம். அவரோடு நெருக்கவுறவை நாடாமல், அவரது வல்லமையை மட்டும்



விரும்பினால், அது நமது தேவைக்கான தொடர்புதானே (utilitarian relationship) தவிர அவரது ஆளுகைக்கு (lordship) நாம் அடிபணிவதாய் இருக்காது. அதாவது, அவரால் நாம் பயன்படுத்தப்பட அல்ல, அவரை நாம் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம் என்பதே பொருள். ‘‘அப்போஸ்தலர் நடபடிகள்’’ புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசித்துப்பாருங்கள். இப்புத்தகத்திற்கு ‘‘ஆவியானவர் நடபடிகள்’’ என்ற பெயர் இன்னும் அதிகம் பொருத்தமாயிருக்கும் என்ற முடிவுக்கே வருவீர்கள். அதாவது, அப்போஸ்தலரும் சீடரும் ஆவியானவரது நேரடி ‘‘நடத்துதலுக்குக்’’ கீழ்ப்படிந்து வாழ்ந்தனர் என்பது தெளிவாகும். இதை நடைமுறையில் நமக்கு விளங்க வைக்கும் சில எடுத்துக்காட்டுகள் இதோ —

□ சமாரியாவில் சுவிசேஷகன் பிலிப்பு மாபெரும் சுகமளிப்புக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்தார் (அப் 8:5-8). அநேகர் சுகம் பெற்றனர், பிசாசுகள் துரத்தப்பட்டன. நகரில் பேரானந்தம் உண்டாயிற்று. எங்கும் அதே பேச்சுதான்! ஆனால் திடீரென்று பிலிப்புவை ஆவியானவர் காசா வனாந்திரத்திற்குப் போகச் சொன்னார் (வச 26). காட்டுக்குள்ளிருந்து நாட்டிற்குள் வருவது சுலபம். இந்தியாவிலிருந்து அமெரிக்கா செல்வது எளிது; ஆனால் அமெரிக்காவிலிருந்து இந்தியா வருவது கடினம். சிறிய சபையிலிருந்து பெரிய சபையைப் பொறுப்பேற்கச் செல்வது எளிது; பெரிய சபையை நடத்திக்கொண்டிருப்பவர் சிறிய சபையைப் பொறுப்பெடுக்கப் புறப்பட்டுச் செல்வது கடினம். திரள்களுக்கு விடுதலைக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த பிலிப்புவுக்கு பாலைவனத்திற்குச் சென்று ஒரு தனி நபரைச் சந்திக்கச் செல்வது சுலபமாயிருந்திருக்காது. ஆனாலும் அவரைப் போகச் சொன்னது ‘‘ஆவியானவர்’’ என்பதால் உடனே கீழ்ப்படிந்தார் (வச 29). பாலைவனத்திற்குள் சென்று அதிவேக ரதம் ஒன்றை ஓடிப்பிடிப்பது சுலபமா? ஆனாலும், ஆவியானவரின் சத்தத்திற்குப் பிலிப்பு உடனே கீழ்ப்படிந்ததால், அவர் திரும்பி வருவதற்கு ஆண்டவர் அவருக்கு இலவச விமானச் சீட்டு கொடுத்தார் (வச 39)! வளைந்து கொடுப்போர் பாக்கியவான்கள்: அவர்கள் முறிந்துபோக மாட்டார்!

□ அடுத்த எடுத்துக்காட்டு, சீமோன் பேதுரு. பெந்தெகொஸ்தே நாளையடுத்து அவரது முதல் சுவிசேஷப் பிரசங்கம் 3000 ஆத்து மாக்களைத் திருச்சபைக்குள் கொண்டுவந்தது. என்னே அறுவடை! ஏற்கனவே பழைய ஏற்பாட்டை யூதர்கள் நன்கறிந்திருந்ததால் அவர் களது கூட்டங்களுக்குப் பிரசங்கிப்பது பேதுருவுக்குப் பரவசமாயிருந் தது. விசுவாசிகளின் எண்ணிக்கை விரைவில் 5000 என உயர்ந்தது. ஆனால் திடீரென்று ஆவியானவர் பேதுருவை வேறொரு திசைக்குத் திருப்பினார். அது யூதரல்லாத ஒரு குடும்பத்தைச் சந்திக்கச் செல்ல வேண்டியது. யூதமார்க்கத்தில் மூழ்கியிருந்த பேதுருவுக்கு இப்புதிய பணியை மேற்கொள்வது கடினமாகத்தானிருந்தது. விண்ணிலிருந்து மூன்று முறை வந்த தரிசனமும் அவரது மனதை மாற்றமுடியவில்லை (அப் 10:9-16). ஆனாலும், அவரது வீட்டுக் கதவைத் தட்டி நின்ற மூவருடன் புறப்பட்டுச் செல்லும்படி ஆவியானவர் அவரோடு பேசிய போது அவர் கீழ்ப்படிந்தார் (வச 19,20). ‘‘சந்தேகப்படாமல்’’ அம் மூவருடன் புறப்பட்டுச் செல்ல ஆவியானவர் அவரைப் பணித்தார். இதைக் கனப்படுத்தி, அவர் பிரசங்கத்தை முடிக்குமுன்னரே, மாரி போல் ஆவியானவர் கூடியிருந்தோர் மீது இறங்கினார் (வச 44). தமது மெல்லிய சத்தத்திற்குக் கீழ்ப்படியும் பிரசங்கியின் பிரசங்கங்களை ஆவியானவர் உறுதிப்படுத்துகிறார்.

□ நடபடிகள் புத்தகத்திலிருந்து மூன்றாம் எடுத்துக்காட்டு அப்போஸ்தலன் பவுல் மற்றும் அவரது குழுவினரைப்பற்றியது. இது அவரது இரண்டாம் மிஷனரிப்பயணத்தின்போது நடந்தது. தெர்பை, லீஸ்திரா மற்றும் சில இடங்களுக்குச் சென்று வந்த பின்னர், ஆசியா வில் வசனத்தைப் பிரசங்கியாதபடி ‘‘ஆவியானவர் அவர்களைத் தடைபண்ணினார்’’ (அப் 16:6). எனவே அவர்கள் பித்தினியா விற்குச் செல்ல முயன்றபோது ‘‘ஆவியானவரோ அவர்களைப் போக விடவில்லை’’ (வச 7). ஆசியாவிற்கும் பித்தினியாவிற்கும் கதவ டைத்த ஆவியானவர் மக்கெதோனியாவிற்கு வாசலைத் திறந்தார். அங்குதான் லீதியாள் என்பவள் அவர்களுக்கு முதல் ஐரோப்பிய விசுவாசியாய்க் கிடைத்தாள் (வச 14). இது சில கேள்விகளை எழுப்பு கிறது. அனைத்து நாடுகளையும் கண்டங்களையும் நற்செய்தியால்



சந்திக்கவேண்டும் என்பதுதானே நற்செய்திப் பேராணை? ஆவி யானவர்தானே மிஷனரிப்பணியின் பிரதான இயக்குநர்? இப்படி யிருக்க, விறுவிறுப்பானதொரு குழுவின் ஓட்டத்தை அவர் தடுப் பானேன்? அதற்குப் பதில்: திருமறையின் ‘‘பொதுவான’’ போதனை கள் மற்றும் கட்டளைகளின்படி நாம் நடந்துகொண்டிருக்கவேண் டும்; அதே வேளையில் ஆவியானவரது ‘‘குறிப்பான’’ நடத்துதலை யும் கவனியாது விடக்கூடாது. ஆவியானவரது நடத்துதலை நமது உற்சாகம் அமர்த்திவிடக்கூடாது. அவர் மிஷனரிகளை அனுப்புகிறார்; அத்துடன் அவர்களை வழிநடத்துகிறார் (அப் 13:4). விவசாயத்தில் பல்வேறு வேலைகள் உண்டு: உழுதல், விதைத்தல், தண்ணீர் பாய்ச் சுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல். அறுப்பின் ஆண்டவ ராகிய அவருக்குத்தான் எதை, எப்படி, எப்பொழுது செய்யவேண்டு மென்று தெரியும். அவரது குரலைக் கவனித்து நடப்போம்.

உற்சாகம் மட்டும் இருந்தால் ஊழியம் கனியுள்ளதாயிருக்கும் என்று சொல்லிவிடமுடியாது. ஓர் ‘‘இதய பாரத்துடன்’’ உழைக்க வேண்டும். இந்தப் பாரத்தை நமது இதயங்களில் ஊன்றுபவர் ஆவி யானவரே. இதை எவ்வளவு பயபக்தியுடன் அப்போஸ்தலன் பவுல் எழுதுகிறார் பாருங்கள். ரோ 9:1-3, ‘‘எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லு கிறது பொய் அல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாய் இருக்கிறது. என் சொந்த இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே.’’ இதய பாரம் இல்லாத உற்சாகம் ‘‘அறிவு இல்லாத வைராக்கியம்’’ ஆகும் (10:1,2). ஆவியானவர் அருளும் பாரத்தை ஓர் இயக்கம் (Mission) இழக்குமானால் அது வெறும் இயந்திரம் (machine) ஆகிவிடும்.

பரிசுத்த ஆவியானவரின் அற்புத அசைவாட்டத்திற்குப் பதி லாகச் செயற்கையான பல காரியங்கள் நமது ஊழிய நிறுவனங்களுக் குள் நுழைந்துவிட்டன. நிசமற்ற ‘‘மனந்திரும்புதல்கள்’’ இருப்பது போலவே நிசமற்ற ‘‘அபிஷேகங்களும்’’ காணப்படுகின்றன. நமது

அருள்மாரிக் கூட்டங்களில் திடீர் நிகழ்வுகள், அற்புத வெளிப்பாடு கள் போன்றவையெல்லாம் அபூர்வமாகிவிட்டன. காப்பியடிப்பதும் இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லிக்கொடுப்பதும்தான் நிறைந்து விட்டன. நமது கூட்டங்களில் அதையும் இதையும் செய்து மக்களை ஒருவிதப் பரவசத்திற்குள் கொண்டு வந்துவிடுகிறோம். நடபடிகளில் வாசிக்கும் அருள்மாரிச் சம்பவங்களெல்லாம் அற்புத நிகழ்வுகளாய் இருந்தன. அவை நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டவையல்ல! பெந்தெ கொஸ்தே நாளன்று ''சடுதியாய்'' (திடீரென்று) ஒரு முழக்கமுண்டா யிற்று; அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து நவநாவுகளில் பேசினர் (அப் 2:1-4). கொர்நேலியுவின் இல்லத்தில் பேதுரு ''பேசிக்கொண்டிருக்கும்போதே'' வசனம் கேட்ட யாவர்மீதும் ஆவியானவர் இறங்கினார் (10:44). எருசலேமில் பின்னர் இச்சம் பவத்தைப் பேதுரு விவரித்துச் சொல்லும்போது, அவர் பேசத் ''தொடங்கினபோதே'' பரிசுத்த ஆவியானவர் மக்கள்மீது இறங்கி விட்டார் என்று குறிப்பிட்டார் (11:15).

தேவனது வல்லமையின் பிரசன்னம் அபரிமிதமாக வெளிப்பட்ட இரு பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளைக் கவனிப்போம். ஒன்று ஆலயத்தை அரசன் சாலமோன் பிரதிஷ்டை செய்தபோது நடந்தது. இது குறிப்பிடப்பட்டுள்ள 2 நாளாகமம் 5:13,14ஐ வாசிப்பது நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது: ''அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏக சத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள் ... கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தின் பொருட்டு ஆச்சாரியர்கள் ஊழியம் செய்து நிற்க முடியாமல் போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆல யத்தை நிரப்பிற்று.'' ஒருமிக்க நேர்த்தியாய்ப் பாடியதைத் தொடர்ந்து இப்படி நடந்தது. அடுத்த நிகழ்வு சாலமோனின் ஜெபத்தை அடுத்து நடந்தது (7:1-3). அக்கினி! மகிமை! மக்கள் தளவரிசை வரை தரை யிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து துதித்தார்கள்! இவையெல் லாம் மனிதன் உண்டாக்காமல் தேவனே செய்தவை என்று உங்க ளால் உணரமுடிகிறதா? இப்படிச் செய்யுங்கள் என்று எதுவுமே சொல் லிக்கொடுத்துச் செய்யப்படவில்லை. நாமோ நமது வித்தைகளைத்



தான் காட்டுகிறோம், வெட்கம்! ''மனிதரால் பிறப்பது மனித இயல் பாயிருக்கும்; ஆவியானவரால் பிறப்பது ஆவியானவரின் இயல்பா யிருக்கும்'' (யோ 3:6)! ஆவியானவரின் இவ்விதப் பூர்வ பாதை களுக்குத் திரும்புவோம்!

பரிசுத்த ஆவியானவரின் நிசமான செயல்பாடுகளுக்கு மாற்றுக் களாகப் பல நவீன, கேள்விக்குரிய காரியங்களை நாம் கண்டு பிடித்துள்ளோம். திருமறை நமக்குத் தரும் அறிவுரைகள்: ''தேவனை ஆவியோடு தொழுதுகொள்ளவேண்டும்'' (யோ 4:24); ''ஆவிக் கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும்'' (கலா 5:25); ''ஆவியினால் நடத்தப்படவேண்டும்'' (ரோ 8:14); ''ஆவிக்குள் ஜெபம்பண்ண வேண்டும்'' (யூதா 20); மற்றும், ''ஆவியோடு பாடவேண்டும்'' (1 கொரி 14:15). ஆனால் ஆவியில் கீழே விழுதல், ஆவியில் சிரித்தல், இப்படியெல்லாம் திருமறை எதுவும் சொல்லவில்லை! ஆவியில் சாப்பிடுதல் என்று வந்தால்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்! மலி வான மாற்றுகளினால் பரவசமடைந்து வஞ்சிக்கப்படுகிறோம்.

''ஆவியோடு பாடுதல்'' என்பதிலும்கூட முக்காலத்தில் இயற் றப்பட்ட நேர்த்தியான பாமாலை, கீர்த்தனைகளை (Hymns and Lyrics) நாம் ஒதுக்கிவைத்துவிட்டோம். நாம் ''புதுப்பாட்டு'' பாடுகிறோம் என்று பெருமிதம் கொள்கிறோம். ''புதுப்பாட்டு'' என்று வேதம் சொல் லும்போது புதிதாய் இயற்றப்பட்டவை என்றா அர்த்தங்கொள்வது? அப்படியிருக்க முடியாது! கி.பி. 2000இல் இயற்றப்பட்ட பாடல்கள் 2010இல் பழையதாகிவிடுமே! 2020இல் இன்றும் பழையதாகி விடுமே! ''புதிய'' பாடல் என்பது இயற்றப்பட்ட காலத்தை அல்ல, புதிதாக்கப்பட்ட வாழ்க்கையையே குறிக்கும். எடுத்துக்காட்டாக, சங்கீதம் 40:1-3ஐப் பாருங்கள்: 3ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட் டுள்ள ''புதுப்பாட்டு'' என்பது ''உளையான சேற்றிலும் பயங்கரமான குழியிலும்'' உழன்ற சீர்கெட்ட வாழ்க்கையிலிருந்து வேறுபடுவதே. நாம் ஆவியினால் நிரப்பப்பட்டு அதைச் ''சங்கீதங்கள், கீர்த்தனை கள், ஞானப்பாட்டுகள்'' மூலம் வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருக் கிறோம் (எபே 5:18-20). இவையெல்லாவற்றிற்கும் துதியிலும் ஆராதனையிலும் இடமுண்டு. இவற்றில் எதையும் ஒதுக்காதீர்கள். இவையெல்லாம் இசையோடு எழுப்பப்படவேண்டிய பல்வகை

துதியாகும். முந்திய காலப் பாடல்கள் தியானச் செறிவும் (devotional content) உபதேசத் தெளிவும் (doctrinal clarity) உள்ளவையாயிருந்தன. துர்ப்பாக்கியமாக இன்றையப் பாடல்களில் பல சோகை பிடித்தவையாயிருக்கின்றன; அவை செய்யுள் நடையிலும் இல்லை!

தேவனது நிசமான காரியங்களுக்கு மாற்றுக்களைக் கண்டுபிடிப்பதைத் திருமறை கண்டிக்கிறது. இதோ தேவனது புலம்பல்: "எனது மக்கள் இரு தீமைகள் செய்தார்கள்: ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்'' (எரே 2:13). மேலும் ஆண்டவர் கேட்டது: ''வயல்வெளியின் கன்மலையிலிருந்து வரும் குளிர்ந்த நீரை எவனாவது விடுவானா? ... என் மக்கள் என்னை மறந்து, **பூர்வ பாதைகளை** விட்டு, சீரமைக்கப்படாத பாதைகளிலும் வழியிலும் நடக்கிறார்கள்'' (எரே 18:13-15 NKJV). விஞ்ஞானத்தின் நவீன முன்னேற்றங்களுக்காய்த் தேவனைத் துதிப்போம்; அதே வேளையில் நவீனமானவை யாவும் மேலானவை என்று நினைக்க வேண்டாம் (லூக் 5:39).

சபைகளிலும் சங்கங்களிலும் தேவனால் அபிஷேகிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் குறைந்துவருவது இன்னொரு துக்கமான காரியம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் ஆவியானவரின் அபிஷேகமே தலைமைத்துவத்திற்கு அடிப்படை நிபந்தனையாகப் போதிக்கப்பட்டுள்ளது. அடுத்த வரிசைத் தலைவர்களாக எழுபதுபேரைத் தெரிந்தெடுக்கும்படி மோசேயிடம் தேவன் சொன்னபோது அவர் வாக்குப்பண்ணியது: ''உன்மேல் இருக்கும் ஆவியை அவர்கள் மேலும் வைப்பேன்'' (எண் 11:16,17). கர்த்தருடைய வார்த்தையின்படியே மோசே செய்தபோது, கர்த்தர் ''அவன்மேல் இருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மீது வந்து தங்கியவுடன் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்'' (வச 25,29).

ஆதிச் சபையில் விதவைகளுக்கு ஆகாரம் பகிர்ந்துகொடுப்பதில் ஒரு பிரச்னை உருவாகியது. பன்னிரு அப்போஸ்தலரும் விசுவாசிகளை அழைத்து அவர்களிடம் சொன்னது: ''நாங்கள் தேவ வசனத்



தைப் போதியாமல், பந்தி பரிமாற்றம் செய்வது விரும்பத்தக்கதல்ல'' (அப் 6:1,2). இப்பொறுப்பை மேற்கொள்ள ஒரு குழுவை ஏற்படுத்த அவர்கள் சீடரிடம் சொன்னார்கள். அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''சகோதரரே, **பரிசுத்த ஆவியும்** ஞானமும் நிறைந்து, நற்சான்று பெற்றிருக்கும் ஏழு பேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காய் நியமிப்போம்'' (வச 3). இப்பொறுப்பை ஏற்போருக்கு இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் கூறிப்பிட்ட மூன்று தகுதிகளில் முதலாவது வருவது ஆவியின் நிறைவே. நாமோ இதை விட்டுவிடுகிறோம். கிறிஸ்தவத் தலைமைத்துவத்தின் பிரச்னைகள் இங்குதான் துவங்குகின்றன.

தங்களைத் தாங்களே தலைவர்களாக்கிக் கொள்வோர் இன்று ஏராளம். ஆட்களைக் காக்கா பிடிக்கின்றனர்; அல்லது குடும்ப வாரிசு என்று உரிமை கொண்டாடுகின்றனர். இவ்விதத் தலைவர்களைத் தேவன் அங்கீகரிப்பதில்லை. இதைக் குறித்து அவர் சொல்லுவதைக் கவனியுங்கள்: ஓசி 8:4, ''அவர்கள் இராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்; ஆனாலும் என்னாலே அல்ல. அதிபதிகளை வைத்துக்கொண்டார்கள்; ஆனாலும் நான் அறியேன்.'' இவ்விதத் தலைவர்கள் ஆசனங்களில் அமரலாம்; ஆனால் அவர்கள் மீது சால்வை (mantle) விழவேண்டுமே! தலைவர்கள் என்பவர்கள் மனிதனது தத்துவ ஞானத்தின்படியல்ல, ஆவியானவரின் தெய்வீக நடத்துதலின்படிச் செயல்படவேண்டும். அந்தியோகியாவிலுள்ள திருச்சபைத் தலைவர்களுக்கு ஒரு மிஷனரி அழைப்பு வந்தது. பவுலும் பர்னபாவும் அவர்களுக்கு இரு கண்கள் போன்றவர்கள். தத்துவ ரீதியின்படியே அவர்கள் செயல்பட்டிருப்பார்களெனில் பவுலையும் பர்னபாவையும் தவிர வேறு இருவரையே அனுப்பிவைத்திருப்பார்கள்! ஆனால், ''பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று **பரிசுத்த ஆவியானவர்** திருவுளம்பற்றினார்'' (அப் 13:1,2). அவர்கள் ஆவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து இவ்விருவரையும் மிஷனரிப் பணிக்கு அனுப்பிவைத்தனர். ''அவர்கள் **பரிசுத்த ஆவியினாலே** அனுப்பப்பட்டார்கள்'' என்று லூக்கா எழுதுகிறார் (வச 3,4). என்னே ஆசீர்வாதமான பங்காளித்துவம்!

தகுதியற்ற தலைமைத்துவத்தைக் குறைகூறிக்கொண்டேயிருப்பதற்குப் பதிலாக, பக்தியும் பரிசுத்த ஆவியும் நிறைந்த தலைவர்களைத் தேவன் எழுப்பவேண்டுமென்று இறைமக்கள் ஜெபிக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக ஏசாயா 1:26இல் தேவன் நம்மை ஊக்குவிக்கும் வாக்கு ஒன்றைத் தந்துள்ளார்: ''உன் நீதியரசர்களை **முன்னர்** இருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை **ஆதியில்** இருந்ததுபோலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் நீ பெயர்பெறுவாய்!'' ''ஆசீர்வாதமான மழை பெய்யும்'' என்பது நமக்கு எப்பொழுதும் உற்சாகம் தரும் திருவாக்கு (எசேக் 34:26). ஊழல் மலிந்த தலைவர்களால் மக்கள் அவதியுற்ற வேளையில்தான் இவ்வாக்கு கொடுக்கப்பட்டது என்பது தெரியுமா? தங்களைத் தாங்களே மேய்த்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களை இரண்டாம் வசனத்தில் ஆண்டவர் வெகுவாய்க் கண்டித்தார். ஆடுகளை மேய்ப்பதற்குப் பதிலாக அவர்கள் ஆடுகளையே மேய்ந்து கொண்டிருந்தனர். அவ்வித வேளையில்தான் தேவன் தந்த வாக்கு: ''கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாய் இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாய் இருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்'' (வச 24). இதையடுத்துதான் ''ஆசீர்வாதமான மழை பெய்யும்'' எனும் வாக்கு உடனே வருகிறது (வச 26). தமது மந்தையை ஆசீர்வதிப்பதோடு மட்டும் நிறுத்தாமல், அதனை ஆசீர்வாதமாகவும் மாற்றுவதாகத் தேவன் வாக்களித்துள்ளார். ''சுற்றுப்புறமெங்குமுள்ள'' மக்களுக்குக் கிறிஸ்துவின் மந்தையை ஆசீர்வாதமாக்கத் தேவனோடு இணைந்து செயல்படும் தலைவர்களைத் தேவன் தருவாரெனில் அது என்னே ஆசீர்வாதம்! ஆனால் துக்ககரமான காரியம் என்னவெனில், திருச்சபைகளில் ஆயர்கள்தான் ஆட்டக்காரர் என்றும் சபை மக்கள் அதை வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்கள் என்றும்தான் ஆகிவிட்டது. ஆதிநாட்களில் இருந்ததுபோன்ற ஆவியின் அருள்மாரி திரும்பப் பொழியப்பட்டால் தான் நிலைமை மாறும்.

டேனியல் W. விட்டில் (1840-1901) என்ற சுவிசேஷகர் இயற்றிய பாடல் நினைவுக்கு வருகிறது; இதைத்தானே திரும்பத் திரும்ப நமது எழுப்புதல் முகாம்களில் பாடினோம்? —



*அருள் ஏராளமாய்ப் பெய்யும்*
*உறுதி வாக்கிதுவே*
*ஆறுதல் தேறுதல் செய்யும்*
*சபையை உயிர்ப்பிக்குமே*

*அருள் ஏராளம், அருள் அவசியமே*
*அற்பமாய் சொற்பமாய் அல்ல*
*திரளாய்ப் பெய்யட்டுமே*

*அருள் ஏராளமாய்ப் பெய்யும்*
*மேக மந்தாரமுண்டாம்*
*காடான நிலத்திலேயும்*
*செழிப்பும் பூரிப்புமாம்*

*அருள் ஏராளமாய்ப் பெய்யும்*
*இயேசு வந்தருளுமேன்*
*இங்குள்ள கூட்டத்திலேயும்*
*கிரியை செய்தருளுமேன்*

*அருள் ஏராளமாய்ப் பெய்யும்*
*பொழியும் இப்பொழுதே*
*அருளின் மாரியைத் தாரும்*
*ஜீவ தயாபரரே*

## 3. பரிசுத்த ஆவியானவரும் வேலைகளும்

பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைத் திருப்பணிக்கு மட்டும்தான் என்று நாம் குறுக்கிவிடக்கூடாது. ஆன்மீகத்துக்கடுத்தவை மற்றும் உலகுக்கடுத்தவை (sacred and secular) என்று நாம் எல்லாவற்றையும் பாகுபடுத்தக்கூடாது. சாப்பிட்டாலோ, பருகினாலோ, அல்லது எதைச் செய்தாலும் அதைத் தேவனது மகிமைக்காகத்தானே செய்யவேண்டும்? (1 கொரி 10:31). நாம் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்த ஆவியானவரின் உதவி இன்றியமையாதது. ஆவியானவரின் உதவியின்றி இயேசுவைக் கர்த்தர் என்று அழைப்பதுகூட இயலாத காரியம் என்கிறது வேதம்

(1 கொரி 12:3ஆ). நமது செயல்பாடுகள் அனைத்திலும் ஆவி யானவரது உதவி நாடவேண்டுமென்பதற்கு வேதத்திலிருக்கும் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகள் நம்மை ஊக்குவிக்கும் —

□ யாத்திராகமம் 31:1-5, ''கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்து, விநோதமான வேலை களை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளி யிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக அவனைத் **தேவ ஆவியினால்** நிரப்பினேன்.'' தொழில்நுட்ப வேலைகளுக்குப் பரிசுத்த ஆவியானவரின் உதவி! பொறியியல் துறை, மருத்துவத் துறை, தகவல்நுட்பத் துறை, கல்வித் துறை, இதுபோன்ற எதுவாயிருந்தாலும் இவற்றில் நேர்த்தியாய்ச் செயல்பட ஆவியானவர் உதவுவார்.

□ ஆதியாகமம் 41:38-40, ''பார்வோன் தனது வேலைக்காரரைப் பார்த்து: **தேவ ஆவியைப்** பெற்ற இந்த மனிதனைப்போல வேறொ ருவன் உண்டோ என்றான். பின்பு பார்வோன் யோசேப்பைப் பார்த்து: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிற படியால், உன்னைப்போல விவேகமும் ஞானமும் உள்ளவன் வேறொ ருவனும் இல்லை. நீ என் அரண்மனைக்கு அதிகாரியாயிருப்பாய், உன் வார்த்தையின்படியே என் மக்கள் எல்லாரும் அடங்கி நடக்கக் கடவர்கள் என்றான்.'' பரிசுத்த ஆவியானவரே ''ஞானத்தையும் உணர்வையும் ஆலோசனையையும் அறிவையும்'' அருளும் ஆவி யாயிருக்கிறார் (ஏசா 11:2). பார்வோன் போன்ற புறமதத் தலைவ னால் அடையாளம் காணப்பட்டது நம்மால் முடியவில்லையே என் பதுதான் பரிதாபம். இது கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதுபோல்! தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலை கள், இன்னும் இவைபோன்றவற்றில் தலைமை வகிக்கும் கிறிஸ்தவ நிர்வாகிகளுக்கு இது ஒரு சவால்! பரிசுத்த ஆவியினால் நிறைந் திருங்கள். உங்களது அனைத்து வேலைகளிலும் பொறுப்புகளிலும் அவரது அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்த அவரை வேண்டுங்கள்.



கிறிஸ்தவ வாலிபர் நங்கையர் பலர் இந்திய ஆட்சிப் பணிக்கு (IAS) வராதது துக்கமான காரியம். அவர்களுக்கு அறிவு (intelligence) இருக்கலாம்; ஆனால் உழைப்பு (industriousness) எங்கே? உயர் மட் டங்களில் நமக்கு யோசேப்புகளும் தானியேல்களும் நெகேமியாக் களும் இல்லையேல் நாட்டளவில் எவ்விதம் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்?

□ யாத்திராகமம் 35:34, ''பெசலெயேலின் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாயின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும் போதிக்கிற வரத்தையும் தேவன் அருளினார்.'' நுண்ணிய வேலைகளை நேர்த்தியாய்ச் செய்வதற்கு மட்டுமல்ல (31:1,2,), மற்றவர்களுக்குப் ''போதிக்கவும்'' (35:34) தேவன் அவனைத் தமது ஆவியினால் நிரப்பினார். சரியாய்ச் சொன்னால், பிறருக்குப் போதிக்க ஆண்டவர் ஒரு குழுவையே அபிஷேகித் தார். திறமையான ஆசிரியர் மட்டுமல்ல, அதற்கான அபிஷேகமும் பெற்றுள்ள ஆசிரியர் நமக்குத் தேவை. சேகரிக்கப்பட்ட தகவல்கள் (informations) தலைகளைத்தான் நிரப்பும்; மேலிருந்து வரும் அகத் தூண்டல்களோ (inspirations) இதயங்களைக் கொழுந்துவிட்டெரியச் செய்யும்! 1 கொரிந்தியர் 12:8-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஒன்பது வரங்களில் ''ஞானத்தைப் போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும்'' முதல் இரண்டாகும். இவ்விரண்டும் போதக ஊழியத்தோடு நேரடிச் சம்பந்தப்பட்டவை அல்லவா? ஆதி அப் போஸ்தலர் தங்களது போதக ஊழியத்தில் இவ்வரங்களை நாடினர்: 1 கொரி 2:13, ''நாங்கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளால் பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளால் பேசி, ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண் பிக்கிறோம்.'' ஆவியின் அபிஷேகத்தோடு போதிக்கும்போது கேட் போருக்குத் தெளிவும் (enlightenment) உண்டாகும், பக்திவிருத்தியும் (edification) உண்டாகும். ''சத்திய ஆவி'' என்ற வகையில் ஆவியான வர் ஒரு போதகர் (யோ 14:17,26).

நமது வேதாகமக் கல்லூரிகளுக்காய்த் தேவனைத் துதிப்போம். அதே வேளையில், அங்கு போதிக்கும் பேராசிரியர்கள் ஆவியினால் அபிஷேகிக்கப்படாவிடில் இக்கல்லூரிகள் கல்விப் பாலைவனங் களாய் (academic deserts) மாறிவிடும். மேலறை அனுபவம் இல் லாத ஆசிரியர், பட்டங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு காசும் பெறமாட்டார். உங்கள் நாவில் ஆவியின் அக்கினி இல்லை யேல், உங்கள் உரைகள் அனலற்றுப் பனிக்கட்டி போலிருக்கும்; உங்கள் மாணவர் உறைந்து ஆன்மீக மரணமடைவர் (2 கொரி 3:6).

□ 2 சாமுவேல் 23:1,2, ''தாவீதின் கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் **அபிஷேகம்** பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது எனும் மனிதன் சொல்லுவது என்னவென்றால்: கர்த்தருடைய **ஆவியானவர்** என்னைக் கொண்டு பேசினார்; அவரது வசனம் எனது நாவில் இருந்தது!'' அபிஷேகிக்கப்பட்ட பாடலும் இசையும் தேவனருளும் வரங்கள். **பரிசுத்த ஆவியினால்** நிறைந் திருக்கும் இருதயத்திலிருந்து ''சங்கீதங்களும் கீர்த்தனைகளும் ஞானப்பாட்டுகளும்'' வெடித்துக் கிளம்பிவரும் (எபே 5:18,19). அன்றும் இன்றும் பாடல்கள் இயற்றும், இசை அமைக்கும், கிறிஸ்தவ விசுவாசிகளுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். சர்வ வல்லவரை நாம் துதிப்பது அவர்களது படைப்புகளால் மேம்படுகிறது. பண்டைக் காலப் பாடல்கள் பல எழுப்புதலின் காலங்களில், ஜெப அறைகளி லிருந்து, உபவாச ஜெபத்தோடு இயற்றப்பட்டவை. அவை தியானச் செறிவும் உபதேசத் தெளிவும் நிறைந்தவையாயிருப்பதில் ஆச்சரிய மில்லை. ஆண்டவருக்கு மகிமையாகவும் அவரது மக்களுக்குப் பக்தி விருத்தியாகவும் இருக்கும்படிப் பாடல் நடத்துவோரும், இசைப் போரும், பாடகரும் அதிகமதிகமாய்ப் பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருந்தால் நலமாயிருக்கும்.

யூதர்களின் துதி விண்ணப்பப் பாடல் புத்தகமான சங்கீதப் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளார் (சங் 51:10-12; 104:30; 106:33; 139:7; 143:10). முற்காலங்களில்



இசைக் கருவிகளோடு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (1 சாமு 10:5). தனது சுரமண்டலத்தைத் தாவீது வாசித்தபோது கலங்கப் பண்ணும் பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்கியது (1 சாமு 16:23). இசைப்பவன் ஒருவன் தனது இசைக்கருவியை எடுத்து வாசித்தபோது தீர்க்கன் எலிசா மீது புதிய தீர்க்கதரிசனச் செய்தியுடன் கர்த்தரது கரம் வந்தமர்ந்தது (2 இரா 3:15-19). தீர்க்கதரிசனம் உரைத் தலும், இசையும் அடிக்கடி இணைந்திருந்தன (1 நாளா 25:1,3). கிறிஸ்தவ இசையில் பயபக்தி நிறைந்திருக்கவேண்டும் என்றும், அது வெறுமனே பரவசப்படுத்தும் பொழுதுபோக்காகிவிடக்கூடாது என்றும் இவ்வசனப் பகுதிகள் நமக்குப் போதிக்கின்றன.

□ தானியேல் 1:7, ''இந்த நான்கு வாலிபருக்கும் தேவன் எல்லா இலக்கியத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலை எல்லாத் தரிசனங்களையும் சொப்பனங் களையும் புரியக்கூடிய அறிவுள்ளவனாக்கினார்.'' தனது சொப்பனத் திற்கு அர்த்தம் தேடியபோது மன்னன் நேபுகாத்நேச்சார் இதனை எவ்விதம் அடையாளம் கண்டார் பாருங்கள்: 4:18, ''என் ராஜ்யத்தி லுள்ள ஞானிகள் எல்லாராலும் என் சொப்பனத்தின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கக்கூடாமல் போயிற்று; நீயோ இதைத் தெரிவிக்க முடியும்; பரிசுத்த தேவர்களுடைய **ஆவி** உனக்குள் இருக்கிறதே.'' எல்லாருக்கும் ஆண்டவர் ஒரே அளவில் ஞானம் தருவதில்லை; ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைந்துள்ள கிறிஸ்தவர்கள் கடின மாய் ஊழைத்து, ஆவியானவர் அருளும் ஞானத்துடன், தங்கள் வேலைகளில் பிறரைவிடச் சிறந்திலங்க வேண்டும். இது பிறர்முன் தேவனுக்கு மகிமை சேர்க்கிறது.

மேற்குறிப்பிட்ட பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் பல்வேறு துறைகளில் பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் நமக்குதவ முடியும் என்று பார்த்தோம்; ஆனாலும், எதைச் செய்யும்படித் தேவன் நம்மை அழைத்திருக்கிறாரோ அதற்கு மட்டும் தேவையான அபிஷேகத் தையே அவர் தந்து நம்மைப் பயன்படுத்துவார். நித்திய நோக்கில் எது மேலானது என்று யோசிப்பதைவிட எதில் அதிகம் சம்பாதிக்

கலாம் என்றே இன்றைய வாலிபர் நாட்டம் கொண்டுள்ளனர். இங்கு சவால் நிறைந்த எடுத்துக்காட்டாய் மோசே வருகிறார். எபிரேயர் 11:24-27ஐ வாசித்துப் பாருங்கள்: ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படு வதை வெறுத்து, தற்காலிகமான பாவச் சிற்றின்பங்களை அனுபவிப் பதைவிடத் தேவனது மக்களுடன் துன்பம் அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மீது நோக்கமாயிருந்து, எகிப்தி லுள்ள செல்வங்களிலும் கிறிஸ்துவின் பொருட்டு வரும் இகழ்ச்சியை அதிக பாக்கியம் என்று எண்ணினார்.''

நமது வாலிபர் நங்கையருக்கு இப்பகுதியில் போதுமான ஆலோ சனை கிடைப்பதில்லை. பிள்ளைகளோடு உட்கார்ந்து ஜெபித்து அவர்களுக்கு இறைச்சித்தம் எது என்று கண்டுபிடிப்பதைவிடக் கவர்ச்சிகரமான துறைகளுக்குள்ளேயே அவர்களைப் பெற்றோர் புகுத்திவிட முயலுகின்றனர். வாலிபப் பருவத்திலேயே திருச்சித்தம் கண்டுபிடிக்கப் பயிலாவிடில் வாழ்நாள் முழுவதும் அதனைத் தவற விட்டுக்கொண்டேதானிருப்போம். தேவனது பரிபூரண சித்தம் இல் லாதது எதுவும் இரண்டாம் தரமானதே. 1960களில் பொறியியல் கல்லூரிகளில் மூன்றே பாடப்பிரிவுகள்தான் உண்டு: கட்டிடவியல், இயந்திரவியல், மின்னியல் (Civil, Mechanical, Electrical). ஐந் தாண்டுப் படிப்பிற்கு மூன்றாம் ஆண்டில்தான் விருப்பமான பாடப் பிரிவைத் தெரிந்தெடுக்கவேண்டும். கிராக்கி என்று வரும்போது முதலாவது இயந்திரவியல், அடுத்து மின்னியல், இறுதியாகக் கட்டிட வியல். நான் வகுப்பில் முதல் தர மாணவனாயிருந்தாலும், தேவ சமூகத்தில் காத்திருக்கும்போது நான் கட்டிடவியலைத் தெரிந் தெடுக்க அவர் என்னை நடத்தினார். இது எனது தந்தையின் விருப்பத் திற்கு மாறாக இருந்தும் நான் தேவ நடத்துதலில் உறுதியாயிருந் தேன். நான் கட்டிடப் பொறியியலில் பெற்ற பயிற்சி எனது ஊழியக் காலம் முழுவதிலும், குறிப்பாக எனது பிரசங்கங்களை வடிவமைப் பதில், எனக்கு நேரடியாய் உதவியுள்ளது!

''ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை'' ஆகிய இப்பாடத் தின் முடிவுக்கு வரும்போது நாம் ஏறெடுக்க வேண்டிய ஜெபம் —



*''எழும்பு, எழும்பு, பலப்படு,*
*கர்த்தரின் புயமே,*
*முந்தின நாட்களிலும்*
*பூர்வ தலைமுறைகளிலும்*
*எழும்பினபடி எழும்பு!''*

(ஏசாயா 51:9)

பெர்க்மான்ஸ் ஐயா அவர்களது கீழ்க்கண்ட பாடலில் கருத்துச் செறிவுண்டு —

*எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே*
*இந்நாளில் உம் சித்தம்போல் நடத்திச் செல்லுமையா*
*ஆவியானவரே ... ஆவியானவரே ... பரிசுத்த ஆவியானவரே!*

*எப்படி நான் ஜெபிக்க வேண்டும் எதற்காக ஜெபிக்க வேண்டும்*
*கற்றுத்தாரும் ஆவியானவரே*
*வேத வசனம் புரிந்துகொண்டு விளக்கங்களை அறிந்திட*
*வெளிச்சம் தாரும் ஆவியானவரே*

*கவலை கண்ணீர் மறக்கணும் ... கர்த்தரையே நோக்கணும்*
*கற்றுத்தாரும் ஆவியானவரே*
*செய்த நன்மை நினைக்கணும் ... நன்றியோடு துதிக்கணும்*
*சொல்லித்தாரும் ஆவியானவரே*

*எங்கு செல்ல வேண்டும், என்ன சொல்ல வேண்டும்*
*வழி நடத்தும் ஆவியானவரே*
*உம் விருப்பம் இல்லாத இடங்களுக்குச் செல்லாமல்*
*தடுத்து நிறுத்தும் ஆவியானவரே*

*எதிரிகளின் சூழ்ச்சிகள், சாத்தானின் தீக்கணைகள்*
*எதிர்த்து நிற்க பெலன் வேண்டுமே*
*உடல் சோர்வு, அசதிகள், பெலவீனங்கள் நீங்கி*
*உற்சாகத்தால் நிரம்ப வேண்டுமே*

# 4

# தனித்திருத்தல் எனும் பூர்வ பாதை

Old Path of Solitude






# 4

# தனித்திருத்தல் எனும் பூர்வ பாதை

Old Path of Solitude


லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) என்ற தேவ மனிதனையும் அவரது மனைவியையும் 1985இல் அமெரிக்காவிலுள்ள லின்டேல் எனுமிடத்தில் அவர்களது இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது உலகப் புகழ் பெற்ற *''எழுப்புதல் தாமதிப்பது ஏன்?''* (Why Revival Tarries) என்ற புத்தகம் எனது உள்ளான மனிதனில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, எழுப்புதலுக்கான பசிதாகத்தை என்னில் அனல்மூட்டி எழுப்பியிருந்தது. இப்புத்தகத்தின் இந்தியப் பதிப்பை ஆங்கிலத்திலும் ஒரு சில பிராந்திய மொழிகளிலும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மூலம் வெளியிடும் சிலாக்கியம் எங்களுக்குக் கிட்டியது. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அவர் தேவனது ஒரு தீர்க்கதரிசிதான். அவரது கூற்றுக்கள் பலவற்றை நான் மனனம் செய்திருக்கிறேன். இதோ, அவற்றில் ஒன்று —

''பெரிய கழுகுகள் தனித்துப் பறக்கும்;
பெரிய சிங்கங்கள் தனித்து வேட்டையாடும்;
பெரிய மனிதர் தனித்து நடப்பர்!''

அலுவல்கள் அளவுக்கு மீறியிருக்கும் இவ்வுலகில் தேவனோடு தனித்து நேரம் செலவிடுவது மறைந்த கலையாயிற்று. ஆனால் தொன்றுதொட்டு தேவன் தமது மக்கள் தனித்திருக்கவே வாஞ்சிக்கிறார். திருமறையிலுள்ள இவ்வசனப் பகுதிகளைக் கவனியுங்கள்: எண்ணாகமம் 23:9, ''கன்மலையின் உச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த மக்கள் பிறவினத்தாரோடு கலவாமல் **தனியே** குடியிருப்பார்கள்.'' மீகா 7:14, ''கர்மேலின் நடுவில் **தனித்து** வனவாசமாயிருக்கும் உமது சுதந்

திரமான மந்தையாகிய உமது மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்; **பூர்வ நாட்களில்** மேய்ந்ததுபோலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும் மேய்வார்களாக.'' தனித்திருத்தல் எனும் பூர்வ பாதைக்குத் தெளிவான அழைப்பு இது!

தமது மக்களைப் பலப்படுத்துவதில் தேவனது ''நித்தியமான'' தத்துவம் இதுவே. ஏசாயா 40:28 முதல் 41:1 வரை வாசியுங்கள். இந்த உயரிய வசனப் பகுதி சவால் நிறைந்த சில கேள்விகளுடன் தொடங்குகிறது: ''இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? பூவுலகின் கடையெல்லைகளைப் **படைத்த** கர்த்தராகிய **அநாதி** தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. அவரது புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் வலிமை கொடுத்து, வலிமையிழந்தவனுக்கு ஊக்கத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் **காத்திருக்கிறவர்களோ** புதுப்பலம் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். தீவுகளே, எனக்கு முன்பாக **மவுனமாயிருங்கள்**; மக்கள் தங்கள் பலத்தைப் புதிதாக்கிக்கொண்டு, சமீபமாய் வந்து, பின்பு பேசக்கடவர்கள்!'' ஆம், தேவனோடு தனித்து உட்காரும்போதுதான் நமது ஆன்மீகத் தசைகள் வலுவடையும். ஆனால் இந்த ''நித்தியமான'' சத்தியம் மறக்கப்பட்டுப்போயிற்று. எனவேதான், ''இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ?'' எனும் கேள்விகள்! (வச 28). 21ஆம் வசனத்தில் இன்னும் சில கேள்விகள்: ''நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா? **ஆதிமுதல்** உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா? மண்ணுலகு **அடித்தளமிடப்பட்டது** முதல் உணராதிருக்கிறீர்களா?'' தனித்திருத்தல் எனும் பூர்வ பாதைக்குத் திரும்ப வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே தேவன் இங்கு ''அநாதி'' தேவன் என்றும், ''படைத்தவர்'' என்றும் அழைக்கப்படுகிறார் (வச 28).



காலாகாலமாய்த் தேவன் தமது மக்களைத் தனிமையிலேயே வைத்திருந்து ஆயத்தப்படுத்தி வந்திருக்கிறார். அவர்களில் சிலரை இங்கு சந்திப்போம் —

### ■ மோசே

இவர் 120 ஆண்டுகள் வாழ்ந்தார். அக்காலத்தில் இது குறைந்த வாழ்நாள்தான். அதனால்தான், ''மோசே இறக்கும்போது ... அவர் கண் இருளடையவுமில்லை, அவர் பலம் குறையவுமில்லை'' என்று எழுதப்பட்டிருக்கிறது போலும் (உபா 34:7)! அவரது வாழ்வுக் காலமாகிய 120 ஆண்டுகளைச் சமமாக மூன்று பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். முதல் 40 ஆண்டுகளில் அவர் எகிப்தில் இருந்தார்; அப்பொழுது தன்னைச் ''சாமர்த்தியன்'' (somebody) என்று கருதினார். அடுத்த 40 ஆண்டுகள் அவர் வனாந்திரத்தில் **தனித்திருந்தார்**; அப்பொழுது தன்னை ''ஒன்றுமில்லாதவன்'' (nobody) என்று கற்றுக்கொண்டார். முடிவான 40 ஆண்டுகளில் அவர் இறைமக்களை நடத்திச் சென்றார்; அப்பொழுது தேவனே ''எல்லாமுமானவர்'' (everything) என்று விளங்கிக் கொண்டார்! தேவன் நம்மையும் பொதுவாக இம்மூன்று பகுதிகளின் வாயிலாக அழைத்துச் செல்கிறார். கல்லூரிப் படிப்பை முடித்ததும் நாம் ''சாமர்த்தியர்'' என்று நினைக்கிறோம். பரந்த உலகில் வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கும்போது நமது ஒன்றுமில்லாமையை உணருகிறோம். தவறாய்க் கற்றவைகளை இங்குதான் களையத் துவங்குகிறோம். இவ்விதம் நம்மைத் தேவன் நடத்திச் செல்கையில் அவர் நம்மை வெறுமையாக்கி அவராலேயே நாம் நிறைந்திருக்க வழி நடத்துகிறார். அப்பொழுதான், *"Then sings my soul ..."* என்று கீழ்க் கண்ட பாடலைப் பாடத் துவங்குகிறோம் —

*எல்லாம் என் இயேசுவே, எல்லாம் அவரே;*
*சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவரே;*
*புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றார்*
*எனக்கெல்லாம் இயேசுவே என்றென்றுமே.*

## ■ திருமுழுக்கினன் யோவான்

தனது தாயின் வயிற்றில் இருக்கும்போதே இவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர். ஆனாலும் அது போதாது; அவர் ஆவியில் பலப்படுத்தப்படவேண்டும். இதைத்தான் லூக்கா 1:80இல் வாசிக்கிறோம்: ''அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலப்பட்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரை **பாலைவனத்தில்** இருந்தான்.'' ஒரு கூட்டத்திலோ ஜெப அறையிலோ ஆவியானவரது ஒரு தொடுதலைப் பெற்றதும் நாம் திருப்தியடைந்துவிடுகிறோம். அது போதாது. ஆவியில் பலப்பட்டு வளர நேரமெடுக்கும். எத்தனை ஆண்டுகள் பாலைவனத்திலேயே தேவன் யோவானை ஆயத்தப்படுத்தினார், பாருங்கள்! தீர்க்கதரிசனக் கலாசாலையில் திடீர்ப் பட்டம் பெற்றுவிட முடியாது. ''தேவனால் அனுப்பப்பட்ட மனிதன் ஒருவன் இருந்தான்'' என்ற அறிமுகத்திற்கு ஏற்றவராகும் வரைத் தீர்க்கதரிசியானவன் தனித்திருந்து தேவனது பலத்த கைக்குள் அடங்கியிருக்கவேண்டும் (யோ 1:6). ''தீர்க்கதரிசன வரம் பெறுவோர்'' உடனே வளர்ந்துவிட்டோம் என்று நினைப்பதாலேயே ''தீர்க்கதரிசிகள்'' எனும் நிலையை எட்டுவதில்லை. எந்த அளவிற்குத் தேவனோடு அடைபட்டுக் கிடக்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் தீர்க்கதரிசிகள் பயனுள்ளவர்களாயிருக்க முடியும். விளம்பரமும் பிரபலமும் தீர்க்கதரிசிகளுக்குப் பிடிக்காது.

## ■ இயேசு

திருமுழுக்கு பெற்றுத் தண்ணீரிலிருந்து வெளிவந்தபோது இயேசுவின்மீது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார். அது போதவில்லை. ''பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய்'' அவர் ''ஆவியானவரால் நடத்தப்பட்டு'' **பாலைவனத்திற்குச்** சென்றார் (லூக் 4:1) இது 40 நாட்கள் உபவாசத்தோடு தமது பிதாவோடு தனித்திருப்பதற்காகவே. அந்நாட்களில் பிசாசினால் சோதிக்கப்பட்ட பின்னர் அவர் ''ஆவியானவரது பலத்தினால்'' கலிலேயாவிற்குத் திரும்பினார் (வச 14). நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, நாம் ஆவியானவரோடுள்ள துவக்க அனுபவத்திலேயே திருப்தியடைந்துவிடுகிறோம்.



பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பது ஒரு குறிப்பிட்ட சமயத்தில் கிடைக்கும் அனுபவம். நாம் தொடர்ந்து ஆவியினால் ''நிரப்பப்பட்டுக்கொண்டிருக்க'' வேண்டும் (எபே 5:18). தேவனோடு தனித்திருந்து நம்மை வெறுமையாக்குவதாலேயே இது சாத்தியம். அப்பொழுதுதான் நாம் ''கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும்'' பலப்படமுடியும் (எபே 6:10).

## ■ அப்போஸ்தலன் பவுல்

தமஸ்கு சாலையில் பவுலுக்குக் கிடைத்த அனுபவம் அசாதாரணமானது. மூன்று நாள் பார்வையின்மை எனும் ஆசீர்வாதத்தைத் தேவன் அவருக்கு அருளினார்! பார்வையிழப்பு எனும் அவ்வனுபவம் அவரது ஆன்மீகக் கண்களைத் திறந்தது. ஆனால் அவரிடமிருந்த தவறான கருத்துக்களையும் தத்துவங்களையும் களைவதற்கு (unlearn) மூன்று நாட்கள் போதாது. கலாத்தியக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது இதை அவர் குறிப்பிடுகிறார்: கலா 1:15-18, ''நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து, தமது கிருபையினால் அழைத்த தேவன், தமது குமாரனை நான் புறவினத்தாரிடம் சுவிசேஷமாய் அறிவிப்பதற்காக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் எந்த மனிதரோடும் யோசனை பண்ணாமலும், எருசலேமுக்குப் போகாமலும், அரபி நாட்டிற்குப் புறப்பட்டுப்போய் மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தேன். மூன்று ஆண்டுகள் சென்றபின்பு எருசலேமுக்குப் போனேன்.'' தண்ணீரிலும் ஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்றவுடன் தனது ஊழியத்தைப் பவுல் துவங்கவில்லை (அப் 22:16; 9:17). அரேபியப் பாலைவனமே அவருக்கு வேதக் கலாசாலையாய் அமைந்தது. தேவன் அவரைத் தனிமையில் வைத்து ஆயத்தப்படுத்தினார். ஊழியத்தை அவர் துவங்கிய பின்னரும், கிறிஸ்துவின் மகிமையையும் சபையைக் குறித்த இரகசியத்தையும் அவருக்குத் தனிமையில் வெளிப்படுத்தத் தேவன் அவரை அடிக்கடி சிறைக்கு அனுப்பினார். தனிமையில் இவ்வளவு காலங்களை அவர் அனுபவித்திராவிடில் நமக்கு இத்தனை நிருபங்களை எழுதித்தர அவருக்கு நேரம் கிடைத்திருக்காது!

தனித்திருத்தலினால் கிட்டும் பல்வேறு நன்மைகளில் முக்கிய மான மூன்றினை இங்கே விளக்குகிறேன் —

## 1. தேவனோடு நெருக்கவுறவு ஏற்படுத்த

ஒருவரோடொருவர் தனித்திருக்கவே காதலர் விரும்புவர். அவர் களைச் சுற்றி மக்களிருப்பது அவர்களுக்குப் பிடிக்காது. இந்தியக் கலாச்சாரமோ புதுத்தம்பதிகளைத் தனித்திருக்க விடாது. வீடு சந் திப்புகளும் விருந்து அழைப்புகளும் அவர்கள்மீது திணிக்கப்படும். சாலமோனின் உன்னதப்பாட்டில் சூலேமியாள் தனது நேசரிடம் சொன்னது இக்குறிப்பை வலியுறுத்துகிறது: ''வாரும், என் நேசரே! வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம். அதிகாலை யிலே திராட்சத் தோட்டங்களுக்குப் போவோம்; திராட்சக் கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளம் செடிகள் பூப்பூத்த னவோ என்றும் பார்ப்போம்; அங்கே எனது நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்'' (உன் 7:11,12). தனது இரட்சகரோடு தனித் திருந்து நெருக்கவுறவு கொள்ள வாஞ்சிக்கும் இதயத்தின் துடிப்பைத் திருமறையில் வேறெந்தப் பகுதியும் இவ்வளவு அழகாய்ச் சித்திரிக்க வில்லை. கிறிஸ்துவே மணமகன்; நாம் அவருக்கு மணமகளாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறோம். இனிதான் திருமணம். இது காதல் காலம்.

மணமகன்-மணமகள் எனும் உறவு மட்டுமின்றி, தந்தையாம் தேவனோடு நாம் பிள்ளைகளாகவும் நெருக்கவுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது தேவனது குடும்பத்திற்குள் பிள்ளைகளாய்ப் பிறக்கிறோம் (யோ 1:12). இது பொதுவான உறவு. தேவன் நம்மோடு இன்னும் ஆழ்ந்த ஐக்கியத்தை விரும்புகிறார். உலகோடு சரசம்பண்ணுவதை அவரால் சகிக்கமுடியாது. 2 கொரிந்தியர் 6:17,18இல் அவர் தரும் அழைப் பைக் கவனியுங்கள்: ''நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்க ளுக்கு அப்பாவாயிருப்பேன்; நீங்கள் எனக்கு மகன்களும் மகள்களு



மாயிருப்பீர்கள் என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.'' அவர் சர்வ வல்ல தேவனாயிருந்தும், அப்பா-பிள்ளை எனும் உற விலேயே அவருக்கு நாட்டம்! உலகோடுள்ள நமது நட்பை அவர் சகித்துக்கொள்ளமாட்டார் (யாக் 4:4).

இயேசுவானவர் எப்பொழுதுமே தமது பிதாவானவரோடு இவ் வித நெருக்கவுறவையே நாடினார். எடுத்துக்காட்டாய்ச் சில பகுதி களைப் பார்ப்போம். திருமுழுக்கினன் யோவான் படுகொலை செய் யப்பட்டதை இயேசுவின் சீடர் அவரிடம் சொன்னபோது, ''அவர் அவ் விடம் விட்டுப் படகில் ஏறி, **வனாந்தரமான** ஓரிடத்திற்குத் **தனியே** போனார்'' (மத் 14:12,13). இயேசு இருந்த சீமோன் பேதுருவின் வீட்டு வாசலில் கப்பர்நகூமில் உள்ள அனைவரும் திரண்டுவந்து நின்றனர். பல்வேறு வியாதிகளினால் அவதியுறுவோரை அவர் குணப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தினார். அடுத்த நாளே அவர் செய் ததைக் கவனியுங்கள்: ''அவர் அதிகாலையில் இருட்டோடு எழுந்து புறப்பட்டு, **வனாந்தரமான** ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்'' (மாற் 1:32-35). தமது பிதாவோடு தனித்திருக்கவேண்டுமென்ற வாஞ்சையினால் அவர் ஐந்து மணிக்கு முன்னரே எழுந்துவிட்டார்! அனுதினக் கடமைகளும் வேலைப்பளு வும் அதிகமாயிருப்பதால் தேவனோடு தனித்திருக்க நேரம் கண்டு பிடிப்பது அரிதாயிருக்கிறது என்று நாம் அடிக்கடி சொல்லுகிறோம். எவ்வளவு வேகமாய் அவரது ஊழியம் வளர்ந்துகொண்டிருந்தாலும் இயேசுவானவர் இவ்விதச் சாக்குப்போக்குகள் சொல்லவில்லையே. லூக்கா 5:15,16ஐ வாசியுங்கள்: ''அவரது புகழ் அதிகமாய்ப் பரவியது. திரளான மக்கள் அவரது உபதேசத்தைக் கேட்கவும், அவரால் தங்கள் நோய்கள் நீங்கிச் சுகமடைவதற்கும் கூடிவந்தார்கள். அவரோ **வனாந்தரத்தில் தனித்துப்போய்** ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.'' வேலை பெருகப் பெருக தேவனோடு செலவழிக்கும் வேளையும் அதிகரிக்கவேண்டும். பரவசமான ஊழிய அறிக்கையுடன் சீடர்கள் இயேசுவிடம் திரும்பிவந்தபோது, அவர் அவர்களுக்குச் சொன்னது: ''வனாந்தரமான ஓரிடத்தில் **தனித்துச்** சற்றே இளைப்பாறும்படிப் போவோம், வாருங்கள்'' (மாற் 6:30,31). பிரபலமாகிக்கொண்டே

போகும் சுகமளிப்பு ஊழியர் கற்கவேண்டிய அதிமுக்கிய பாடம் இது. தேவனோடு அவர்கள் செலவழிக்கும் நேரம் குறையுமானால், வழிவிலகல்களுக்கும் வஞ்சகங்களுக்கும் கதவைத் திறக்கிறார்கள் என்று பொருள். தேவனுக்காய் அதிகம் செயல்பட விரும்புவோர் தேவனோடு அதிக நேரம் செலவிடவேண்டும்.

''நான் தனித்திருக்கவில்லை'' என்று இயேசு அடிக்கடி சொன்னதைக் கவனித்திருக்கிறீர்களா? (யோ 8:16,29;16:32). பூவுலகிலிருந்தபோது பிதாவோடு அவர் வைத்திருந்த நெருக்க உறவு பிதாவோடு அவருக்கிருந்த நித்திய உறவின் தொடர்ச்சிதான். நீதிமொழிகள் 8:30,31இல் இது அழகாய் வர்ணிக்கப்பட்டுள்ளது: ''நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாய் இருந்தேன்; தினமும் அவரது மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவரது முன்னிலையில் மகிழ்ந்தேன். அவருடைய பூவுலகில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடன் ஆனந்தித்துக்கொண்டிருந்தேன்.'' இதைத்தானே நாம் யோவான் 1:1-3இல் வாசிக்கிறோம்? ''ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தில் (அல்லது தேவனோடு) இருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது.'' மறுபிறப்பினால் நமக்குத் தேவனோடு கிடைத்துள்ள பொதுவான ஐக்கியத்தில் திருப்தியடைந்துவிடாதீர்கள். நெருக்கவுறவின் மூலமாகத்தான் ஐக்கியத்திலிருந்து (fellowship) நட்புறவுக்குள் (friendship) வருகிறோம். இதுவே தேவனது ஏக்கம்; நமது ஏக்கமும் அதுவாகவே இருக்கவேண்டும். இயேசு தமது சீடரிடம் சொன்னதை இங்கு நினைவுபடுத்துவோம்: யோவான் 15:15, ''இனி நான் உங்களை வேலைக்காரர் என்று சொல்லுகிறதில்லை; வேலைக்காரனுக்குத் தனது தலைவன் செய்வதெல்லாம் தெரியாது நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்; ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.'' எவ்வளவு நேர்த்தியாய் நமதாண்டவர் நம்மைப் பிதாவோடு இணைத்துவிடுகிறார், பாருங்கள்! தேவனது தந்தைத்துவத்தை மட்டுமல்ல, அவரது சிநேகத்தையும் வெளிப்படுத்தவே இயேசு வந்தார். என்னே சிலாக்கியம்!



ஆபிரகாம் ''தேவனுடைய சிநேகிதன்'' என்றழைக்கப்பட்டார் என்று அப்போஸ்தலன் யாக்கோபு குறிப்பிடுகிறார் (யாக் 2:23). இது தேவன் கூறியதின் அடிப்படையிலானது: ''நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?'' (ஆதி 18:18). ஒருவருக்கொருவர் காரியங்களைப் பகிர்ந்துகொள்வதால் உருவாகும் நெருக்கவுறவே இங்கு பொருள். இதைத்தானே இயேசுவும் தமது சீடரிடம் சொன்னார்? (யோ 15:15). இது மோசேயைக் குறித்தும் சொல்லப்பட்டது: ''ஒருவன் தனது **நண்பனோடு** பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடு முகமுகமாய்ப் பேசினார்'' (யாத் 33:11). தேவனோடு தனித்து நேரம் செலவழிக்காமல் இவ்வித நெருக்கவுறவு சாத்தியமன்று. நமது ஜெப அறைக்குள் நுழைந்ததும் கதவைப் பூட்டும்படி இயேசு நமக்குக் கற்பித்ததில் ஆச்சரியமில்லையே (மத் 6:6). ஆன்மீகப் பயிற்சிகளில் பெரும்பாலானவை இரகசியமாய்த் தனிமையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும். பகட்டுக்கான வேட்கையே இந்நாளின் சாபம்.

தமது சீடரை இயேசு தெரிந்தெடுத்தது ஏன்? இரு முக்கிய நோக்கங்கள் மாற்கு 3:14இல் தரப்பட்டுள்ளன: ''அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடு இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படித் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும் அவர்களை ஏற்படுத்தினார்.'' முதன்மையான நோக்கம் அவர்கள் ''அவரோடு'' இருக்கவேண்டும் என்பதே. ஐக்கியம்! நட்பு! நெருக்கவுறவு! தேவனோடுள்ள நெருக்கவுறவினாலேயே கனிநிறை ஊழியம் பிறக்கிறது. நாம் தேவனுக்கு ''உடன் வேலையாட்களாய்'' இருக்கிறோம் (1 கொரி 3:9). ஊழியத்தில் வெற்றியாய் அல்ல, கனிநிறைவாய் இருக்கும்படியே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். கிறிஸ்துவில் நிலைத்திருப்பதின் மூலமாகவே கனிநிறைவுண்டாகும் (யோ 15:4,5). கிறிஸ்துவில் நிலைத்திருப்பது எளிதல்ல. இறைவன் எனும் இயந்திரத்தில் நாம் உதிரிப் பாகங்கள் அல்ல; இயேசு எனும் செடியில் நாம் கொடிகள். இயற்கைக்கு அப்பாற்பட்ட இயற்கை! (Supernaturally natural!)

## 2. தேவனுடைய வார்த்தையைத் தியானிக்க

இறைவார்த்தையைத் தியானிக்கும்படி நம்மை அதில் ஊற்றிவிடுவதற்குச் சந்தடி நிறைந்த உலகிலிருந்து தனித்து வருவது அத்தியாவசியம். தனது இறப்பிற்குமுன் இஸ்ரவேல் மக்களுக்குத் தனது இறுதி ஆசீர்வாதத்தைக் கூறும்போது மோசே சொன்னது: உபா 33:3, ''மெய்யாகவே அவர் மக்களைச் சிநேகிக்கிறார்; உமது பரிசுத்த வான்கள் எல்லாரும் உமது கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உமது பாதத்தில் விழுந்து, உமது **வார்த்தைகளினால்** போதனையடை வார்கள்.'' தேவன் நம்மைச் சிநேகிக்கிறார் என்று சொல்லும்போது அது நம்மோடுள்ள அவரது நெருக்கத்தைக் குறிப்பிடுகிறது. நாம் அவரது பாதத்தில் உட்காருகிறோம் என்பது தேவனோடுள்ள நமது நெருக்கவுறவைக் காட்டுகிறது. இதன் விளைவு அவரது வார்த்தை கள் நமது இதயங்களில் ஊற்றப்படுவதே.

இயேசுவின் பாதத்தருகில் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டேயிருக்க விரும்பிய மரியாளை மேற்கூறிய வசனம் நமக்கு நினைப்பூட்டவில்லையா? இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து மரியாள் ''அவருடைய **வசனத்தைக்**'' கேட்டுக்கொண்டிருந்தாள் என்று வாசிக்கிறோம் (லூக் 10:39). பயனற்ற வேலையில் மார்த்தாள் ஈடுபட்டிருந்தாள் என்று சொல்லிவிட முடியாது. அன்று சமையலறை யிலிருந்து அவள் உணவு வகைகளை ஆயத்தப்படுத்தாதிருந்தால், இயேசுவையும் சேர்த்து வீட்டிலுள்ளோருக்கு ஆகாரம் இருந்திருக் காது! இயேசுவோ மரியாளைப் பாராட்டிய வார்த்தைகளைப் பாருங் கள்: ''தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்'' (வச 42). ''முக்கியம்'' (important) என்பதற்கும் ''அவசியம்'' (necessary) என்பதற்குமுள்ள வேறுபாட்டை அறிந்து நாம் காரியங்களைத் தெரிந்தெடுக்கவேண் டும் என்பதே இயேசு கற்பிக்க விரும்பும் படிப்பினை. தேவனோடு தனித்து நேரம் செலவிடுவதே நமது வாழ்வில் முன்னுரிமை பெற வேண்டும். இதோ யோபுவின் சாட்சி: ''அவரது வாயின் **வார்த்தை களை** எனக்கு வேண்டிய ஆகாரத்தைவிட அதிகமாய்க் காத்துக் கொண்டேன்'' (யோபு 23:12ஆ). வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டுத் தியானிக்க உட்காருவதைவிட, தியானித்தபின் சாப்பிடுவது மேல் (மாற் 6:34-36).



தேவனது வார்த்தையைத் தியானிப்பதற்காகத் தனித்து உட் காருவது பழம் பரிசுத்தரின் தொன்றுதொட்ட வழக்கமாய் இருந்து வந்திருக்கிறது. சங்கீதக்காரனும் தீர்க்கன் எரேமியாவும் இதற்குச் சிறந்த முன்மாதிரிகள். அவசரப்படாமல் பிரியத்துடன் அமர்ந்திருந்து வேதத்தைத் தியானிக்கும்படித் துன்மார்க்கருடைய ஆலோசனையை யும், தீயோருடைய வழியையும், பகடிபண்ணுவோருடைய இருக் கையையும் தவிர்த்துவிடுவதின் ஆசீர்வாதத்தைச் சங்கீதக்காரன் குறிப்பிட்டார் (சங் 1:1,2). தீர்க்கன் எரேமியாவின் அதுபோன்ற சாட்சியைக் கவனியுங்கள்: ''கர்த்தாவே, உமது வார்த்தைகள் கிடைத் தவுடன் அவைகளை உட்கொண்டேன்; உமது வார்த்தைகள் எனக்கு ஆனந்தமும் என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தன ... நான் பரிகசிப்போரது கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கரத்தின் பொருட்டுத் **தனித்து** உட்கார்ந்தேன்'' (எரே 15:16,17). திருவசனத்தை நாம் அமைதியாய்த் தியானிக்கவேண்டிய நேரத்தைத் திருடுவோரைக் குறித்துக் கவனமாயிருக்கவேண்டும் என்பதையே இவ்விரு தேவ மனிதரும் நமக்குப் போதிக்கின்றனர்.

பிரசங்கிகளாகிய என் நண்பர்களுக்கு ஒரு சில வார்த்தைகள்: எல்லா அழைப்புகளையும் ஏற்று எல்லா வைபவங்களிலும் கலந்து கொள்ள விரும்பாதீர்கள். இயேசுவானவர் ஒன்றுவிடாது திருமணங் களில் பங்கேற்கவில்லை. அவர் கலந்துகொண்ட ஒரு கலியாணத் தைக் குறித்து நான்கு சுவிசேஷங்களில் ஒன்று மட்டுமே குறிப்பிட் டுள்ளது. அளவுக்குமீறிச் சந்திப்புகளும் சந்திப்போரும் வேண்டாம். நான் வெளியூர் ஊழியங்களுக்குச் செல்லும்போது வீடு சந்திப்புகளை வெகுவாய்க் குறைத்துக்கொள்ளுகிறேன். இரு பிரசங்கங்களுக் கிடையில் ஓய்வெடுக்கவும் புத்துணர்வடையவும் எனக்கு நேரம் தேவையில்லையா? எனது ஆன்மீக மின்கலன்கள் (Spiritual Batteries) விசையேற்றப்படவேண்டுமே. ''இல்லை'' என்று சொல்லப் பழகுங் கள்; ''இல்லை'' என்பதை ஏற்க மக்களைப் பழக்குவியுங்கள். உங் களைச் சந்திக்க வருவோரின் எண்ணிக்கையைக் குறைத்திடுங்கள்; வெட்டிப் பேச்சை அகற்றுங்கள். இங்கு நீங்கள் கவனமாயிராவிடில், உங்கள் பிரசங்கங்களில் மரண வாசனையைத் தவிர்க்கமுடியாது. பிரசங்க பீடத்தில் ஏறும்போதெல்லாம் மக்களுக்குப் புதிய மன்னாவைக் கொடுக்கும்படி நான் கொடுக்கும் இந்த ஆலோச னையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்களுக்குத் தினசரி அமைதி வேளை (Quiet Time) உண்டா? தேவனோடு நாம் தினமும் செலவழிக்கும் நேரத்திற்கு ''அமைதி'' வேளை என்று பெயரிட்ட முன்னோரைப் பாராட்டுகிறேன். கவனச் சிதறல்கள் அத்தனையும் அகற்றப்படவேண்டும் என்பதே இதற்குப் பொருள். இறைவார்த்தையைத் தியானிக்க இறைப்பிரசன்னத்தில் உட்காரச் செல்லும்போது உங்கள் கைபேசியை (mobilephone) அணைத்துவிட மறவாதேயுங்கள். இதை 11ஆம் கட்டளையாய்க்கூட நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். இப்பூவுலகில் நமது வாழ்நாட்கள் சொற்பம்; அதிலும் தேவனோடு தனித்துச் செலவிடும் நேரம் மிக மிகக் குறைவு. தேவனோடு நேரம் குறிப்பிட்டுச் செலவிடும் வேளையில் தொலைபேசி அழைப்புகளெல்லாம் காத்திருக்கலாமே? தங்களது ஆன்மீக வளர்ச்சி தடைபடாதபடி வாலிபர் நங்கையர் இங்கு மிகக் கவனமாயிருக்கவேண்டும். தனக்குப் பெண் தேடப்படும் காலமாயிருந்தாலும், வாலிபனான ஈசாக்கு தனது வழக்கமான தனித் தியான வேளையை வயல் வெளிகளில் செலவிடத் தவறவில்லை (ஆதி 24:63). இன்றைய வாலிபரோ பெண் வேட்டையில் பைபிளைத் தொலைக்கின்றனர்! தனக்காகக் கர்த்தர் யாவையும் செய்துமுடிப்பார் என்ற நிச்சயம் ஈசாக்கிற்கு இருந்தது (சங் 138:8அ).

இன்றைய மார்க்கவுலகில் பரவசத்திற்குத்தான் பெரும் கவர்ச்சி. கிறிஸ்தவமே கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் என்றுதானிருக்கிறது. நற்செய்திப் பேராணையை நிறைவேற்ற முடிந்த தூரம், முடிந்த வேகத்தில் செல்லவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இதுவும் கூட சில வேளைகளில் நாம் தேவனோடு திறந்த வேதத்தோடு தனித்து உட்காருவதற்கு இடையூறாகலாம். இயேசுவின் தாயாகிய மரியாள் இங்கு ஓர் உன்னதமான எடுத்துக்காட்டு. குழந்தை இயேசுவைப் பார்த்துவிட்ட மேய்ப்பர்கள் அச்செய்தியை எங்கும் பரப்பினர். கேட்ட யாவரும் ஆச்சரியப்பட்டனர். ''மரியாளோ'' அந்தச் சங்கதிகளையெல்லாம் தனது இருதயத்தில் வைத்துச் சிந்தனைபண்ணினார் (லூக் 2:17-19). அப்படியே, இளைஞன் இயேசுவுக்கிருந்த வேத அறிவையும், போதகர்களின் கேள்விகளுக்கு அவர் தந்த பதில்களையும் கவனித்தோர் மிகுந்த வியப்படைந்தனர். ''என் பிதாவுக்கடுத்தவை'' என்று இயேசு சொன்னதை அவரது பெற்றோர் புரிந்துகொள்ளமுடியவில்லை. ''மரியாளோ'' இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்தில் வைத்துக்கொண்டார் (லூக் 2:46-51). கன்வென்ஷன்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்கெல்லாம் ஓரிடமுண்டு; ஆனால் இவையொன்றும் தேவனோடு தனித்திருந்து அவரது வசனத்தைத் தியானிப்பதற்குப் பதிலாகிவிடக்கூடாது. சென்னை, பெங்களூரு, ஹைதரபாத் போன்ற நகர்க் கிறிஸ்தவர்கள் இக்காரியத்தில் கூடுதல் கவனமாயிருக்கவேண்டும். இல்லையேல், சிறப்புக் கூட்டங்களே உங்களைக் கொன்றுவிடும்! (You may die of meeting-itis!).



நாம் தனித்து தேவனோடு செலவழிக்கும் வேளைகளில்தான் பெரும்பாலும் அவர் தமது வசனத்திலிருந்து புதிய வெளிப்பாடுகளை நமக்குத் தருவார். இரு கற்பலகைகளுடன் சீனாய் மலைக்கு வரும்படி மோசேயைக் கர்த்தர் அழைத்தபோது குறிப்பாய்ச் சொன்னது: ''உன்னோடு ஒருவனும் அங்கு வரக்கூடாது; மலையில் எங்கும் ஒருவனும் காணப்படவும் கூடாது; இந்த மலையின் அருகில் ஆடுமாடுகள் மேயவும் கூடாது'' (யாத் 34:3). இதிலுள்ள தத்துவம் தெளிவுதானே? அப்படியே, தாவீதின் அனுபவத்தைப் பாருங்கள்: ''எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இரவு வேளைகளிலும் என் இருதயம் என்னை உணர்த்தும். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்'' (சங் 16:7,8). தங்களது வாழ்வுக்கும் பணிக்கும் தேவையான குறிப்பான நடத்துதல்களை இரவு வேளைகளில் தேவன் தருகிறாரென்பதே திருவசனத் தியானத்தில் ஒழுங்கும் கிரமமுமாயிருக்கும் பலரது சாட்சி. இரவு வேளைகளில் சாமுவேலோடு தேவன் பேசிவந்தார் (1 சாமு 3:3,4;15:16). இயேசுவைக் குறித்து இப்படி வாசிக்கிறோம்: லூக் 21:37,38, ''அவர் பகல் வேளைகளில் தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்து, இரவு வேளைகளில் வெளியே போய், ஒலிவ மலை எனப்பட்ட மலையில் தங்கிவந்தார். மக்களெல்லாரும் அவரது உபதேசத்தைக் கேட்க அதிகாலமே அவரிடம் வருவார்கள்.'' மக்களிடம் பேசுவதற்குமுன் இயேசு தனித்துப் பிதா பேசக் கேட்க நேரமெடுத்தார். இதே பயிற்சியைத்தான்

அவர் தமது சீடருக்கும் கொடுத்தார். மத்தேயு 10:27, ''நான் உங்களுக்கு இருளில் சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்தில் சொல்லுங்கள்; காதில் கேட்பதை நீங்கள் வீடுகளின் மேலிருந்து அறிவியுங்கள்.'' ''கர்த்தாவே, உமது வெளிச்சத்தில் வெளிச்சம் காண்கிறோம்'' என்று தாவீது அறிக்கையிட்டதின் பொருள் இதுவே (சங் 36:9ஆ).

தனித்திருந்து திருவசனத்தைத் தியானிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதின் இன்னொரு காரணம் அது தற்பரிசோதனைக்கு நமக்குப் பெரிதும் உதவுகிறது. புலம்பல் 3:25, 28,40, ''தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் ... அவன் **தனித்திருந்து** மவுனமாயிருக்கட்டும் ... நாம் நமது வழிகளைச் சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடம் திரும்புவோம்.'' இதுவே தாவீதின் ஜெபம்: சங்கீதம்: 26:2, ''கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப் பாரும்; எனது மனதையும் இருதயத்தையும் புடமிட்டுப் பாரும்.'' இதே விதமாக, சங்கீதம் 139:23,24, ''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடம் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.'' இந்த விண்ணப்பங்களிலெல்லாம் தனிப்பட்ட தற்பரிசோதனை என்பது தெளிவாகிறது அல்லவா? ''என்னைச்'' சோதித்துப் பாரும்! ''என்னைப்'' பரீட்சித்துப் பாரும்! ''என்னை'' ஆராய்ந்து பாரும்! 1971இல் நிறுவப்பட்ட ஆசீர்வாத இளைஞர் இயக்க (BYM) வருடாந்திர முகாம்களில், கருப்பொருள் (theme) எதுவாயிருந்தாலும், முதலாம் செய்தி பரிசுத்தத்தைப்பற்றியே இருக்கும். அதைத் தொடர்ந்து தற்பரிசோதனைக்காக முகாமியருக்கு ஒரு கேள்விப் பட்டியல் தாள் வினியோகிக்கப்படும். இந்தச் சுத்திகரிப்பின் வேளைதான் அடுத்த இரு நாட்களில் கொடுக்கப்படவிருக்கும் செய்திகளுக்கு முகாமியரை ஆயத்தப்படுத்தும். தங்களை அடிக்கடித் தற்பரிசோதனை செய்துகொள்ள இக்கேள்வித்தாளை முகாமியர் தங்கள் வேதப் புத்தகத்திற்குள் வைத்துக்கொள்வார்கள். இந்நாட்களிலோ பல முகாம்களில் இவ்விதப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதில்லை என்பது துக்கமான



காரியம். தண்ணீர் அமர்ந்தால்தான் அழுக்குகள் மேலே மிதக்கும்; அதுபோலவே, நாம் தேவனது ஆராயும் பிரசன்னத்தில் அமர்ந்து உட்காரும்போதுதான் நமது குற்றங்களும் குறைபாடுகளும் தெரியத் துவங்கும்.

தனித்திருத்தல் எனும் பழக்கம் குறைவதாலேயே புத்தக வாசிப்பும் குறைந்துவருகிறது. வாங்கியும் வாசிக்கப்படாமல் எத்தனையோ புத்தகங்கள் நமது அலமாரிகளில் தூங்குகின்றன. சிறையிலடைக்கப்பட்டிருந்தபோது தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதியது நினைவிருக்கிறதா? 2 தீமோத்தேயு 4:13, ''எனது மேலங்கியையும், **புத்தகங்களையும்**, குறிப்பாகத் தோல் சுருள்களையும், நீ வரும்போது எடுத்துக்கொண்டுவா.'' தலைசிறந்த கிறிஸ்தவ நூல்களை அவ்வப்போது வாசித்துவந்தால்தான் நமது ஆன்மீக அனலைக் காத்துக்கொள்ள முடியும். மென்பொருள் நூல்கள் (e-books) அச்சடிக்கப்பட்ட பிரதிகளுக்கு மாற்றாக முடியாது. ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது அடிக்கோடிட வேண்டும், வசனக் குறிப்புகளைச் சேர்க்கவேண்டும், தேதி குறிப்பிடவேண்டும், இப்படிப் பல. அதே புத்தகத்தைப் பின்னொரு நாளில் வாசிக்கும்போது இக்குறிப்புகள் கூடுதல் ஆசீர்வாதம் தரும். ஆன்மீக நூல்களை வாசிப்பதற்கென்றே உங்கள் வேலையிலிருந்து இரண்டு மூன்று நாட்கள் விடுப்பு எடுத்துக்கொள்ளுங்கள். பிரசங்கப் பீடம் ஏறுவோர் நிறைய வாசிக்கவேண்டும்.

## 3. மன்றாட்டு ஜெபத்தில் நம்மை ஊற்றிவிட

பழைய ஏற்பாட்டு மன்றாட்டு வீரரில் தீர்க்கன் எரேமியா முக்கியமானவர். அவரது இதயக் கதறலைக் கேளுங்கள்: எரே 9:1,2, ''ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் மக்களாகிய மகள் கொலை செய்யப்படக் கொடுத்தவர்கள் பொருட்டு நான் இரவும் பகலும் அழுவேன். ஆ, வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தங்குமிடம் எனக்கு இருந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் என் மக்களைவிட்டு, அவர்களிடம் இராதபடிப் போய்விடுவேன்.'' பரிசுத்த மன்றாட்டுக்காகத் தனிமை நாட்டம்! குழு ஜெபங்கள் முக்கியம்தான். தமது பெயரில்

இரண்டு மூன்றுபேர் கூடிவருவதையே இயேசு கனம்பண்ணுகிறார். ஆனாலும் தனி நபர்களாக நாம் கூட்டு ஜெபங்களுக்கும் அப்பால் செல்லவேண்டும். அங்குதான் விண்தந்தைக்கு முன்னர் நமது இதய உணர்வுகளைக் கொட்டிவிடமுடியும்.

திருவிவிலியத்தில் நாம் சந்திக்கும் முதல் மன்றாட்டு வீரர் ஆபிரகாம்தான். தேவனோடு அவர் தனித்திருக்கும்போதுதான் சோதோமுக்காய் ஜெபித்தார். அந்த மூன்று மனிதர் சோதோமை நோக்கிப் போன பின்பு ''ஆபிரகாமோ பின்னரும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார்'' (ஆதி 18:22). சோதோமின் மீது இரக்கமாயிருக்கும்படி ஆபிரகாம் 23ஆம் வசனம் முதல் 32ஆம் வசனம் வரை கெஞ்சினார். அது தேவனோடு ஆபிரகாமின் தனிப்பட்ட சந்திப்பு. 33ஆம் வசனத்தை வாசிக்கும்போது இது தெளிவாகிறது: ''கர்த்தர் ஆபிரகாமுடன் பேசி முடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிரகாமும் தனது இடத்திற்குத் திரும்பினார்.''

தனித்து ஜெபத்தில் தரித்திருப்பது இயேசுவுக்கு வாடிக்கை. ஐந்தப்பம் இருமீன் மட்டும் கொண்டு ஐயாயிரத்துக்கும் அதிகமானோருக்கு உணவளித்தது சாதாரண அற்புதமல்ல. அதைத் தொடர்ந்து இயேசு உடனே என்ன செய்தார் பாருங்கள்: மத் 14:22,23, ''இயேசு மக்களை அனுப்பிவிடும்போது, தமது சீடர் படகில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். அவர் மக்களை அனுப்பிவிட்ட பின்பு, **தனித்து** ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே **தனிமையாயிருந்தார்**.'' இது நமது பழக்கமில்லையே. ஒரு நிகழ்ச்சிக்குமுன் அது வெற்றியாய் நடந்தேற நிறைய ஜெபிப்போம். கூட்டமோ நிகழ்ச்சியோ நடந்துகொண்டிருக்கும் வேளையிலும் ஜெபம் ஏறெடுக்கப்பட ஒழுங்குசெய்வோம். ஆனால் ஒரு நிகழ்ச்சி வெற்றிகரமாய் முடிவடைந்த **பின்னர்** எவ்வளவு ஜெபிக்கிறோம்? பொதுவிடத்தில் அற்புதம் ஒன்றை எல்லாருக்கும் முன்பாக நிகழ்த்திவிட்ட இயேசுவின் இதயம் பிதாவோடு தனித்து ஐக்கியப்படத் துடித்தது. இங்கு நாம் கற்கவேண்டிய சத்தியம் என்னவெனில், தேவன் நம்மை அதிக



மதிகமாய்ப் பயன்படுத்தும்போது நாம் அவரோடு தனித்திருக்கும் நேரமும் அதிகரிக்கவேண்டும். இல்லையேல், மாபெரும் வெற்றிகள் மாபெரும் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்! இது கவனிக்கவேண்டியதோர் எச்சரிப்பு!

இயேசுவானவர் தனித்திருப்பதை வெகுவாய் வாஞ்சித்ததே அவரை யோவான் அல்லது எலியா அல்லது எரேமியா என்று மக்கள் நினைத்திருப்பதற்குக் காரணமாயிருந்திருக்கலாம் (மத் 16:14). இம்மூன்று மனிதரும் தனித்திருத்தலுக்கும் மன்றாட்டு ஜெபத்திற்கும் பெயர்பெற்றவர்கள். யோவான் வனாந்திரத்தில் வளர்ந்தவர். அவரைக் குறித்த அத்தனையிலும் எளிமை இருந்தது: உடை, உணவு, உபதேசம். பிறதெய்வங்கள் பின்னால் மக்கள் விரைந்தபோது தீர்க்கன் எலியா தனித்து நின்றார். அவர் நம்மைப்போலப் பாடுள்ளவராயிருந்தாலும் ஜெபத்தில் ஊக்கமாயிருந்தார் (யாக் 5:17,18). எரேமியாவைப் புலம்பல் தீர்க்கதரிசி எனலாம். இயேசுவும் பாடுகள் நிறைந்தவராய், அக்கிரமக்காரருக்காய் வேண்டிக்கொண்டார் (ஏசா 53:3,12). எரேமியாவைப் போலவே இயேசுவும் எருசலேமைப் பார்த்து அழுதார் (லூக் 19:41; புல 1:8,17). சோதோம், கொமோரா போல நமது நகர்கள் மாறிவருகின்றன. நமது சபைகளும் சங்கங்களும் நிறுவனங்களும் வெட்டப்பட்ட எருசலேம் குமாரத்திபோல் கிடக்கின்றன. தனிமையில் அழுவதற்கு இது போதாதா?

தனிமையில் ஜெபிக்கும் பழக்கம் கிறிஸ்தவர்கள் நடுவில் மறைந்து வருகிறது. முழுப்பகல் ஜெபக் கூடுகைகளுக்கும், முழு இரவு ஜெபங்களுக்கும் விரையும் மக்கள் தனி ஜெபத்தில் ஒரு மணி நேரம்கூடச் செலவழிப்பதில்லை. ஒரு ஜெபக்கூட்டத்தில் எட்டு மணிநேரம் செலவழிப்பதைவிடத் தேவனோடு தனித்து ஒரு மணி நேரம் செலவிடுவது கடினம்தான். கூட்டு ஜெபத்திற்கு முன்னர் தனி ஜெபவேளை அவசியம். ஜெபத்தைக் குறித்த இயேசுவின் முதல் போதனை தனி ஜெபம் பற்றியதே; அடுத்துதான் கூடி ஜெபிப்பதைப்பற்றிப் பேசினார் (மத் 6:6; 18 :19,20). ஜெபத்தைக் குறித்துத் தேவ மனிதன் E.M. பவுண்ட்ஸ் (1835-1913) எழுதியவை இணையற்றவை. அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் அவரது கூற்றுக்களில்

ஒன்று: ''ஜெபத்தின் இரகசியம் இரகசிய ஜெபமே!'' (The secret of prayer is praying in secret!). எவ்வளவு துல்லியம், எவ்வளவு சுருக்கம்! ஜெபக் கூடுகைகளுக்கு வருமுன் விசுவாசிகள் தனி ஜெபத்தில் போதுமான நேரம் செலவழிப்பார்களானால், நமது ஜெப நிகழ்ச்சிகள் இன்னும் அதிகப் பயனுள்ளவையாயிருக்கும். ஜெப அறையில் அனலூட்டப்படவேண்டும்; அப்படியானால் கூடுகையில் கொளுத்தி விடப்படுவீர்கள்!

அப்போஸ்தலன் பவுல் அடிக்கடி ''என்'' ஜெபங்கள் எனக் குறிப்பிடுவதைக் கவனித்திருக்கிறீர்களா? ரோ 1:9, ''**நான்** ஜெபம்பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதற்குத் தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறவர்.'' (ரோமர் 10:1ஐயும் பாருங்கள்). எபே 1:16, ''இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, **என்** ஜெபங்களில் உங்களை நினைக்கிறேன்.'' 3:14, ''நமது கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவை நோக்கி **(நான்)** முழங்கால்படியிடுகிறேன்.'' பிலி 1:4, ''**நான்** பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடு விண்ணப்பம்பண்ணுகிறேன்.'' 2 தீமோ 1:3, ''நான் இரவும் பகலும் இடைவிடாமல் **என்** ஜெபங்களில் உன்னை நினைத்து ... உன்னைக் காண வாஞ்சையாயிருக்கிறேன்.''

பொது ஜெபக்கூடுகைகளை அதிகமாய் வலியுறுத்தி விளம்பரப்படுத்துவதால் தனி ஜெபத்தின் அத்தியாவசியம் பற்றிய உணர்வு குறைந்துவருகிறது. தனி ஜெபத்தின் நீட்சியாகவே கூட்டு ஜெபம் இருக்கவேண்டும். எனது மாணவப் பருவத்தில் எனது ஆன்மீகத் தலைவர்கள் இதைத்தான் எனக்குப் போதித்தனர். காரைக்குடியில் 1963ஆம் ஆண்டு தேவ நடத்துதலின்படி நான் துவக்கிய கல்லூரி வளாக ஜெபக்குழுவின் அனுதினப் பழக்கம் இதுவே. கூடி ஜெபிக்க வருமுன் குழு அங்கத்தினர்கள் கல்லூரி வளாகத்திற்கு வெளியேயுள்ள காட்டுப் பகுதியில், ஒரு மணி நேரம் முழங்காலில் நின்று தனித்து ஜெபிப்பார்கள். இது கல்லூரி வகுப்புகள் முடிந்த பின்னர் மாலை நேரக் கூடுகை.



விசுவாசிகள் போதுமான நேரத்தைத் தனி ஜெபங்களில் செலவிடாததால், வேதம் போதிக்கும் ஒழுங்குமுறைகளைக் கூட்டு ஜெபங்கள் மற்றும் ஆராதனைகளில் கடைப்பிடிக்கத் தவறுகின்றனர். அன்னிய பாஷையில் பேசுவதை எடுத்துக்காட்டாய் எடுத்துக்கொள்வோம். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் இவ்வரமானது பொதுவிடங்களில் அல்ல, தனி ஜெபத்திலேயே பயன்படுத்தப்படவேண்டும் (1 கொரி 14;18,19,27,28). கொரிந்து சபை விசுவாசிகளைவிட அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுவதாகச் சொல்லிய அப்போஸ்தலன் பவுல் சபைக்கூடுகைகளிலோ யாவருக்கும் புரியும் வார்த்தைகளையே பேசுவதாகக் குறிப்பிட்டார். 1962ஆம் ஆண்டு என்னை ஆண்டவர் அபிஷேகித்ததுமுதல் நான் நவநாவுகளில் பேசிவருகிறேன். துவக்கக் காலங்களில் பிரசங்கப் பீடத்திலிருந்தும் சில சமயங்களில் நான் நவநாவுகளில் பேசியதுண்டு. ஆனால் நான் முதிர்ச்சியடைந்தபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன் (13:11). இப்பொழுதெல்லாம் தனி ஜெபத்திலேயே அன்னிய பாஷையில் பேசிக்கொள்ளுகிறேன். கூட்டு ஜெபம் அல்லது ஆராதனைக்கு முன்னரே உங்கள் ஆவியில் ஒரு விடுதலை அனுபவித்து வாருங்கள். அப்பொழுதான் நீங்கள் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்கமுடியும் (எபே 5:18-21).

''சிறு குழுக்களாய்'' ஜெபிப்பதற்கும் நமதாண்டவர் அதிக முக்கியத்துவம் அளித்தவர். அவரது பெயரால் இரண்டு மூன்றுபேர் கூடினால் ஏற்கனவே அங்கு அவரது பிரசன்னம் இருக்கும் என்று வாக்குப்பண்ணினார் (மத் 18:20). பேதுரு, யோவான், யாக்கோபு ஆகியோரை ஜெபத்திற்காய் மலைக்கு அழைத்துச் சென்றபோதுதான் அவர் மறுரூபமானார் (லூக் 9:28). அவர்கள் தூக்கமயக்கமாயிருந்தாலும் அவர்களது ஜெபத் தோழமையை வாஞ்சித்தார் (வச 32). தமது சீடர்களை அவர் அடிக்கடி ஜெபத்திற்காய் ஒலிவ மலைக்கு அழைத்துச் சென்றார் (லூக் 22:39,40; யோ 18:1,2). இந்தச் சிறு குழுவையும் விட்டுச் சற்று தூரம் போய் தனித்து ஜெபித்தார் (லூக் 22:41)! இவ்வித ஜெபத்திற்காய்ச் சிறு குழுக்களாய்க் கூடும் வழக்கம் அப்போஸ்தலரிடமும் இருந்தது. அந்தியோகியாவில் ஐந்து தீர்க்கர்களும் போதகர்களும் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்த

போதுதான் முதல் மிஷனரிக் குழுவிற்காக அழைப்பு வந்தது (அப் 13:1,2). ஆற்றோரத்தில் வழக்கமாக ஓர் ஒய்வுநாள் ஜெபத்தைத் தொடர்ந்துதான் அப்போஸ்தலர்கள் அங்கு கூடிவந்து வியாபாரம் செய்துவந்த சில பெண்களுக்குச் சுவிசேஷம் அறிவித்தனர்; அவர்களில் ஒருத்திதான் லீதியாள் (16:13,14). ஜெபக்குழுக்கள்தான் பல இந்திய மிஷனரி இயக்கங்களைப் பிறப்பித்தன. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB) மற்றும் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM) போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. நமக்கு இன்னொரு எழுப்புதல் வரவேண்டுமானால், இவ்வித ஜெபக்குழுக்கள் மறுபடியும் தழைத்தோங்கவேண்டும். *''எழுப்புதல் தாமதிப்பது ஏன்?''* (Why Revival Tarries) என்ற தனது உலகப்புகழ் பெற்ற நூலை லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் எழுதினார்கள். எழுப்புதல் ''இன்னும்'' தாமதிப்பது ஏன்? (Why Revival "Still" Tarries) என்றுதான் நாம் இன்று கேட்டுக்கொள்ளவேண்டும்!

உபவாசம் என்பது மன்றாட்டு ஜெபத்துடன் பின்னிப் பிணைந்தது. இதுவும் மறைவில் செய்யப்படவேண்டிய ஆன்மீகப் பயிற்சிகளில் ஒன்று. உபவாசம் குறித்து இயேசுவானவர் கொடுத்த முதல் போதனை: ''நீங்கள் உபவாசிக்கும்போது வேடக்காரரைப்போல முகம் வாடியிராதீர்கள் ... நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனிதருக்குக் காணப்படாமல், மறைவிலிருக்கும் உன் பிதாவுக்கே தெரியட்டும் ... அப்பொழுது, மறைவில் பார்க்கும் உன் பிதா உனக்கு வெளிப்படையாய்ப் பலனளிப்பார்'' (மத் 6:16-18). அநேகர் பங்குபெறக் கூடிவரும்படி உபவாச ஜெபங்கள் எல்லாருக்கும் அறிவிக்கப்படலாம் (யோவேல் 1:14). ஆனால் தனி உபவாசமோ கூடியமட்டும் இரகசியமாகவே இருக்கவேண்டும். உபவாசத்தில் உணவை (fork) மட்டுமல்ல; உறவுகளையும் (folks) ஒதுக்கவேண்டும். உபவாச நாட்களில் நமது அனுதின வேலைகளையும் கடமைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும் (ஏசா 58:3,4). அப்பொழுதுதான் ஜெபத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளுவதிலும் முழுக்கவனம் செலுத்தமுடியும். உபவாசிக்கும்போது சந்திப்புகளை அகற்றுங்கள், தனித்திருங்கள், இல்லையேல் உபவாசம் என்பது வெறும் பட்டினி என்றாகிவிடும்.



தேவ சமூகத்தில் அழுவதிலும் புலம்புவதிலும் ஓர் எழுப்புதல் இன்று தேவை. தீர்க்கன் எரேமியாவிடமிருந்து வரும் சாட்சி: புலம்பல் 3:48-51, ''என் மக்களாகிய குமாரத்தி அடைந்த கேட்டினால் என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கின்றன. கர்த்தர் பரலோகத்திலிருந்து **நோக்கிப் பார்க்கும்வரை** என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகின்றது. என் நகரின் குமாரத்திகள் அனைவரின் பொருட்டு என் கண் என் ஆத்துமாவுக்குச் சோர்வுண்டாக்குகிறது.'' நமது கருத்தரங்குகளிலும் வேதக் கலாசாலைகளிலும் இப்புனிதப் பயிற்சி கற்பிக்கப்படுகிறதா? தலைவர்கள் நடுவிலேயே புலம்பல் தொடங்கவேண்டும். நாம் எழுப்புதலை வாஞ்சிக்கிறோம்; சீர்திருத்தத்தை வாஞ்சிக்கிறோம்; ஆதிநிலையேகுதலை வாஞ்சிக்கிறோம்; ஆனால் அதற்குரிய கிரயம் செலுத்த நாம் ஆயத்தமா? தலைவர்களாகிய நம்மையே நான் கேட்கிறேன். எஸ்றா ஒரு சீர்திருத்தவாதி. அவரைக் குறித்து இப்படி வாசிக்கிறோம்: எஸ்றா 10:1, ''எஸ்றா இவ்விதம் விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு, **அழுது**, தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ரவேலில் ஆடவரும் பெண்டிரும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவரிடம் வந்து கூடிற்று; மக்கள் மிகவும் அழுதார்கள்.'' அழுது புலம்பும் தலைவர்களே அழுது புலம்பும் மக்களைப் பிறப்பிப்பார்கள். நமது கண்கள் வறண்டுபோயிருக்கின்றன; நமது ஊழியங்களில் வறட்சி காணப்படுவது ஆச்சரியமா? கண்ணீர் சிந்துவதை வாடிக்கையாய்க் கொண்ட இன்னொரு சீர்திருத்தவாதி நெகேமியா. எருசலேமின் மதில்கள் இடிபட்டுக் கிடக்கின்றன என்ற செய்தியைக் கேட்டதும், அவர் ''உட்கார்ந்து அழுது, சில நாட்களாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி'' மன்றாடினார் (நெகே 1:3,4).

மாற்றுக்களை அறிமுகம் செய்வதில் பிசாசு கில்லாடி. அழுது புலம்புவதில் எழுப்புதல் என்பதற்குப் பதிலாக அவன் சிரிப்பு எழுப்புதல் (laughing revival) என்று ஒன்றைப் பிரபலமாக்குகிறான். தேவனுக்கேற்ற துக்கத்திற்குப் பதிலாக மக்களைப் பூவுலகுக்கடுத்த துக்கத்தில் ஆழ்த்துகிறான் (2 கொரி 7:10). தனிமையில் புலம்புவதுதான்

நிசமான குதூகலத்திற்குள் நடத்தும். முதலாவது ஆண்டவருக்குமுன் அமர்ந்து உட்காரவேண்டும் (சங் 46:10). அதைத் தொடர்ந்து கரம் கொட்டுதலோடு ஆனந்த துதியொலி நம்மிலிருந்து புறப்படும் (47:1). இவ்விரு வசனங்களும் ஒன்றையடுத்து ஒன்று வருகின்றன. பவுல் கண்ணீர் நிறைந்த அப்போஸ்தலனாய் இருந்தார். எபேசு சபை மூப்பருக்கு அவர் பிரிவுரை அளித்தபோது கொடுத்த சாட்சி: "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் ... நான் ஆண்டவருக்குப் பணிசெய்தேன்'' (அப் 20:19). அவரது விசுவாசக் குமாரனாகிய தீமோத்தேயுவும் கண்ணீர் நிறைந்தவராயிருந்தார் (2 தீமோ 1:4). தீமோத்தேயுவின் கண்ணீர்தான் பவுலை மகிழ்ச்சியால் நிரப்பிற்று!

## முடிவுரை

''தனித்திருத்தல்'' (solitude) இல்லாது ''திரள்கள்'' (multitude) என்பதே இன்றையப் போக்கு. ''அமைதிக்குப்'' (silence) பதிலாக ''அலறல்'' (shouting and screaming). அமைதியாய்த் தனித்திருத்தல் என்பது இல்லையேல் நமது சத்தமெல்லாம் வறட்டுக் கூச்சலாய்த் தான் இருக்கும். இந்நாட்களில், குறிப்பாய் நமது ஆன்மீகக் கூடுகைகளில், எல்லாவற்றிலும் ஒரே சத்தம். பாடலின் வார்த்தைகள் கேட்க முடியாத அளவு அலறும் இசையும் விரட்டும் கொட்டடிப்பும் திருமறைக்கு ஒத்ததல்ல. பரிசுத்த ஆவியினால் நிறைந்து நாம் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ''ஒருவருக்கொருவர்'' புத்திசொல்லவேண்டும் என்றிருக்கிறதே (எபே 5:18,19). அலறும் இசையுடன் இது எங்ஙனம் சாத்தியம்? கூச்சலின் நடுவில் நாம் எப்படி நமது இருதயத்தில் கர்த்தரைப் பாடி (melody) கீர்த்தனம் பண்ணமுடியும்? கொலோசெயர் நிருபத்தில் இதுபோன்றதொரு பகுதியில் ''இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடவேண்டும்'' என்றிருக்கிறது (கொலோ 3:16). இது சத்தான திருவசனப் போதனையுடன் கூடிய நிறைவை அடுத்து வர வேண்டியதாம். ஒரு கூட்டம் முடிந்ததும், பாட்டிரைச்சல் இருக்குமானால் விசுவாசிகள் ஒருவரோடொருவர் பேசி ஐக்கியப்படுவது எப்படி முடியும்? நமது திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் இதே விதமான



பாட்டிரைச்சலினால் மணமக்களும் இருவரது பெற்றோர்களும் விருந்தினர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்வது கூடாது போகிறது. நாம் கொஞ்சம் புத்தியோடு காரியங்களைச் செய்தாலென்ன?

*தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே*
*நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே*
*கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்*
*யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்*

*தூய்மை பெற நாடு; லோகக் கஷ்டத்தில்*
*தனித்திரு நாளும் அவர் பாதத்தில்*
*இயேசுவைப் போலாவாய், நோக்கின் அவரை*
*பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை*

*தூய்மை பெற நாடு; கர்த்தர் நடத்த*
*என்ன நேரிட்டாலும் அவர் பின் செல்ல*
*இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை*
*நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை*

*தூய்மை பெற நாடு; ஆத்மா அமர்ந்து*
*சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு*
*அன்பின் ஜீவ ஊற்றைச் சேர்ந்து ருசிக்க*
*முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க*

— W.D. Longstaff, 1822-1894

5

# எளிமை எனும் பூர்வ பாதை

Old Path of Simplicity





5

# எளிமை எனும் பூர்வ பாதை

Old Path of Simplicity

முந்திய அத்தியாயத்தில் தனித்திருத்தலைக் குறித்துப் படித்தோம். தனித்திருத்தலை விரும்புவோர் பொதுவாக எளிய வாழ்க்கையே மேற்கொள்வர். ''வெற்றி'' (success) என்ற தலைப்பில் அநேகப் பிரசங்கங்களைக் கேட்கிறோம்; ஆனால் ''எளிமை'' (simplicity) என்பது குறித்து அதிகம் பேசப்படுவதில்லை. கிறிஸ்துவின் முதலாம் பாக்கிய வசனமே எளிமையைக் குறித்ததுதான்: ''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது'' (மத் 5:2,3). வேறு வார்த்தைகளில் சொன்னால், ''எளிமையாய் நடந்துகொள்வோரே பேறுபெற்றோர்; **முடிவான** வெற்றி அவர்களுக்கே!'' உடனடி வெற்றியையே உலகம் நாடிச் செல்லும்போது இயேசுவோ இறுதிக்கட்ட வெற்றியை வலியுறுத்துகிறார். உடனடி வெற்றி நெடுங்காலம் நீடிக்காது போகலாம்; இயேசு குறிப்பிடும் முடிவான வெற்றியோ நித்தியமானது. முதலாம் பாக்கிய வசனம் மட்டுமல்ல, அடுத்துள்ள இரண்டுமே எளிமையின் பல்வேறு வெளிப்பாடுகளைக் குறிப்பிடுகின்றன: ''துயரப்படுவோர் (புலம்புவோர்) பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் பூவுலகைச் சுதந்தரிப்பார்கள்'' (வச 4,5). ''வலிமையே வெல்லும்'' என்பதே இப்பாழுலகின் தத்துவம். சாந்தகுணத்தை இவ்வுலகு பலக்குறைவு எனக் கணிக்கலாம்; இயேசுவோ அதைத்தான் பலம் என்கிறார். சாந்தகுணமுள்ளோர் ஆயிரமாண்டு ஆளுகையில் அவரோடு அரசாளுவர். மகிமையே வடிவானவர் தேவன்; ஆனாலும் அவரிடமிருப்பது எளிமை! அவரைச் சார்ந்த அத்தனையும் எளிமையே. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம் —

## 1. தேவனது மேசியா எளிமையானவர். (Messiah)

மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், அதிலும் குறிப்பாக ஏசாயா புத்தகத்தில் உள்ளவை, அவரது எளிமையைச் சித்திரிக்கின்றன. ஏசா 11:1, ‘‘ஈசா என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவனது வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.’’ இங்கு சக்தியையோ பலத்தையோ வெளிக்காட்ட ஒன்றுமில்லையே. ‘‘துளிர் ... கிளை ... வேர்கள்’’ ஆகியவற்றில் பலம் எங்கே? இவையெல்லாம் சாதாரணமானவை, எளிமையானவை. 42:2,3, ‘‘அவர் கூக்குரலிடவும் மாட்டார், தமது சத்தத்தை உயர்த்தவும், அதை வீதியிலே கேட்கப்பண்ணவும் மாட்டார். அவர் நெறிந்த நாணலை முறியாமலும், மங்கி எரியும் திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாய் வெளிப்படுத்துவார்.’’ போராட்டம் கிடையாது! கொந்தளிப்பு கிடையாது! கூச்சல் கிடையாது! மென்மையானவர்! சாந்தமானவர்! சமாதானத்துடன் அமரிக்கையாய்ச் செயல்படுபவர்! 53:2, ‘‘இளம் கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கும் வேரைப் போலவும் எழும்புகிறார்; அவருக்கு அழகும் இல்லை, கம்பீரமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது அவரை விரும்பும்படியான தோற்றம் அவருக்கு இல்லாதிருந்தது.’’ இந்த எளிமைதான் இயேசுவைப் பதினாயிரம் பேரிலும் சிறந்தவராக்கிற்று. அவருக்கு Fair & Lovely அல்லது Fair & Handsome போன்ற அழகுச் சாதனங்களெல்லாம் தேவையில்லை. அவரது எளிமையே அவரது அழகு. உலக அழகன் அல்லது உலக அழகிக்குக்கூட முகத்தில் ஒரு பரு இருக்கலாம். நமது மேசியாவோ ‘‘பழுதற்றவர், குறைவற்றவர், மாசற்றவர்’’ (யாத் 12:5; 1 பேது 1:19).

இதைப் பற்றிய புதிய ஏற்பாட்டு வசனக் குறிப்புகளும் மிகத் தெளிவாயுள்ளன. இயேசுவின் எருசலேம் பவனியைக் குறித்து இவ்விதம் வாசிக்கிறோம்: ‘‘இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிக்கொண்டு உன்னிடம் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்’’ (மத் 21:4,5; சக 9:9). அரசர்கள் பெரும்பாலும் குதிரைகளிலேயே சவாரி செய்வார்கள். நமது அரசரோ எளிமையாய்



ஒரு கழுதை மீது ஏறி வருகிறார். அவர் முடிந்தவகையிலெல்லாம் எளிமையாய் இருந்தார். சைக்கிள் ஓட்டுவதை நமது நவீன இளைஞர் தரக்குறைவாய் நினைக்கின்றனர்! இவ்வித மாயையான பகட்டெல்லாம் நமக்கு வேண்டாம். உங்கள் தரத்தைக் காட்டுவதற்கென்றே எதையும் வாங்காதீர்கள். அது கிறிஸ்துவின் பாணி அல்ல. தேவனானவருக்குக் கிறிஸ்து சமமாயிருந்தும் ஓர் அடிமைபோல் தம்மைத் தாழ்த்தினார் (பிலி 2:5-8). ஆத்தும இளைப்பாறுதலை வாக்களித்து மக்களை அவர் அழைத்தபோது, தம்மைச் ‘‘சாந்தமும் மனத்தாழ்மையும்’’ உள்ளவராய் அறிமுகம் செய்தார் (மத் 11:29). மேசியாவாகிய இந்த இயேசுவைப் பின்பற்றவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம்! வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் முடிந்த அளவு எளிமையைக் காத்துக்கொள்ளுங்கள்; இதுவே மன அமைதியையும் நிம்மதியையும் தரும். வாழ்வில் குழப்பங்கள் குறையும்.

## 2. தேவனது செய்தி எளிமையானது. (Message)

சுவிசேஷத்தின் எளிமையே அறிவாளர்களுக்கு இடறலாயிருக்கிறது. ‘‘இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்’’ என்று பவுலிடமும் சீலாவிடமும் அந்தச் சிறையதிகாரி வினவியபோது, அவர்கள் கொடுத்த பதில், ‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி’’ என்பதே (அப் 16:30,31). இதைவிட எளிய பதில் கொடுக்க முடியுமா? நம்ப முடியாத அளவு எளிமை! கொரிந்துவிலிருந்த விசுவாசிகளுக்கு எழுதியபோது சுவிசேஷத்தின் எளிமைத்துவத்தின் இரகசியத்தைப் பவுல் இவ்விதம் குறிப்பிடுகிறார்: 1 கொரி 1:18-25, ‘‘சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாய் இருக்கிறது ... அந்தப்படி, ஞானிகளின் ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை வெறுமையாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? தத்துவ ஞானி எங்கே? இவ்வுலக ஞானம் மடமை எனத் தேவன் காட்டிவிட்டாரல்லவா? ... இந்தப்படி, தேவனது பைத்தியம் எனப்படுவது மனிதருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலக்குறைவு எனப்படுவது மனிதருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.’’ ஹாலந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில்

1983இல் பண்டிதர் பில்லி கிரஹாம் நடத்திய அகிலவுலகச் சுவி சேஷகர் மாநாட்டில் கலந்துகொள்ளும் சிலாக்கியம் எனக்குக் கிடைத் தது. என்னை அதிகம் கவர்ந்த அவரது கூற்றுகளில் ஒன்று: ''ஆப்பி ரிக்கக் காட்டிலுள்ள ஆதிவாசிகளுக்கென்றாலும், அமெரிக்காவில் புகழ்பெற்ற ஹார்வார்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கென்றா லும் நான் ஒரே செய்தியைத்தான் பிரசங்கிக்கிறேன்; ஏனென்றால், அனைத்து மக்களின் பிரச்னையும், அதற்கான தீர்வும் ஒன்றே!''

இந்தியா மதப்பற்று நிறைந்துள்ள நாடு. சுவிசேஷத்தை விசு வாசிப்பதற்கு இங்குள்ள மக்கள் சிரமப்படுவதேன்? இந்து மார்க்கம் பெருமளவில் தத்துவ ரீதியானது. தலைசிறந்த தத்துவ ஞானிகளில் சிலர் இந்தியாவில்தான் தோன்றினர். நம்ப முடியாத அளவு சுவி சேஷம் எளிமையென இந்தியர் எண்ணுகின்றனர். சுவிசேஷம் கூறு வது: ''ஆதாம் பாவம் செய்ததால், நாமெல்லாரும் பாவிகள். எனது பாவங்களுக்காய் இயேசு உயிர் கொடுத்ததால், அவரை நான் விசுவா சிக்கும் அதே வேளையில் பாவ மன்னிப்பு பெற்று நீதிமானாக்கப்பட முடியும். ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் வந்தது மாள்வு; அடுத்தவரின் கீழ்ப்படிதலினால் வருவது வாழ்வு.'' சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டுமானால் விளங்கிக்கொள்ள வேண்டியதில்லை; ஆனால் அதை அனுபவிக்க அது விசுவாசிக்கப்படவேண்டும்! இரட் சிப்பை விலைக்கு வாங்க முடியாது; அதை ஓர் அன்பளிப்பாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும். எல்லா மதங்களும் ஏதோவொன்றைச் ''செய்'' என்கின்றன; கிறிஸ்தவமோ ''செய்தாயிற்று'' என முழங்கு கிறது! உலகிலேயே மிகப் பெரிய செய்தி நமதே எனப் பெருமிதம் கொள்வோம். தொலைந்துபோனவன் மனிதன்; தொலைத்துவிட்ட வர் இறைவன். தொலைத்தவர் தொலைந்ததைத் தேடி வந்தால் அது எளியது; ஆனால் தொலைந்தது தொலைத்தவரைச் தேடிச் சென்றால் அது குழப்பம்தான்!

அப்பொழுதுதான் இறையியல் பட்டம் பெற்றிருந்த ஒருவன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்ததான். "Keep It Simple, Stupid!" என்று கூட்டத்திலிருந்து ஒரு முதியவர் கத்தினார். நாம் பிரசங்கிக்கும்போதும் K-I-S-S என்ற இந்த எளிய சூத்திரத்தை



நினைவிற்கொள்வோம். இயேசு போதித்தவை உன்னதமானவை எனினும் சாமானிய மக்கள் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. சாதா மக்கள் அவரது உபதேசத்தை விருப்பத்தோடு கேட்டார்கள் என்று வாசிக்கிறோம் (மாற் 12:37ஆ). சாதா மக்களிடமிருந்துதான் உல கெங்கிலும் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு. கொரிந்திய விசு வாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் நினைவூட்டியதைக் கவனி யுங்கள்: 1 கொரி 1:26-28, ''சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மனிதக் கணிப்பின்படி ஞானிகள் அநேகர் இல்லை, வல்லவர்கள் அநேகர் இல்லை, பிரபுக்கள் அநேகர் இல்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படித் தேவன் உலகில் பைத்தியமான வைகளைத் தெரிந்துகொண்டார் ... மனுவுடலுள்ள எவனும் தேவ னுக்குமுன் பெருமையடிக்காதபடி அப்படிச் செய்தார்.'' இத்திரு வசனத்தின்படி எனது கருத்து என்னவெனில், உயர்மட்டத்தினரை விடச் சாதா மக்களே விண்ணுலகில் அதிகம் இருப்பர்!

### 3. தேவனது வழிமுறைகள் எளிமையானவை. (Methods)

தீர்க்கன் எலியாவுக்கு அடுத்துத் தீர்க்கன் எலிசா வந்தார். எலியாவின் மீதிருந்த ஆவியை இரட்டிப்பாய்த் தேவன் எலிசாவுக்கு அருளிப் பயன்படுத்தினார். செல்வாக்கு நிறைந்திருந்தாலும் தொழு நோயாளியாயிருந்த நாகமான் எனும் இராணுவ அதிகாரியைக் குறித்து 2 இராஜாக்கள் 5இல் வாசிக்கிறோம். எலிசா வெளியே வந்து தனது ரோகங்களின்மீது கைகளை அசைவாட்டித் தன்னைச் சுகமாக்கிவிடு வாரென எதிர்பார்த்து நாகமான் அவரிடம் புறப்பட்டுச் சென்றார். எலிசாவோ சற்றும் எதிர்பாராததொன்றைச் சொன்னார். நாகமான் ஏழு தடவை யோர்தான் நதியில் மூழ்கி எழுந்தால் அவர் சுகமாகிவிடுவார் என்று தனது வேலைக்காரனிடம் தீர்க்கன் சொல்லியனுப்பினார். இதைக் கேட்ட நாகமானுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. யோர் தானைவிட நல்ல நதிகள் தனது நாட்டிலேயே உண்டே என்றார். தீர்க்கன் சொன்னபடி செய்ய அவருக்கு மனமில்லை. அதைவிட வாழ் நாள் முழுவதும் தொழுநோயாளியாகவே இருந்துவிடுவது மேல் என்று அவருக்குத் தோன்றிற்று. அவரது வேலைக்காரர் அவரைப் பார்த்து, ''தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச்

செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? மூழ்கி எழும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மிடம் சொல் லும்போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம்'' என்றனர் (வச 13). முடிவில் அவர் இணங்கினார், சுகமடைந்தார். ஆம், தேவ னது வழிமுறைகள் எளியவையே.

தாவீது தேவனது இதயத்திற்கேற்றவராயிருந்தும், கர்த்தருடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவரும் காரியத்தில் பெருந் தவறு செய்தார். இதற்கென்று ஒரு புதிய வண்டி செய்தார் (2 சாமு 6:1-7). பாதையோ மேடு பள்ளமாயிருந்தது. ஒரு குறிப்பிட்ட வேளை யில் பெட்டி சரிந்து விழும் தருவாயில் ஊசா என்றொருவன் தன் கையை நீட்டி அதை விழாது தடுத்தான். தேவனோ கோபமடைந்து அவனை அடித்தார்; அங்கேயே அவன் செத்தான். தாவீதின் மனம் பெரும் வேதனையடைந்தது. கர்த்தருடைய பெட்டியைத் திரும்பக் கொண்டுவர அவர் எடுத்த முயற்சி தவறா? யாத்திராகமம் 25:14இல் தேவன் நியமித்துள்ள வழிமுறைகளைத் தாவீது பின்பற்றாததே இங்கு தவறு. தங்களது தோள்களில்தான் ஆச்சாரியர் இப்பெட்டியைச் சுமந்துவரவேண்டும். தாவீதோ பெலிஸ்தியரது வழிமுறைகளைப் பின்பற்றினார் (1 சாமு 6:7). தேவன் வகுத்துள்ள முறையை மேம் படுத்துவதாக தாவீது நினைத்திருக்கலாம். பிரியமானவரே, அப்படிச் செய்வது சாத்தியமே இல்லை! முடிவாகத் தாவீது தேவனது வழி முறைக்குத் திரும்பி வந்துசேர்ந்தார். அவர் அந்த வண்டியை உடைத்து அந்தக் கட்டைகளை விறகாய்ப் பயன்படுத்தி அவ்விரு காளைகளையும் பலியிட்டார் (2 சாமு 6:13)! ''பூர்வ பாதைகளுக் குத்'' திரும்பிவருவதே இழந்த மகிமையைத் திரும்பப் பெற ஒரே வழி!

தேவனது வழிகள் எப்போதுமே எளிமையானவையே. ஏசாயா 35:8இல் இப்படி வாசிக்கிறோம்: ''அங்கு பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி எனப்படும்; தீட்டுப்பட்டவர் அதில் நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடப்போர் அறிவிலிகளாயிருந் தாலும் திசைகெட்டுப்போவதில்லை!'' இன்றையக் கிறிஸ்தவத் திலோ எல்லாமே குழப்பமாய்த் தோன்றுகிறது. சங்கீதக்காரன்



இவ்விதமாய்ப் புலம்புகிறார்: சங் 74:3, ''தேவனே, நெடுங்கால மாய்ப் பாழாய்க் கிடக்கும் இடங்களில் உமது பாதங்களை எழுந்த ருளப்பண்ணும்; பரிசுத்த தலத்தில் சத்துரு அனைத்தையும் கெடுத் துப்போட்டான்.'' *Second Reformation* எனும் தனது நூலில் வில்லியம் பெக்ஹாம் என்ற ஆசிரியர் திருச்சபையானது எவ்விதம் தனது எளிமையை இழந்துவிட்டதென்று சித்திரிக்கிறார் —

+ கூட்டாஞ்சோறு போன்றது போய் கர்த்தருடைய பந்தி ஒரு சடங்காயிற்று.
+ ஆராதனை செய்பவர் என்பது போய் ஆராதனையைக் கவனிப்பவர் என்றாயிற்று.
+ நட்புறவின் மூலம் சாட்சி பகர்தல் என்பது போய் வணிக மயமாயிற்று.
+ தனியாள் ஊழியம் என்பது போய் பொதுப்பணி என்றாயிற்று.
+ வரங்கள் மற்றும் அழைப்பின் அடிப்படையில் தலைமைத்துவம் என்பது போய் தொழில்நுட்ப ரீதியாயிற்று.
+ பெருக்கல் மூலம் வளர்ச்சி என்பது போய் வெறும் கூட்டலாயிற்று.
+ இயக்கங்கள்தான் மிஷனரிகள் என்பது போய் அவை வெறுமனே தாங்குபவையாயிற்று.
+ கலப்பையில் கை வைத்துச் சீடத்துவப் பயிற்சி என்பது போய் வகுப்பறை போதனையாயிற்று.
+ ஐக்கியம் என்பது ஒருவருக்கொருவர் நெருக்கவுறவு என்பது போய் பெருங்கூட்டங்களெனப் பெயரளவிலாயிற்று.
+ பக்திவிருத்தியடையச் செய்யவே வரங்கள் என்பது போய்ப் பரவசத்துக்காகவே அவைகள் பயன்படுத்தப்படுகின்றன.
+ வல்லமை என்பது இறைவன்மை என்பது போய் அது மனிதத் திறமை என்றாயிற்று.
+ பயன்பாட்டிற்கே கட்டிடங்கள் என்பது போய் அவை புனிதத் தலங்களாயிற்று.

+ அங்கத்தினர்கள்தான் தயாரிப்பாளர் என்பது போய் அவர்கள் வாடிக்கையாளர் என்றாகிவிட்டனர்.

+ வேதபாடம் என்றால் திருவசனத்தின்படிச் செய்வது என்பது போய் அதைக் கேட்பது என்றாகிவிட்டது.

+ ''புறப்பட்டுப் போங்கள்'' என்பதற்குப் பதிலாகக் ''கூட்டத்திற்கு வாருங்கள்'' என்று சுவிசேஷப்பணி மாறிவிட்டது.

மன்னன் கான்ஸ்டன்டைனின் கைகளில்தான் நான்காம் நூற்றாண்டில் இப்பேரழிவு ஏற்பட்டது. முதல் நூற்றாண்டில் திருச்சபையைக் கிறிஸ்து இவ்விதம் நிறுவவில்லை.

நமது வாழ்விலும் பணியிலும் கிறிஸ்துவைப் போன்ற எளிமையை நாம் எப்படித் திரும்பக் கொண்டுவர முடியுமென்று சில நடைமுறைப் பாடங்கள் படிப்போம் —

### 1. திருமறைத் தியானத்தில் எளிமையாயிருங்கள்.

எளிய மனதுடனும் நேர்மையுடனும் திருமறை வாசிக்கப்பட வேண்டுமெனத் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. கீழ்க் கண்ட வசனப்பகுதிகளைக் கவனியுங்கள்: சங் 119:130, ''உமது வசனத்தின் விளக்கம் வெளிச்சம் தந்து, **பேதைகளுக்கு** நுண்ணறிவு ஊட்டுகிறது.'' 1 பேது 2:1-3, ''கர்த்தர் தயையுள்ளவர் என்பதை நீங்கள் ருசித்ததுண்டானால், நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த **குழந்தைகளைப்போல**, திருவசனமாகிய களங்கமில்லா ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.'' ''துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல்'' போன்றவற்றையெல்லாம் நாம் களையும்போது சிறு குழந்தைகளைப் போல மாறுகிறோம். யாக் 1:19-21, ''என் பிரிய சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுவதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருங்கள். மனிதரது கோபம் தேவனது நீதியை நடப்பிக்க மாட்டாதே. எனவே, நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும்



இருக்கிற வசனத்தைச் **சாந்தமாய்** ஏற்றுக்கொள்ளுங்கள்.'' கற்றுத்தேர்ந்த மேதை என்றெண்ணிக்கொண்டு திருமறையைத் திறப்போரைத் தேவன் மதிப்பது கிடையாது. சிறுவர், சிறுமியருக்குப் போதிப்பதுபோல அவர் தமது சத்தியத்தை ''இங்கு கொஞ்சம், அங்கு கொஞ்சம்'' என்று போதிக்கிறார் (ஏசா 28:9,10).

இயேசுவின் தாயாகிய மரியாளுக்குத் தேவனுடைய வார்த்தையைக் குறித்த சரியான மனப்பான்மை இருந்தது. தேவன் சொன்ன எதையும் ஒப்புக்கொள்ள அவரது தாழ்மையும் எளிமையும் உதவின. மனிதரால் முடியாத ஒரு காரியத்தைக் கர்த்தருடைய தூதன் அவருக்கு வாக்குபண்ணியபோது அவர் சொன்னது: ''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்'' (லூக் 1:38). இதுதான் அவரைப் ''பாக்கியவதி'' ஆக்கிற்று (வச 28,45). 46 முதல் 55 வரையுள்ள அவரது பாடலைக் கவனமாய்ப் படியுங்கள். தாழ்மை, எளிமை என்று அடிக்கடி பேசுகிறார் (வச 48, 52). தேவனது ''இரக்கத்திற்காய்'' அவரை ''மகிமைப்படுத்தினார்'' (வச 50,54). குழந்தையுள்ளம் கொண்டோருக்கே பெருவாரியாகத் தேவனது வெளிப்பாடுகள் கிடைக்கும். பிசாசுகளும் தங்களுக்குக் கீழ்ப்படிகின்றன என்ற பரவசத்துடன் துள்ளிக்குதித்து எழுபது சீடர் இயேசுவிடம் திரும்பி வந்தபோது, அவர் ஆவியில் மகிழ்ந்து சொன்னது: ''பிதாவே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, இவற்றை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப், **பாலகருக்கு** வெளிப்படுத்தினபடியால் உம்மைத் துதிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உமது திருவுளத்திற்குப் பிரியமாயிருந்தது'' (லூக் 10:17,21). தமது பிதாவை இயேசு இங்கு ''விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே'' என்றழைக்கிறார். ஆம், இவ்வளவு உன்னதமான தேவன் சாதாரண மக்களுக்குத் தமது சத்தியங்களை வெளிப்படுத்துகிறார். குழந்தைகளும் சிறுவர் சிறுமிகளும் தலைக்கனம் இல்லாதவர்கள். பெற்றோர் சொல்வதையெல்லாம் அவர்கள் கேட்டுக்கொள்வர். வளர வளரத் தங்கள் பெற்றோரைக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். விவிலியத்தைப் பொறுத்தவரை, அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியும்போதுதான் புரிதல் வருகிறது. கர்வம் கொண்டுள்ள இறையியலர்களைவிடக் கீழ்ப்படி

தலுள்ள இறைமக்கள் வேதத்தை நன்றாய்ப் புரிந்துகொள்கின்றனர். திருமறையைத் திறக்கும்போதெல்லாம் சிறுவன் சாமுவேலின் ஜெபத்தையே ஏறெடுப்போம்: ''கர்த்தாவே, சொல்லும்; அடியேன் கேட்கிறேன்'' (1 சாமு 3:9,10).

## 2. ஜெபிப்பதில் எளிமையாயிருங்கள்.

அப்பாவைக் குழந்தை கூப்பிட்டுக் கேட்பது போன்று ஜெபம் எளிமையாயிருக்கவேண்டும். இதுவே இயேசுவின் தெளிவான போதனை. ஜெபம் என்றால் கேட்பது, ஜெபத்திற்கு பதில் என்றால் பெறுவது என்பதைப் போதித்தவுடன் தந்தை-மகன் உறவை எடுத்துக்காட்டாய் அவர் முன்வைக்கிறார் (மத் 7:7-11). ''உங்களில் எவனாயினும் தன்னிடம் அப்பத்தைக் கேட்கும் தனது மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, விண்ணுலகிலிருக்கும் உங்கள் தந்தையானவர் தம்மிடம் வேண்டுவோர்க்கு நல்ல காரியங்களைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?'' திரும்பத் திரும்ப வீண் வார்த்தைகளை ஜெபத்தில் பேசுவதைக் கண்டித்தபோதும் இயேசு அதே விவாதத்தை முன்வைத்தார்: ''ஜெபம்பண்ணும்போது வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் ... உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டுவதற்கு முன்னரே உங்களுக்கு எது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்'' (மத் 6:7,8). நீண்ட வாக்கியங்கள் பேசுவதால் நமது ஜெபங்கள் ஆண்டவருக்குப் பிரியமாகிவிடும் என்று நினைக்கிறோம். அவர் எனக்கு அப்பா; நான் அவரது பிள்ளை; இதுவே எனது ஜெபத்திற்கு அடித்தளம்.

எளிமையையும் தாழ்மையையும் ஜெபத்தில் காத்துக்கொள்ள ஒரு வழி **முழங்கால்படியிடுவதாகும்**. இருக்கைகளும் நாற்காலிகளும் ஆலயங்களில் வந்த பின்னர் ஆராதனை வேளைகளில் முழங்கால்படியிடுவது மறையலாயிற்று. ''முழங்காற்படியிடக்கடவோம்'' என்று ஆயர் சொன்னவுடன் நாம் ''உட்கார்ந்துவிடுகிறோம்!'' முழங்காலில் நிற்பது மேற்கத்திய கலாச்சாரமோ, கிழக்கத்திய கலாச்சாரமோ



அல்ல; அது வேதாகமக் கலாச்சாரம். பயபக்தியுள்ள மனப்பான்மைக்குள் வருவதற்கு முழங்காலில் நிற்பது எவ்விதம் உதவுகிறது என்பதற்குக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள் —

''சாலொமோன் ஒரு வெண்கலப் பீடத்தை உண்டாக்கி, அதின் மேல் நின்று, சபையார் எல்லாருக்கும் முன்பாக **முழங்காற்படியிட்டுத்**, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்தார்'' (2 நாளா 6:13; 1 இரா 8:54). எஸ்றா சொல்வது: ''அந்திப்பலி நேரத்தில் நான் துக்கத்தோடு எழுந்து, கிழித்துக்கொண்ட ஆடையோடும் சால்வையோடும் **முழங்காற்படியிட்டு**, என் கைகளை கர்த்தருக்கு நேராக விரித்தேன்'' (எஸ்றா 9:5). ''தடைச்சட்டத்திற்குக் கையெழுத்து போடப்பட்டது என்று தானியேல் அறிந்தும், தன் வீட்டுக்குள் போய், தன் மேலறையில் எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே முன்பு அவர் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக **முழங்காற்படியிட்டு** ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினார்'' (தானி 6:10). தானியேல் முழங்காற்படியிடாமல் இருந்திருப்பானானால், அவர் ஜெபித்துக்கொண்டிருக்கிறாரென்று யாருக்கும் தெரிந்திருக்காது! அவரோ ''முன்னர்'' செய்துவந்தபடியே தனது பழக்கத்தைக் கடைப்பிடித்தார்! பூர்வ பாதைகள்! ''இயேசு அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம் போய், **முழங்காற்படியிட்டு**, ஜெபம்பண்ணினார்'' (லூக் 22:41,42). ''ஸ்தேவான் **முழங்காற்படியிட்டு**, ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்'' (அப் 7:60). ''பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, **முழங்காற்படியிட்டு**, ஜெபம்பண்ணினார்'' (அப் 9:40). ''பவுல் **முழங்காற்படியிட்டு**, அவர்களெல்லாரோடும் ஜெபம்பண்ணினார்'' (அப் 20:36; 21:5). அறிவு பெருத்த, செல்வம் கொழித்த ஓர் அரசன் முழங்காற்படியிட்டான். ஒரு தீர்க்கதரிசி முழங்காற்படியிட்டான். ராஜாதி ராஜா முழங்காற்படியிட்டார்! திருச்சபையின் உதவிக்காரன் ஒருவன் முழங்காற்படியிட்டான். அப்போஸ்தலர்கள் முழங்காற்படியிட்டனர். நாமே முழங்காற்படியிடாதிருக்கும்போது, ''முழங்கால் யாவும் நமதாண்டவருக்குமுன் முடங்கும்'' என்று நாம் எப்படி

எதிர்பாக்க முடியும்? (பிலி 2:10). இவ்வசனத்திற்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிடாதீர்கள். ''முழங்காற்படியிடுதல்'' என்பதற்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டால், நாவினால் ''அறிக்கையிடுதல்'' என்பதை எப்படி வியாக்கியானப்படுத்துவோமோ?

தொழுகைக்கான பூர்வீக அழைப்பு ஒன்று சங்கீதம் 95:6இல் உண்டு: ''நம்மைப் படைத்த கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து **முழங்காற்படியிடக்கடவோம்** வாருங்கள்!'' நவீன ஆராதனைகளில் ''பணிதல்'' மற்றும் ''முழங்காற்படியிடுதல்'' ஆகியவற்றைவிட ''நிற்றல்'' மற்றும் ''கைகளை உயர்த்துதல்'' ஆகியவையே அதிகமாகிவிட்டதால் தேவனுக்குமுன் இருக்கவேண்டிய பரிசுத்த ''நடுக்கம்'' மறைந்துபோயிற்று (சங் 2:11). இப்படிச் சொல்வதால், நாம் உட்கார்ந்துகொண்டு ஜெபிக்கவே முடியாது என்பது பொருளல்ல. அவ்வப்போது உட்கார்ந்து ஜெபித்துக்கொள்ளலாம்; ஆனால் முழங்காலிட்டு ஜெபிப்பதே வழக்கமாயிருக்கவேண்டும். அப்போஸ்தலன் யாக்கோபின் முழங்கால்கள் தடித்து வீங்கியிருந்தனவாம்! அவர் ஓர் ஜெபிக்கும் அப்போஸ்தலன் என்பது நமக்குத் தெரியுமே. அவரது நிருபத்தில் ஜெபத்தைக் குறித்த போதனைகள் ஏராளம். முற்காலங்களில் நமது நீளக் கால்சட்டைகள் முழங்காலில்தான் கிழியும்; இப்பொழுதோ உட்காருமிடத்தில் கிழிகின்றன! முழங்காலில் நிற்பதைக் கூட்டினால் தூக்க மயக்கம் குறையும். சீடர்கள் உட்கார்ந்திருந்ததால்தான் தூங்கிவிட்டார்களோ, என்னவோ! (மத் 26:36). முழங்காலுக்குத் திரும்புவோம்! விமானப் பயணத்தின்போது விமானத்திற்குள்ளேயே முழங்காற்படியிட நமது முகமதிய நண்பர்கள் தயங்குவதில்லை!

### 3. சகவுறவுகளில் எளிமையாயிருங்கள்.

தாழ்மையும் எளிமையுமானவர்களோடு நட்பு ஏற்படுத்திக்கொள்ளத் திருமறை நம்மை அழைக்கிறது. ரோ 12:16, ''மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், **தாழ்மையானவர்களுக்கு** இணங்குங்கள்; உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதிருங்கள்.'' உங்களுக்கு வேண்டாத மிஞ்சிய காரியங்களில் தலையிடாதீர்கள் என்பதும்



இதற்குப் பொருளாகும். சங்கீதக்காரன் தாவீதின் சாட்சியைக் கேளுங்கள்: சங் 131:1,2, ''கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை. தாயின் பால் மறந்த குழந்தையைப் போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்; என் ஆத்துமா பால் மறந்த குழந்தையைப் போல இருக்கிறது.'' பழகுவதற்கு இணக்கமுள்ளநபராயிருங்கள். பெருமையான பார்வையும் செருக்கான நடையும் வேண்டாம். பிறரிலும் நான் சிறந்தவன் எனும் எண்ணத்தை ஒழித்துவிடுங்கள். ஆவியானவரின் ஒன்பது கனிகளும் சகவுறவுகளை இலகுவும் இனிதுமாக்குகின்றன (கலா 5:22,23). அன்புதான் அச்சு; மற்ற எட்டு குணநலன்களும் சக்கரத்தின் ஆரங்கள் போன்றவை. பரிசுத்த ஆவியானவரே உராய்வை மிருதுவாக்கும் பசை.

இயேசுவானவர் தமது பணிக்காலத்தில் பெரும்பாலும் எளிய மக்களுடனேயே இருந்தார். அவர்தான் மேசியாவா, அல்லது இன்னொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா எனக் கேட்டறியத் திருமுழுக்கினன் யோவான் தனது சீடரில் இருவரை இயேசுவிடம் அனுப்பியபோது, இயேசு இரு நிரூபண அடையாளங்களைச் சுட்டிக்காட்டினார்: ஒன்று சுகமளிக்கும் அற்புதங்கள்; அடுத்தது, ''தரித்திரருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது'' என்பது (மத் 11:5). சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை மக்களுக்கு நமது சுகமளிப்புக் கூட்டங்களில் முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. செல்வாக்குள்ளவரே முன்வரிசை இருக்கைகளில் அமருகின்றனர். நமது விளம்பரங்கள் வானோங்கியிருந்தாலும் குறிப்பிடத்தகு அற்புதங்கள் நமது கூட்டங்களில் குறைவு என்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாயிருக்கலாம். இல்லாதோர், இழிவானோர் போன்றோரோடுதான் இயேசு மனப்பூர்வமாய்த் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். விண்ணரசைச் சுதந்தரிக்கும்படி வலப்பக்கத்திற்கு அனுப்பப்பட்ட நீதிமான்களிடம் அவர் பகர்ந்ததைக் கவனியுங்கள்: ''மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை (அந்த தானதர்மத்தை) எனக்கே செய்தீர்கள் என்று

மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 25:33-40). பந்தாவிற்கும் பகட்டிற்கும் பலியானோரோடு ஒட்டிக்கொள்ள முயலாதீர்கள்; முடிவில் பெருத்த ஏமாற்றமடைவீர்கள். இப்படிச் சொல்வதால், செல்வந்தரை இயேசு சந்திக்கவே இல்லை, அவர்களோடு உறவு வைத்துக்கொள்ளவே இல்லை என்று பொருள்படாது. சமுதாயத்தில் உயர்மட்டத்தினரையே பைத்தியமாய் அவர் நாடியலையவில்லை என்பதே நாம் கண்டறிவது. அவரது சிலுவையைச் சுமந்தது வெள்ளைத் தோலுள்ள ஒரு யூதன் அல்ல; கருநிறத்தவனாகிய ஓர் ஆப்பிரிக்க நாட்டவனே (மாற் 15:22).

பேச்சுத் தொடர்பு வாயிலாகவே உறவுகள் மேம்படுகின்றன. உங்கள் பேச்சு எளிமையாயிருக்கட்டும். உங்களது ''ஆம்'' என்பது ''ஆம்'' என்றும், ''இல்லை'' என்து ''இல்லை'' என்றுமே இருக்கட்டும். இதற்குக் கூட்டலோ கழித்தலோ இருக்கக்கூடாது. இதுவே இயேசுவின் நேரடிப் போதனை (மத் 5:37). மிகைப்படுத்துதல், பாதி உண்மை, இரட்டை அர்த்தம், மறைவான உள்நோக்கு, இப்படிப்பட்ட மட்டரகமான காரியங்களெல்லாம் வேண்டவே வேண்டாம். திருக்குமனதுள்ளவனது வார்த்தைகளைக் குறித்துத் திருமறை என்ன சொல்லுகிறது என்று கவனியுங்கள்: ரோ 3:13,14, ''அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட சவக்குழி; தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் நச்சு இருக்கிறது; அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது.''

ஓர் எளிய மனதுடையவனை மக்கள் பழிக்கும்போது அல்லது தாக்கும்போது அவனது எதிர்வினைச் செயல் தாவீதைப் போலிருக்கும். தாவீதை அவரது எதிரிகள் தாறுமாறாய்த் தாக்கியபோது அவர் சொன்னது: ''நானோ ஒரு புழு, மனிதன் அல்ல; மனிதரால் நிந்திக்கப்பட்டும், மக்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்'' (சங் 22:6). புழுவுக்கு எலும்பு கிடையாது; அதை யாரும் நசுக்கினால் அது தடுத்து நிறுத்த முடியாது. யோபுவின் புத்தகத்திலுள்ள மிகச் சிறிய அத்தியாயத்தில் சவால் நிறைந்ததொரு கேள்வி உண்டு: யோபு 25:5,6, ''சந்திரனை அண்ணாந்து பாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது; நட்சத்திரங்களும் அவரது பார்வைக்குச் சுத்தமானவை அல்ல. புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுமகனும் எம்மாத்திரம்?'' சாந்தகுணம் என்பது பலவீனம் அல்ல; அதுதான் உண்மையான ஆன்மீக சக்தி!



பிரியமானவரே, பந்தாவே வேண்டாம். திரைப்பட நட்சத்திரங்கள் போலவும் பிரபலங்கள் போலவும் பிரசங்கிமார் நடந்துகொள்ளக்கூடாது. நம்மில் நன்மை ஏதுமுண்டோ? நம்மில் மேன்மை ஏதுமுண்டோ? நாம் இருப்பது முழுக்க முழுக்க தேவனது கிருபையினால்தானே? (1 கொரி 15:10). தன்னை ஒரு ''சத்தம்'' என்றே தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரியவர் அறிமுகப்படுத்தினார் (யோ 1:21-23). ''இயேசு பெருகணும்; நான் சிறுகணும்'' என்பதே எப்பொழுதும் நமது முழக்கமாயிருக்கட்டும் (3:30). இயேசு தமது சீடர் நடுவிலிருந்தாலும் அவரை ஒருவன் அடையாளங்காட்டிக் கொடுக்கத் தேவையாயிருக்குமளவு அவர் சாதாரணமாயிருந்தார் (மத் 26: 47-50). இயல்பாய் இருங்கள். அன்றையச் சமுதாயத்தில் ஆதிச் சீடர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது அவர்களது ''கபடமில்லா இருதயத்தின்'' மூலமாகத்தான் (அப் 2:46). முகத்துதியே வேண்டாம் (நீதி 20:19; 28:23; 29:5). யாராவது உங்களுக்கு முகத்துதி பாடினால், அதை உங்களால் தடுத்து நிறுத்த முடியாவிட்டால், அவர்கள் பாடியதை உங்கள் உள்ளில் தங்கவிடாதீர்கள். தாவீதைப் போலத் தேவனுக்குமுன் சிறுமையையும் எளிமையையும் காத்துக்கொள்ளுங்கள். அவர் சொன்னது: ''கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?'' (2 சாமு 7:18).

### 4. பிரம்மாண்டத்தை நாடியலையாதீர்கள்.

அந்தஸ்தின் அடையாளங்களையே இவ்வுலகு நாடியலைகிறது. கிறிஸ்தவர்களுக்கு ஒரே அந்தஸ்தின் அடையாளம் கிறிஸ்துவின் சிலுவையே. எனவேதான் அப்போஸ்தலன் பவுல் இவ்விதம் அறிக்கையிட்டார்: கலா 6:14, ''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே அல்லாமல் வேறொன்றையும் குறித்து நான்

பெருமிதம் கொள்ளாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்.'' கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக தனது சாதனை, அந்தஸ்து யாவையும் குப்பையெனத் தூக்கியெறிந்தார் பவுல் (பிலி 3:4-8). வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் நாம் எளிமையைக் காத்துக்கொள்ளவேண்டும்; அவற்றில் இரண்டினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் —

**(அ) உடுத்துவதில் எளிமையாயிருங்கள்.**

பிரதான அப்போஸ்தலராகிய பேதுருவும் பவுலும் இதைக் குறித்துப் பேசியிருக்கின்றனர். தங்கள் காலத்துத் திருச்சபையினருக்கு அவர்கள் எழுதியதைக் கவனிப்போம். 1 பேது 3:3,4, ''கூந்தலைப் பின்னி, தங்க நகைகளை அணிந்து, பகட்டான ஆடைகளை உடுத்திக்கொள்ளுதலாகிய வெளி அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கட்டும்; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.'' 1 தீமோ 2:9,10, ''மகளிர் தங்கள் கூந்தலைப் பின்னுவதினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற ஆடைகளினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான ஆடையினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளும் மகளிருக்கு ஏற்றபடியே நற்செயல்களினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்.'' நாகரீகமாக, நாணயமாக உடுத்துவதற்கு எதிராய் அப்போஸ்தலர் பேசவில்லை. அவர்கள் எளிமையையே அழுத்திக் கூறினர். விக்கிரகங்கள்போல் நகைகளை உங்கள்மீது அடுக்காதீர்கள். எளிமையே அழகு. அப்படியானால், ஆடவரைப் பற்றி என்ன? இவ்விரு வசனப் பகுதிகளும் நேரடியாய் மகளிரைக் குறித்துப் பேசினாலும், இதே தத்துவம் ஆடவருக்கும் பொருந்தும். வேர்த்துக்கொட்டும்போது ''டை'' (tie) கட்டுவது தேவைதானா? ''எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை'' என்பதே நமது கோட்பாடாய் இருக்கவேண்டும். (Simple living, high thinking).



**(ஆ) நமது கட்டிடங்கள் எளிமையாயிருக்கட்டும்.**

ஆலயங்கள், ஜெப அரங்குகள் என்று பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டியெழுப்புவதில் பிரசங்கிமார் அலாதிப் பிரியம் கொண்டுள்ளனர். திருமறை மற்றும் திருச்சபைச் சரித்திரத்தைச் சற்றுக் கவனிப்பது இங்கு பயன் தரும். அன்றையத் தேவாலயம் தேவனது பரிபூரண சித்தத்தின்படியானதல்ல; அது அவரது அனுமதிச் சித்தம், அவ்வளவுதான். (Not His perfect will but His permissive will). தேவனுக்கு ஒரு வீட்டைக் கட்டிவிடவேண்டுமென்று தாவீதரசனுக்குத் தீரா ஆசை இருந்தது. ''நீர் போய் உம் இருதயத்திலிருக்கும்படியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறார்'' என்று தீர்க்கன் நாத்தானும் உடனே சொல்லிவிட்டார் (2 சாமு 7:2,3). ஆனால் அன்றிரவே தீர்க்கதரிசியிடம் தேவன் இத்திட்டம் தமது பார்வையில் பிரியமாயில்லை என்று வெளிப்படுத்திவிட்டார். ஆனாலும் ஆலயத்தைக் கட்டத் தேவன் அரசன் சாலொமோனை அனுமதித்தார் (வச 12,13). இந்த ஆலயத்தைக் குறித்து, திருச்சபையின் முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான் என்ன சொல்லுகிறார் பாருங்கள்: அப் 7: 47,48, ''சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். ஆனாலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் தங்கியிருக்க மாட்டார்.''

பிரியமானவர்களே, இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு இடமும் புனிதமானது கிடையாது. தங்களது மலைக்கு அந்தச் சமாரியப் பெண்மணி முக்கியத்துவம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்த போது, இயேசு அவளை எவ்விதம் திருத்தினார் பாருங்கள்: யோ 4:20,21, ''பெண்மணியே, நான் சொல்லுகிறதை நம்பு; நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மட்டுமல்ல, **எங்கும்** பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது.'' அந்தக் ''காலம்'' ஏற்கனவே வந்துவிட்டது என்றும், தேவன் ஒரு திடப்பொருளல்ல, அவர் ஆவியாயிருக்கிறார், ஆகையால் அவரை மக்கள் எங்குவேண்டுமானாலும் தொழுதுகொள்ளலாம் என்றும் அவர் சேர்த்துச் சொன்னார் (வச 23,24). இயேசுவின் பெயரால் எங்கெல்லாம் இரண்டு மூன்று பேர் கூடுகிறார்களோ அங்கெல்லாம் அவர் இருக்கிறார்! ஆலயத்தின்

கட்டிடங்களைச் சீடர்கள் இயேசுவுக்குச் சுற்றிக்காட்டியபோது அவர் அப்படியே அசந்துபோகவில்லை. மாறாக, அக்கட்டிடங்களெல்லாம் ஒட்டுமொத்தமாகத் தரைமட்டமாகும் என்று சொல்லிவிட்டார் (மத் 24:1,2). கி.பி. 70இல் ரோமானியர் அதை இடித்துத்தள்ளியபோது இயேசுவின் கூற்று நிறைவேறிற்று. எங்கிருந்து ஜெபிக்கிறோம் என்பது முக்கியமல்ல; எவரிடம், எப்படி ஜெபிக்கிறோம் என்பதே காரியம். டெல்லியிலுள்ள பாராளுமன்றக் கூடுகைகளுக்காய்ச் சென்னையிலிருந்தே ஜெபிக்கலாம். எருசலேமின் சமாதானத்திற்காக இந்தியாவிலிருந்தே ஜெபிக்கலாம். ஏனென்றால், ''நான் சமீபத்திற்கு மட்டுமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே 23:23).

தேவாலயத்தில் அல்ல, ஒரு மேலறையிலேயே பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (அப் 1:13; 2:1-4). இல்லங்களே விசுவாசிகள் கூடும் இடங்களாயின (2:46). கிறிஸ்தவத்தை கி.பி. 400இல் நாட்டின் மார்க்கமாக மன்னன் கான்ஸ்டன்டைன் பிரகடனம் செய்தபோது, மனந்திரும்புதல் இல்லாமலே 4 சதவீதக் கிறிஸ்தவர் 80 சதவீதமாயினர். கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவது நாகரீகமாயிற்று, ஆதாயமுள்ளதாயுமாயிற்று. திருச்சபை இவ்வளவு பெரிதாகிப் பிரபலமடைந்தபோது, அது பிரம்மாண்டமான கட்டிடங்கள் கட்டும் வசதி பெற்றது. ''நோவா காலத்து அழிவுக்கு அடுத்த பேரழிவு இதுதான்'' என்று ஒரு தேவ மனிதன் கூறுகிறார். ''நம்மைக் கொன்றது கட்டிடச் செங்கற்கள்தான்'' என்றும் அவர் சேர்த்துச் சொல்கிறார்! கி.பி. 476இல் திருச்சபை தனது இருண்ட காலத்திற்குள் (Dark Ages) நுழைந்தது.

மெகா சபைகள் என்ற பெயரில் இந்தப் பாபேலின் ஆவி கிறிஸ்தவத்திற்குள் திரும்பி வந்துகொண்டிருக்கிறது. ஆனால் தேவன் விடும் சவால் இதோ: ஏசா 66:1,2, ''வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் இடம் எப்படிப்பட்டது? எனது கரம் இவற்றையெல்லாம் படைத்ததினால் இவையெல்லாம் உண்டாயின ... ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்.'' ஆனாலும், பல



பிரசங்கிமாரும் தங்களைத் தீர்க்கதரிசிகள் என்று அழைத்துக்கொள்வோரும், எரேமியாவின் காலத்தில் நடந்ததுபோல் கீழ்வரும் வார்த்தைகளைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள்: எரே 7:3-5, ''சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லும் பொய் வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்.'' இரவும் பகலும் பாடுபட்டு இறைமக்களைக் கட்டியெழுப்பித் தேறினவர்களாய் நிறுத்த உழைப்பதை விட்டுவிட்டு இவ்வித ஊழியர் கட்டிடங்களைக் கட்டுவதிலேயே காலம் செலவழிக்கின்றனர் (கொலோ 1:28,29). இறைமக்களைக் கட்டியெழுப்புகிறவனாயிருந்தான் எப்பாப்பிரா (4:12). தேவா, இவ்வித மனிதரை எங்களுக்குத் திரும்பத் தரமாட்டீரோ?

பிரம்மாண்ட ஆராதனையகங்களினால் ''தொழுகை'' (worship) ஆதிநிலைக்கு வந்துவிட்டதென்று எண்ணுகிறோம்; ஆனால் ''ஐக்கியம்'' (fellowship) போய்விட்டதே! மட்டுமல்ல, கிறிஸ்தவத்திற்கெதிரான சக்திகள் பெருகிக்கொண்டு, கிறிஸ்தவக் கட்டிடங்கள் குறிவைக்கப்படும் இந்தியா போன்றதொரு நாட்டில் தலா 1000 விசுவாசிகள் கூடக்கூடிய 50 அரங்குகள் கட்டுவதே, 50,000 பேர் அமரக்கூடிய ஒரே அரங்கு கட்டுவதைவிடப் பாதுகாப்பானது. அப்பொழுது ''தொழுகை'' **அத்துடன்** ''ஐக்கியம்'' புத்துயிர் பெறும். மட்டுமல்ல, ஒரே தலைவர் சூப்பர் ஸ்டார் ஆவதைவிட 50 தலைவர்கள் எழும்புவர். தமது பிள்ளைகளிடம், அதிலும் குறிப்பாகத் தமது ஊழியரிடம், இன்றும் தேவன் நேரடியாய்ப் பேசுகிறார் என்று நாம் நம்புகிறேன். ஆனால் தனி நபர்களது பேராசைகள் ''கர்த்தர் சொன்னார்'' எனும் வார்த்தைகளால் திருமுழுக்காட்டப்படுகின்றன. இது அபத்தம்.

ஆதிச்சபைக்குப் ''பெரிய'' கட்டிடங்கள் இல்லை; அதற்கு இருந்ததோ ''மிகுந்த'' வல்லமை (அப் 4:33). ''பூரண'' கிருபை (4:33), ''பெரிய'' அற்புதங்கள் (6:8), ''மிகுந்த'' உபத்திரவம் (8:1), மக்களுக்கு ''மிகுந்த'' பயம் (5:11), இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். நமக்கோ இவை ஒன்றும் கிடையாது; பெரிய கட்டிடங்கள் மட்டுமே இருக்கும் தரித்திரம்! புதிய ஏற்பாட்டு எளிமைக்குத் திரும்பி வருவோம்!

## 6

# தியாகம் எனும் பூர்வ பாதை

Old Path of Sacrifice





## 6

# தியாகம் எனும் பூர்வ பாதை

Old Path of Sacrifice

நமதாண்டவர் சீடத்துவத்திற்காய் முன்வைத்த அடிப்படை நிபந்தனையைப் போதுமான அளவு நாம் வலியுறுத்தாததால் ‘‘தியாகம்’’ என்பது இன்று அவ்வளவு பிரபலமான கருத்து அல்ல. அவர் சொன்னது: லூக் 9:23, ‘‘ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.’’ தமது பாடுகளையும் மரணத்தையும் குறித்து ஆண்டவர் பேசிய முந்திய வசனத்தில் (வச 22) நமக்கு எவ்விதப் பிரச்னையுமில்லை; ஆனால் 23ஆம் வசனத்தின் துவக்க வார்த்தைகள் முக்கியமானவை: ‘‘பின்பு அவர் **எல்லாரையும்** பார்த்து ...’’ கிறிஸ்துவைப் பின்பற்றும் எவருக்கும் சிலுவை சுமத்தல் விதிவிலக்கல்ல. இயேசு ஒரு முறை சிலுவை சுமந்து மரித்தார்; நாமோ தினமும் சிலுவை சுமக்கவேண்டும். இயேசு நமக்காய்த் தியாகம்பண்ணி பாடுபட்டதால் நாம் தியாகம்பண்ணவோ பாடுபடவோ தேவையில்லை எனும் தவறான உபதேசம் இன்று தாண்டவமாடுகிறது. ஆனால், பிரியமானவர்களே, இயேசு அனுபவித்த அத்தனையிலிருந்தும் நமக்கு அனுபவப் பாடங்கள் உண்டு. இது தெளிவாகத் திருமறையில் போதிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்: எபே 5:1,2, ‘‘நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காய்த் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் **பலியாகவும்** ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.’’‘

‘‘சுகந்த வாசனையான பலி’’ எனும் கருத்து இறைநூலில் இழைபோல் ஓடுகிறது. ஆதி 8:20,21, ‘‘கர்த்தருக்கு நோவா ஒரு

பலிபீடம் கட்டி, சுத்தமான அனைத்து மிருகங்களிலும், சுத்தமான அனைத்துப் பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவற்றைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டார். **சுகந்த வாசனையைக்** கர்த்தர் முகர்ந்தார்.'' மோசேக்கு தேவன் கட்டளை யிட்டது: யாத் 29:18, ''ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின் மேல் சுட்டெரித்துவிடு; இது கர்த்தருக்குச் செலுத்தும் சர்வாங்க தகனபலி; இது **சுகந்த வாசனையும்** கர்த்தருக்குச் செலுத்தும் தகன பலியுமாய் இருக்கும்.'' அடுத்து லேவியராகமம் 1:9க்கு வாருங்கள்: ''அவற்றையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகன பலியாக எரித்துவிடட்டும்; இது கர்த்தருக்குச் **சுகந்த வாசனையான** தகனபலி.'' இன்னொரு வசனம், எண் 15:10, ''பானபலியாக அரைப் படி திராட்சரசத்தையும், கர்த்தருக்குச் **சுகந்த வாசனையான** தகன பலியாகப் படைக்கவேண்டும்.'' இவ்விதமாக, தமது மக்களிட மிருந்து தேவன் எதிர்பார்க்கும் தியாக வாழ்வு துவக்க முதலே இருந்து வந்திருக்கிறது. இதில் அவர் பிரியம் கொள்கிறார்; ஏனெனில், இதிலிருந்து அவர் முகரும் வாசனை அவருக்குப் பிரியமாயிருக் கிறது.

நாளாவட்டத்தில் மக்களோ தங்கள் வாழ்வில் புனிதத்தைக் காத் துக்கொள்வதில் கவனம் செலுத்தாமல் வெறுமனே காணிக்கைகளி லும் பலிகளிலுமே ஆர்வம் காட்டினர். இதைத் தேவன் முழுக்க முழுக்கக் கண்டித்தார். தமது வார்த்தைக்குக் கீழ்ப்படியாது, தனி வாழ் வில் பரிசுத்தமில்லாது, செலுத்தப்பட்ட காணிக்கையிலும் பலியிலும் அவருக்கு விருப்பமேயில்லை. அதைத் தேவன் எவ்விதம் கண்டித் தார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம். பாவத் தில் தீவிரித்திருந்த அமலேக்கியரை முற்றும் அழித்துவிடும்படி தேவன் சவுலைப் பணித்து அனுப்பினார் (1 சாமு 15:18). சவுலின் கீழ்ப்படிதலோ அரைகுறையாயிருந்தது. உசிதமானவைகளைத் தக்க வைத்துக்கொண்டு உதவாதவைகளையே அவர் அழித்துப்போட்டார் (வச 9). சவுலை அரசனாக்கியது ஆண்டவருக்கு மிகுந்த ''மன வருத்தம்'' உண்டாக்கியது (வச 11). உசிதமான அந்த மிருகங்களை யெல்லாம் தேவனுக்குப் பலி செலுத்தவே அவர் விட்டுவைத்ததாகத் தீர்க்கன் சாமுவேலிடம் அவர் விளக்கம் சொன்னார் (வச 21).



அதற்குச் சாமுவேல் கொடுத்த பதில்: ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிவதைவிடச் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைவிடக் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக் களின் கொழுப்பைவிடச் செவிகொடுத்தலுமே உத்தமம்'' (வச 22).

அமலேக்கியரின் காரியத்தில் சவுலரசன் கர்த்தரைத் துக்கப்படுத் தினார். உரியாவின் மனைவியாகிய பத்சேபாளின் காரியத்தில் தாவீ தரசன் கர்த்தரைத் துக்கப்படுத்தினார். தீர்க்கன் சாமுவேலினால் சவுல் கடிந்துகொள்ளப்பட்டபோது அவர் சாக்குபோக்குகள் சொல்லத் தொடங்கினார். தாவீதோ தீர்க்கன் நாத்தானால் கடிந்துகொள்ளப் பட்டபோது, ''நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன்'' என்று உடனே அறிக்கை செய்தார் (2 சாமு 12:13). சுகந்த வாசனை யாக எது தேவனைப் பிரியப்படுத்துமென்று தாவீது தனது பாவ அறிக்கையில் குறிப்பிட்டார்: சங் 51:16,17, ''ஆண்டவரே, பலியை நீர் விரும்புவதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்குகந்த **பலிகள்** நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் அவமதிக்க மாட்டீர்.'' தகனபலி தேவையில்லை என்று தாவீது சொல்லவில்லை. அவர் வலியுறுத்தியது என்ன வென்றால், நமது பலிகளுக்குப் பின்னணியில் கீழ்ப்படிதலுள்ள தொரு வாழ்க்கை இருக்கவேண்டும். தேவனது பலிபீடத்தில் பலியிடப்படும் காளைகள் அவருக்கு ஏற்புடையவற்றாய் இருக்க வேண்டுமானால் அதற்கு நிபந்தனையாக ''நீதியின்'' பலிகள் செலுத்தப்படவேண்டும் (வச 19).

கர்த்தரிடம் திரும்பி வரும்படித் தீர்க்கன் ஓசியா மக்களுக்கு அழைப்பு விடுத்தபோது கூறியது: ''பலியை அல்ல, இரக்கத்தையும், தகனபலிகளைவிடத் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகி றேன்'' (ஓசி 6:1,6). இந்த வசனக் குறிப்புகளையெல்லாம் ரோமர் 12:1இல் அப்போஸ்தலன் பவுல் சுருக்கிக் கூறுகிறார்: ''சகோதரரே, நீங்கள் உங்கள் உடல்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக (உயிருள்ள பலியாக) ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்

டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யக்கூடிய புத்தியுள்ள ஆராதனை.'' இதை ஏன் ''உயிருள்ள'' பலி என்று பவுல் அழைக்கிறார்? பழைய ஏற்பாட்டு நியமனத்தின்படி மிருகங்களும் பறவைகளும் ''கொல்லப்பட்டுத்தான்'' பலி கொடுக்கப்படவேண்டும். அந்த அடையாளத்தை மாற்றாகப் பவுல் இங்கு பயன்படுத்துகிறார்! பலிகளின் சடங்காச்சாரப் பரிமாணத்தை மட்டும் பிடித்துக்கொண்டு, அவை தரும் ஆன்மீகப் படிப்பினைகளைக் கவனியாது இறைமக்களைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் கடிந்துகொண்டதற்கு இங்கு பவுல் கூறுவது இணையாயிருக்கிறது.

சரித்திரம் திரும்பும். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர் தனி வாழ்வில் பரிசுத்தம் என்பதை விட்டுவிட்டு சடங்காச்சாரச் செயல்பாடுகளிலேயே தீவிரம் காட்டினர். கிறிஸ்தவர்களாகிய நாம் தனிப்பட்ட தியானப் பயிற்சிகளை முக்கியப்படுத்தி, நமது வாழ்வில் நாம் செய்ய வேண்டிய திட்டமான தியாகங்களைக் கவனியாது விடுகிறோம். ''தியாகம்'' என்றால் என்ன? சொல்லகராதி கொடுக்கும் பொருள்: ''நாம் அதிக மதிப்புள்ளதாய் நினைக்கும் ஒன்றை அதைவிட முக்கியமான ஒன்றிற்காய் அல்லது ஒருவருக்காய்த் துறந்துவிடுதல்.'' இதைத் தாவீதரசன் சரிவரப் புரிந்திருந்தார். மக்களைத் தாவீது கணக்கிட்டது தேவனுக்குப் பிடிக்கவில்லை; ஏனெனில், அது புயபலத்தில் சார்வதற்கு அடையாளம் (2 சாமு 24:10). இதனால் மக்கள் நடுவில் தேவன் கொள்ளை நோயை அனுப்பினார். தாவீதின் திருக்காட்சியாளனாகிய காத் என்பவர் மூன்றிலொன்றைத் தெரிந்துகொள்ள மூன்று காரியங்களைத் தாவீதுக்கு முன்வைத்தார். தேவனது கரங்களில் விழுந்துவிடுவதையே தாவீது தெரிந்தெடுத்தார் (வச 14). தகன பலிகளைச் செலுத்த ஒரு களம் நாடி அர்வனாவிடம் தாவீது சென்றார் (வச 21). அதை இலவசமாய்த் தந்துவிட அர்வனா முன்வந்தபோது தாவீது சொன்னது: ''அப்படியல்ல, நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலை கொடுத்து வாங்குவேன்'' (வச 24). தேவனுக்காய் நாம் செய்யும் தியாகம் எதுவும் நம்மைப் பாதிக்க வேண்டும். இல்லையேல் அது மலிவானது. நம்மைப் ''பாதிக்கும்''



எதனைச் சமீப நாட்களில் நாம் தியாகம்பண்ணியிருக்கிறோம்? நடைமுறையில் நாம் செய்யக்கூடிய சில தியாகங்களை இங்கு கவனிப்போம் —

## 1. நம்மையே தியாகம்பண்ணுதல்

பொன்னினால் இஸ்ரவேலர் ஒரு காளை செய்து அதனைக் கும்பிட்டதால் தேவன் துக்கப்பட்டு அவர்களை அழித்துவிடவேண்டுமென்று தமது கோபத்தில் எண்ணினார் (யாத் 32:7-10). மோசேயோ தேவனுக்குமுன் மன்றாடினார். அவர் சொன்னது: ''ஆண்டவரே, இம்மக்களை மன்னியும்; இல்லையேல் என்னை மறந்துவிடும்!'' (வச 32). மக்களது பாவம் பெரிதல்ல என்று மோசே எண்ணவில்லை (வச 31). ஆனால் தனது மக்களை விட்டுவிட்டு அவர் மட்டும் கானானுக்குள் நுழைய அவர் விரும்பவில்லை. அவரது மக்கள் அவரோடு பரலோகிற்கு வர முடியாவிடில் அவரே நரகம் செல்லவும் ஆயத்தமாயிருந்தார். அவரது ஜெபம் எவ்வளவு ஆபத்தானது, பாருங்கள்! இதுதான் நம்மையே தியாகம் செய்வது என்பதற்குப் பொருள்.

இதே விதமான தியாகம்பண்ண எஸ்தர் ராணி ஆயத்தமாயிருந்தாள். அவர்களுக்கெதிராக தீட்டப்பட்ட திட்டத்திற்கெதிராய் அவளும் அவளது தாதிமாரும் யூத மக்களும் உபவாசித்து மன்றாடினர். ஆனாலும், உபவாச ஜெபமானது செயல்பாட்டிற்கு மாற்று அல்ல. அனைத்தும் தேவனையே சார்ந்திருக்கிறது என்றெண்ணி ஜெபிக்க வேண்டும்; அனைத்தும் நம்மையே சார்ந்திருக்கிறது என்றெண்ணிச் செயல்படவேண்டும். தெளிவான அழைப்பில்லாது ஒருவரும் ராஜாவிடம் செல்லக்கூடாது என்பதே நியமமாயிருந்தாலும், ''நான் செத்தாலும் சாகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு ராஜாவிடம் செல்ல எஸ்தர் துணிந்தாள் (எஸ்தர் 4:15,16). ராஜா முன்பாக அவள் தன்னை எப்படி நியாயப்படுத்தினாள் பாருங்கள்: ''என் மக்கள்மீது வரும் தீங்கை நான் எப்படிப் பார்க்க முடியும்? என் குலத்திற்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்க முடியும்?'' (8:6). இதுதான் நம்மையே தியாகம்பண்ணுதல் என்பது. மிஷனரிப்பணிக்காய் ஜெபிக்கிறோம் என்று சொல்லுகிறோம்; ஆனால் நமது இந்தியச் சகோதர சகோதரிகளுக்காய் இந்த அளவு செல்ல நாம் துணிகிறோமா?

மோசேக்கும் எஸ்தருக்கும் இருந்த அதே தியாகவுணர்வு அப்போஸ்தலன் பவுலுக்கும் இருந்தது. அவர் ரோமர் 9:1-3இல் சொல்வது நம்புதற்கரியது; ஆனால் அது முழுக்க முழுக்க உண்மை என்கிறார்.''எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மன வேதனையும் உண்டாயிருக்கிறது. நான் சொல்லுகிறது பொய் அல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. மனித உறவின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே.'' தனது ஒரே பிள்ளையை அல்லது வாழ்க்கைத் துணையை இழக்கக் கொடுத்தவரின் புலம்பல் அல்லவோ இது? ''மிகுந்த துக்கம்!'' ''இடைவிடாத மன வேதனை!'' இவ்வரிகளைப் பவுலடியார் எழுதும்போது பக்தன் மோசேயின் வார்த்தைகள் நினைவிலிருந்திருக்கும். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோரது தியாகச் சிந்தையைப் பவுல் மெச்சினார். அவர் எழுதியது: ''கிறிஸ்து இயேசுவுக்குள் எனது உடன் பணியாளராகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் உயிருக்காய்த் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்'' (ரோ 16:3,4). நாம் நமது கழுத்தணியைக்கூடக் கொடுக்கமாட்டோம்! தங்கள் வயிற்றையே சேவிப்போரிடமிருந்து பவுல் இவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறார் (வச 18).

கிறிஸ்துவுக்காகவும், அவரது சபைக்காகவும், சுவிசேஷத்திற்காகவும் தங்களையே தியாகம்பண்ணியோரின் சரிதைகளால் திருமறைச் சரித்திரம் மட்டுமல்ல, திருச்சபைச் சரித்திரமும் நிறைந்துள்ளது. அவர்களில் ஒருவர் செல்வந்தராகவும், புகழ்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரராகவுமிருந்து மிஷனரியாய் மாறிய C.T. ஸ்டட் (1862-1931) ஆவார். அவரது கூற்று: ''கிறிஸ்து எனக்காய் உயிர் கொடுத்திருப்பாரானால் அவருக்காய் நான் செய்யும் எத்தியாகமும் பெரிதல்லவே!'' கொரிந்து சபை விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியதின் அடிப்படையிலேயே இக்கூற்று அமைந்திருக்கிறது: 2 கொரி 5:14,15, ''கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது ... உயிர் வாழ்பவர்கள் இனித் தங்களுக்கென்று உயிர் வாழாமல், தங்களுக்காக



உயிர் கொடுத்து உயிர்த்தெழுந்தவருக்கென்று உயிர் வாழும்படி அவர் எல்லாருக்காகவும் உயிர் கொடுத்தார் என்றும் நிதானித்திருக்கிறோம்.'' பிலிப்பிய சபையினருக்குச் சிறைச்சாலையிலிருந்து பவுல் எழுதியது: ''உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும், ஊழியத்தின் மேலும், நான் வார்க்கப்பட்டுப்போகிறேன்'' (பிலி 2:17).

C.T. ஸ்டட் அவர்களது வாழ்க்கைச் சரிதையையும், கிறிஸ்துவுக்காக தங்கள் எதிர்காலத்தையே கிரயமாக்கி மிஷனரிகளாய்ப் புறப்பட்டுச் சென்ற ''கேம்பிரிட்ஜ் எழுவர்'' (Cambridge Seven) ஆகியவரது சரிதைகளையும் வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கல்லூரி நாட்களில் கிடைத்தது. இந்தியாவின் தலைசிறந்த தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒன்றாகிய Indian Institute of Technology, Madrasஇல் கட்டிட அடித்தளக் கலையில் முதுநிலைப் பட்டம் பெறும் சிலக்கியம் 1970இல் எனக்குக் கிட்டியது. எங்கள் வகுப்பில் நாங்கள் ஆறு பேர்; என்னைத் தவிர மற்ற யாவரும் பெரும்பாலும் அமெரிக்காவில் தங்கள் முனைவர் பட்டப் படிப்பைத் தொடர்ந்தனர். வகுப்பில் நான்தான் முதல் மாணவன் எனினும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இறைப்பணியில் இறங்கிவிட என் இதயம் துடித்தது. மேற்படிப்பை நான் தொடரவில்லை என்பது எனது பேராசிரியருக்குப் பெருத்த ஏமாற்றம். எனது தீர்மானம் மதியீனமானதென்றும் நிச்சயம் பின்னர் நான் வருந்துவேனென்றும் என்னிடம் அவர் சொல்லியனுப்பினார். அடுத்த ஆண்டே ஒரு தேசிய ஊழியம் பிறந்தது. எனது வாழ்வின் உசிதமான ஆண்டுகள் அனைத்தையும் இறையரசிற்காய்ச் செலவழித்துவிட்டேன் எனும் பரம திருப்தி இன்று (2010), 40 ஆண்டுகளுக்குப் பின்னர், எனக்கு உண்டு. அப்போஸ்தலன் பவுல் அல்லது C.T. ஸ்டட் போன்ற முன்னோடி மிஷனரிகளோடு நாம் யாவரும் நம்மை ஒப்பிட முடியாது. ஆனால் நான் சொல்ல விரும்புவது யாதெனில், நம்மில் ஒவ்வொருவரும் இறையரசிற்காய்ச் சற்றும் குறையாமல் முடிந்த அளவு நம்மைத் தியாகம்பண்ணவேண்டும். இதுவே புரட்சிகர சீர்திருத்தம். ஐந்தப்பம் இருமீனைக் கொடுத்துவிட்ட அந்த இளைஞனால் முடிந்தது அவ்வளவுதான்!

வாழ்வில் நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் ஒரு குறிப்பிட்ட தியாகத்திற்குள் நம்மை நடத்தவேண்டும். அற்புத மீன்பிடிப்பைத் தொடர்ந்து சீமோனும் அவனோடிருந்தவர்களும் ''எல்லாவற்றையும் விட்டு இயேசுவுக்குப் பின்சென்றார்கள்'' (லூக் 5:11). தங்கள் வேலைத்தலத்தில் ஏதாவதொரு பிரச்னை ஏற்பட்ட பின்னர் தான் பலர் தங்கள் வேலையை விட்டு முழுநேரத் திருப்பணியில் இறங்குகின்றனர். ஆனால் அளவிட முடியாத ஆசீர்வாதத்தை அடுத்து அன்றோ சீமோனும் அவனது உடனாளிகளும் எல்லாவற்றையும் விட்டனர்? நாம் தேவனிடமிருந்து பெறும் அனைத்து ஆசிகளும் அவரை மகிமைப்படுத்தவும், அவரது மக்களை ஆசீர்வதிக்கவும் ஊற்றிவிடப்படவேண்டும். இங்குதான் இஸ்ரவேலர் தவறினர். அதைத் தீர்க்கன் ஓசியா சுட்டிக்காட்டிப் பேசுகிறார்: ''இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது'' (ஓசி 10:1). தாவீதரசனோ தியாகத்திற்கு அபாரமான எடுத்துக்காட்டாய்த் திகழுகிறார். பெத்லகேமின் தண்ணீருக்காய் அவர் ஏங்கிக்கிடந்தார். அவரது வீரரில் மூவர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து எதிரியின் சேனை வழியாய் ஊடுருவிச் சென்று தாவீதுக்குப் பனிபோன்றை நீரைக் கொண்டுவந்து கொடுத்தனர். ''தாவீதோ அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டார்'' (1 நாளா 11:18).

## 2. நமது பிள்ளைகளைத் தியாகம்பண்ணுதல்

நம்மையும் வேறெதையும்விட நாம் நமது பிள்ளைகளைத்தான் நேசிக்கிறோம். ஒரு பள்ளியில் நடந்த வேதபாட வகுப்பைத் தொடர்ந்து ஒரு மாணவன் கேட்ட கேள்வி என் நினைவுக்கு வருகிறது: ''கடவுள் நம்மை அவ்வளவாய் நேசிக்கும்போது அவரே வந்திருக்கலாமே, தமது குமாரனை அனுப்பியது ஏன்?'' சிந்திக்கவைக்கும் இக்கேள்விக்கு உடன் பதில் சொல்லத் தெரியாது திணறினேன். இடைவேளைக்குப் பின்னர் பதில் சொல்லுகிறேன் என்று சமாளித்தேன். இடைவேளையின்போது தலைவர்களாக நாங்கள் கலந்துரையாடியபோது, நம்மைவிட நாம் நமது பிள்ளைகளைத்தானே நேசிக்கிறோம் என்ற உண்மை தெளிவாகியது! அந்த இளைஞனுக்கு இப்பதில்



திருப்தியளித்தது. அவரது குமாரனைவிடத் தேவனுக்கு அருமையானது எதுவுமில்லை. எனவேதான் திருமறை கேட்கும் கேள்வி: ''தமது சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரையே ஒப்புக்கொடுத்தவர் அவரோடு மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?'' (ரோ 8:32).

முதற்பேறானவனைக் குறித்துப் பழைய ஏற்பாட்டிலுள்ள இறைக் கட்டளையை இது அந்த யுகத்துக்கடுத்தது என்று ஒதுக்கிவிட முடியாது. கீழ்வரும் வசனப்பகுதிகளைக் கவனியுங்கள்: யாத் 22:29, ''உனது குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடுத்துவிடு.'' 13:2, ''முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது.'' இஸ்மவேல் அல்ல, ஈசாக்குதான் ஆபிரகாமுக்குத் தேவனது வாக்குத்தத்தத்தின் குமாரன். ஆபிரகாமும் சாராளும் ஈசாக்கை மிகவும் பாசத்துடன் நேசித்தார்கள். பல்லாண்டுகளாய்ப் பிள்ளையில்லாது சலிப்படைந்திருந்த தம்பதியரின் வாழ்வில் அவனது பெயருக்கேற்றபடி ஈசாக்கு ''சிரிப்பைக்'' கொண்டு வந்தான். தேவனோ ஆபிரகாமைப் பார்த்துச் சொன்னது: ''உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசக் குமாரனுமாகிய ஈசாக்கை ... நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் தகனபலியாகப் பலியிடு'' (ஆதி 22:2). உனது ''ஏக சுதனாகிய ஈசாக்கு'' என்று குறிப்பிடாமல், உனது ''சுதன்'' (குமாரன்) என்று மட்டும் தேவன் சொல்லியிருப்பாரெனில், இஸ்மேலை ஆபிரகாம் பலியிட்டிருப்பான்! இஸ்மவேலுக்கும் ஈசாக்குக்கும் இடையில் பிரச்னை எழும்பியுள்ள அக்குடும்பத்திற்கு அது ஒரு நிவாரணமாயிருந்திருக்கும்! உயிர்த்தெழுதலைக் குறித்த முதல் சித்திரத்தைத் தந்தது ஆபிரகாமின் கீழ்ப்படிதலே (எபி 11:17-19).

அடுத்து வருவது மனோவா. அவரது மனைவி மலடியாயிருந்தாள். கர்த்தருடைய தூதன் அவளுக்குத் தரிசனமாகி ஒரு குமாரனை வாக்குப்பண்ணினார். ''பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பியும்'' என்று மனோவா கர்த்தரிடம் வேண்டினார் (நியா 13:3,8). பிள்ளையில் இறைச்சித்தம் நிறைவேறவேண்டுமென்று அவன் பிறக்குமுன்னரே பெற்றோருக்

கிருந்த ஆவலைக் கவனியுங்கள். ''அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும்?'' என்று மனோவா மறுபடியும் கேட்டார் (வச 12). தேவன் கொடுத்த பிள்ளையை அப்பெற்றோர் திரும்பத் தேவனுக்கே கொடுத்துவிட்டனர். அன்னாள் இன்னொரு சிறந்த எடுத்துக்காட்டு. சாமுவேலைப் பால் மறக்கப்பண்ணியதும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலேயே என்றும் இருக்கும்படியாய் அவனை அங்கு கொண்டுபோய் விட்டுவந்தாள் (1 சாமு 1:22,24). தமது பணிக்குச் சாமுவேலை அர்ப்பணித்துவிடவேண்டுமென்று அன்னாளுக்கும் எல்கானாவுக்கும் தேவன் கட்டளையிட்டாரோ? இல்லவே இல்லை! அவர்கள் தன்னார்வமாய் அப்படிச் செய்தார்கள். ஆச்சாரியன் ஏலியிடம் அவள் சொன்ன வார்த்தைகள் சவால் நிறைந்தவை: ''இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடம் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். **ஆகையால்** அவன் உயிரோடிருக்கும் அனைத்துக் காலத்திற்கும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன்'' (வச 27,28). இதுதான் மெய்யான ஆராதனை (28ஆ). தங்களுக்கு மகிழ்ச்சியும் சந்தோஷமுமான தங்கள் மகனை ஒரு தீர்க்கதரிசியாயிருக்கும்படி இவ்விதமே சகரியாவும் எலிசபெத்தும் பாலைவனத்திற்குள் அனுப்பிவைத்தனர் (லூக் 1:14,76,80). ஒரு பிள்ளை வேண்டுமென்று நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது அவருக்கு என்ன வாக்களிக்கிறோம்? ''நான் அந்தப் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன்!'' தாளும் மையும்தான் வீண்! இறையரசிற்குப் பயனேதுமில்லாத கிராக்கி!

திருச்சபைச் சரித்திரத்திலும் இதுபோன்று மிளிரும் சாட்சிகள் பலவுண்டு. ''தேவன் எங்களுக்கு ஒரு மகனைத் தந்தால் அவன் சீனாவுக்கு மிஷனரியாயச் செல்லவேண்டும்'' என்று ஹட்சன் டெய்லரின் (1832-1905) பெற்றோர் ஜெபித்தனர். அவர்களது பக்தியுள்ள வாஞ்சையைத் தேவன் நிறைவேற்றினார். அவர் சீனாவுக்குச் சென்று சீனா உள்நாட்டு மிஷனரி இயக்கத்தை (China Inland Mission) நிறுவினார். ஏமி கார்மைக்கல் (1861-1951) அம்மையார் தன்னை முழுநேர இறைப்பணிக்கு அர்ப்பணித்தபோது சாட்சியாய்ச் சொன்னது: ''எனது பெற்றோரின் ஜெபங்களுக்கு ஆண்டவர் பதிலளித்தார்!''



அவர்கள் இந்தியாவிற்கு வந்து டோனாவூரில் நட்சத்திர ஐக்கியத்தை (Star Fellowship) நிறுவினார்கள். அஞ்ஞானக் கொடுமைகளிலிருந்து இளம் பெண்பிள்ளைகளைக் காப்பாற்ற தேவன் அவர்களைப் பயன்படுத்தினார். சூசன்னா-சாமுவேல் வெஸ்லி தம்பதியரின் பத்தொன்பது பிள்ளைகளில் பெரும்பாலானோர் முழுநேரமாய்த் தேவனுக்குப் பணியாற்றினர். அவர்களில் ஜான் வெஸ்லியும் (1703-1791) சார்ல்ஸ் வெஸ்லியும் (1707-1788) குறிப்பிடத் தக்கவர்கள். ஜான் வெஸ்லி ஓர் எழுப்புதல் வீரராய் மெதடிஸ்டு சபையின் நிறுவனரானார். சார்ல்ஸ் வெஸ்லி 9000க்கும் மேற்பட்ட பாடல்கள் இயற்றினார். *''கேள் ஜென்மித்த ராயர்க்கே''* என்ற கிறிஸ்துமஸ் பாடலும், *''இன்று கிறிஸ்து எழுந்தார்''* என்ற ஈஸ்டர் பாடலும் இவர் இயற்றியவைதான். ஜான் வெஸ்லியும் சார்லஸ் வெஸ்லியும் திருப்பணியில் அபாரமாய் இணைந்து செயல்பட்டனர். ஜான் வெஸ்லியைத் ''தலை'' என்றால், சார்ல்ஸ் வெஸ்லியை ''இதயம்'' எனலாம்!

பாதகமான தட்பவெப்ப நிலைகள், தொற்று நோய்கள், சுகாதாரக் குறைவு போன்றவை நிறைந்துள்ள நாடுகளுக்குத் தங்கள் குடும்பத்தினரை ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய மிஷனரிகள் கூட்டிச் செல்ல முடியவில்லை. இன்றோ நாம் அவர்களது தியாகப்பணிகளின் பலனை அனுபவிக்கிறோம். நமது பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆலயங்களில் பெரும்பாலானவை அவர்களால் கட்டப்பட்டவை. ஆனால் நாமோ கொடிய பஞ்சத்தில் ஒருத்தியின் மகனைச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, ஒப்பந்தத்தின்படி அடுத்த நாள் அடுத்தவளின் மகனைக் கொடுக்க மறுத்துவிட்டவளைப் போலிருக்கிறோம் (2 இரா 6:24-29). இவ்வித மனப்பான்மையைத் தமிழகத்தின் முன்னாள் முதல்வர்களில் ஒருவரான C.N. அண்ணாதுரை இவ்விதம் விளக்கினார்: ''நாம் சகோதரர்; உன்னுடையதெல்லாம் என்னுடையது; என்னுடையதெல்லாம் என்னுடையது!''

தேவனுக்கு இருந்தது ஒரே மகன். அவரையும் மிஷனரி இரத்த சாட்சியாய் அனுப்பிவிட்டார். உங்களுக்கு இரு பிள்ளைகளிலிருந்தால் ஒன்று அதிகம்தான்! எங்கள் பெற்றோருக்கு நாங்கள் இரு

மகன்கள்; நான் முதற்பேறானவன். 1972இல் எனது தந்தையின் இறப்புக்குப் பின்னர் 1975இல் நான் முழுநேரத் திருப்பணிக்கு என்னை அர்ப்பணித்தபோது, குளமான கண்களுடன் எனது அம்மா சொன்னது: ''எனது கனவு நனவாகிவிட்டது!'' நன்கு படித்த வாலிபர் நங்கையரிடமிருந்து மிஷனரிப்பணிக்கு விண்ணப்பப்படிவங்கள் வருவது வெகுவாய்க் குறைந்துவிட்டது. தியாகம் எனும் பூர்வ பாதைக்குத் திரும்பி வருவதே இன்றையத் தேவை.

### 3. நமது உடைமைகளைத் தியாகம்பண்ணுதல்

காணிக்கை, தசமபாகம் ஆகியவை குறித்த உபதேசங்கள் ஏராளம்; ஆனால் ''தியாகம்பண்ணுதல்'' குறித்துப் பேசுவது யாரோ? தசம பாகம் என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்துக்கான ஒழுங்குமுறை, அவ்வளவுதான் (லேவி 27:30). கிறிஸ்துவின் இறப்பையடுத்துப் புதிய உடன்படிக்கை அமுலாகியுள்ளது (மத் 26:28). இந்த உடன் படிக்கையின்படித் தசமபாகம் பற்றிய சட்டம் எதுவுமில்லை. புதிய உடன்படிக்கை ஒரு ''மேன்மையான'' உடன்படிக்கையானதால், காணிக்கை கொடுப்பதில் ''மேன்மையான'' முறைகள் போதிக்கப் பட்டிருக்கின்றன: உற்சாகமாய்க் கொடுத்தல் (2 கொரி 9:7), உதாரத் துவமாய்க் கொடுத்தல் (2 கொரி 8:2), மற்றும் திறனுக்கு மிஞ்சித் தியாகமாய்க் கொடுத்தல் (2 கொரி 8:3). எனவே இன்றையக் கிறிஸ்த வன் தசமபாகத்தில் துவங்கலாம், அதில் தங்கிவிடக்கூடாது. அது நம்மைப் பாதிக்கும்வரை கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும்! நம்மைப் பாதிக்காத எதுவும் பாராட்டுக்குரியதல்ல (2 சாமு 24:24).

தியாகமாய்க் கொடுத்தலைப் புதிய ஏற்பாடு மும்முரமாய்ப் போதிக்கிறது. இயேசுமீது நளத தைலம் ஊற்றப்பட்ட சம்பவம் நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம் பெற்றுள்ளது (மத் 26:7; மாற் 14:3; லூக் 7:37,38; யோ 11:2; 12:3). தனது உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவதாகச் சகேயு தன்னார்வ மாய்ச் சொன்னபோது, ''இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது'' என்றார் இயேசு (லூக் 19:8,9). தியாகமான தானதர்மச் செயல்கள் ஆத்தும இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாது; ஆனால் அவை சரியான இரட்சிப்பின் அனுபவத்திற்கு நிச்சயமான நிரூபணங்கள். பழைய



ஏற்பாட்டுக் கற்பனைகளையெல்லாம் கடைப்பிடித்து வருவதாகக் கூறிய வாலிபனிடம் இயேசு, ''நீ பூரண சற்குணனாய் இருக்க விரும் பினால் உனக்கு உள்ளதை விற்றுத் தரித்திரருக்குக் கொடு; அப் பொழுது உனக்குப் பரலோகில் செல்வம் பெருத்திருக்கும். பின்பு வந்து என்னைப் பின்பற்றி வா'' என்றார் (மத் 19:21; லூக் 18:22). இந்த அறிவுரை அந்த வாலிபனுக்கு மட்டுமே உரியது என்று வாதா டாதீர்கள். பெருங்கூட்டமொன்றிற்கும் இவ்வார்த்தைகளை இயேசு கூறினார்: லூக் 12:1,33, ''உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்!'' இக்கூற்று நமக்குப் பொருந்தாதென்றால், ''தேவ இராஜ்யத்தையே தேடுங்கள்; அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' என்ற 31ஆம் வசனம் யாருக்கு?

தியாகமாய்க் கொடுப்பதற்கு மக்கெதோனியா விசுவாசிகள் சிறந்த முன்மாதிரிகள். அவர்களை அப்போஸ்தலன் பவுல் வெகுவாய் மெச்சினார். அவர் எழுதியது: ''அவர்கள் தங்கள் திறனுக்கு ஏற்றபடி யும், தங்கள் திறனுக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர் களாயிருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்'' (2 கொரி 8:3). அவர்களது ''கொடிய தரித்திரத்திலும்'' இப்படிச் செய்தார்கள் (வச 2). இத்தகைய சாட்சியை இன்று எத்தனை சபைகள் பெற முடி யும்? உங்கள் சபை எப்படி? ஆழ்ந்த விசுவாசிகளாக உங்களில் சிலர் கூடிவந்து உங்கள் ஆயரிடமும் உடன் உறுப்பினர்களிடமும் இது குறித்துப் பேசி அவர்களை ஊக்குவித்தாலென்ன? ''அன்புக்கும் நற் செயல்களுக்கும் நாம் ஊக்குவிக்கப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கத்தானே'' சபை கூடிவருகிறது? (எபி 10:24,25). தியாக மாய்க் கொடுப்பது தொற்றுநோய் போன்றது (2 கொரி 9:2). தேவன் அருளிய ''சொல்லி முடியாத'' ஈவைக் குறித்து அடிக்கடி பேசுகிறோம் (2 கொரி 9:15). நமது ஈவு எப்படியிருக்கிறது? ''சொல்ல முடிகிற'' அளவாவது இருக்கிறதா?

எபிரெயர் நிருபத்தைப் பெற்றவர்களிடம் இன்னொரு சவாலான சாட்சியுண்டு. அவர்களைக் குறித்து இந்நிருப ஆக்கியோன் சொல் வதைக் கவனியுங்கள்: எபி 10:34, ''நான் கட்டப்பட்டிருக்கையில்

நீங்கள் என்னைக் குறித்துப் பரிதபித்ததும் அல்லாது, பரலோகில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டு என்று அறிந்து, உங்கள் உடைமைகளையும் மனமுவந்து கொள்ளையிடக் கொடுத்தீர்கள்.'' இவ்வசனத்தை நான் எளிய நடையில் சொல்லட்டும்: ''உங்கள் வீட்டின் முன் அறையில் எனக்குக் குளிர்பானம் வழங்கினீர்கள். மட்டுமல்ல, நீங்கள் பணமும் நகைகளும் வைத்திருக்கும் அலமாரிகளுள்ள உள்ளறைக்கும் என்னைக் கூட்டிச்சென்று அலமாரிச் சாவிகளையெல்லாம் என்னிடம் கொடுத்து, எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்றீர்கள்.'' பிரிய நண்பரே, எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தில் எத்தனையோ பிரசங்கங்கள் கேட்டிருப்பீர்கள்; ஆனால் யாராவது எபிரெயர் 10இலுள்ள இந்த வசனத்தின்மீது பிரசங்கித்திருக்கிறார்களா? அவனது பணப்பை குணப்படும்வரை எந்த மனிதனும் சரியாய்க் குணப்படவில்லை! திருமுழுக்குத் தொட்டிக்குள் இறங்கிய பின்னர், தனது பர்ஸை வெளியே வைத்துவிட்டு வருகிறேன் என்று பாஸ்டரிடம் சொன்ன வாலிபனுக்கு அவர் கொடுத்த பதில்: ''தம்பி, உனது பர்ஸுக்கும் திருமுழுக்கு தேவை!''

நம்மையும் நமதையும் தியாகம்பண்ணுவதைக் குறித்து ஏன் இவ்வளவு வலியுறுத்துகிறோம்? ஏனெனில் இவையிரண்டும்தான் கொடிய காலங்களின் முதலிரண்டு அடையாளங்களாய் அப்போஸ்தலன் பவுலினால் முன்னறிவிக்கப்பட்டுள்ளன: 2 தீமோ 3:1,2, ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிந்துகொள். எப்படியெனில், மனிதர் தற்பிரியராயும், பணப்பிரியராயும் ... இருப்பார்கள்.'' எனவே, ''தியாகம்'' குறித்துப் பேசும்போது **பொருளாசையைக்** குறித்துப் பேசியே தீரவேண்டும்.

பணத்தின்மீதும் பொருளின்மீதும் இறைமக்களுக்கு இருக்கும் பிடிப்பைத் தளர்த்துவதே இந்த யுகத்தில் பரிசுத்த ஆவியானவரின் முதற்பணி. பெந்தெகொஸ்தே நாளன்று ஆவியின் நிறைவைப் பெற்ற விசுவாசிகள் இதைத்தான் செய்தனர்: அப் 2:44, ''விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.'' நாம் அப்போஸ்தலர் 2:4இலேயே நின்றுவிடு



கிறோம்; 2:44க்குக் கடந்துசெல்வதில்லை. 2:4 கூறுவது நவநாவுகளில் பேசுவதாம். இது ஆவியின் நிறைவின் ''அடையாளங்களில்'' ஒன்று மட்டுமே. ஆனால் 2:44இல் கூறியுள்ளதுதான் ஆவியின் அபிஷேகத்தின் பிரதானமான ''நிரூபணம்'' ஆகும். விண்ணுலக மகிமையை (heavenly glory) ஆவியானவர் நமக்குக் காட்டும்போது, மண்ணுலகத் தங்கத்தின்மீது (earthly gold) நமது பிடிப்பு தளர்கிறது. ஆதிச் சீடரது ''மிகுந்த'' வல்லமையின் இரகசியமே இங்குதானிருந்தது (4:33-37). ஒரு லேவியனும் தனது நிலத்தை விற்றுப் பணத்தை அப்போஸ்தலரது பாதத்தில் வைத்தான்! பரிசுத்த ஆவியானவரின் அக்கினிதான் பொருளாசை எனும் பதரை எரித்துவிட முடியும். அக்கினி முகாம்கள், அக்கினி கருத்தரங்குகள் என்றெல்லாம் நடத்துகிறார்களே, அவற்றில் இந்த உபதேசம் தரப்படுகிறதா? இவ்வுபதேசம் இல்லையேல் அது ''அந்நிய அக்கினிதான்!''

பொருளாசை குறித்த இயேசுவின் நேரடிப் போதனைகள் சிலவற்றைக் கவனிப்போம். மலைப் பிரசங்கத்தில் தொடங்குவோம். மத்தேயு 6:22,23இல் நமது கண்ணைக் குறித்து அவர் பேசுகிறார்: ''கண்ணானது உடலின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால் உன் உடல் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் உடல் முழுவதும் இருளாயிருக்கும்.'' நாம் பொதுவாக இவ்வசனத்தை இச்சையான விபசாரப் பார்வையைக் கண்டிக்கவே மேற்கோள் காட்டுவோம். ஆனால் இவ்வார்த்தைகள் சொல்லப்பட்ட சூழமைவு அதுவல்ல. பொருளாசைக்கு எதிராகவே இயேசு இங்கு பேசுகிறார். இவ்வசனத்திற்கு முந்திய மூன்று வசனங்களையும் (வச 19-21), அதற்கு அடுத்த வசனத்தையும் (வச 24) கவனியுங்கள். அவை அனைத்தும் பொருளாசைக்கு எதிரானவையே. இந்த 6ஆம் அத்தியாம் முடியும்வரை இயேசு நமது உடலுக்கடுத்த தேவைகளைப் பற்றியும் அவை பிரதானமானவை அல்ல என்றும் போதிக்கிறார். நமது பிரதான நோக்கு இறையரசாகவே இருக்கவேண்டும் (வச 33). இவ்வுபதேசம் அக்காலத்து மக்களுக்கு, அதிலும் குறிப்பாக மார்க்கத் தலைவர்களுக்கு, அவ்வளவு பிடிக்கவில்லை (லூக் 16:13,14). இன்றும் இது பிரபலமற்ற உபதேசமே!

முட்டாள் யார்? (லூக் 12:20). தனது சேமிப்புகளினால் பெரு மிதம் கொண்டிருந்த செல்வந்தனிடம் கடவுள் பேசினதைக் குறிப் பிட்ட இயேசு தொடர்ந்து கூறியது: ''தேவனிடம் செல்வந்தனாயிரா மல், தனக்காகவே சொத்துக்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்'' (வச 21). தேவனிடம் செல்வந்தனாயிருப்பது எங் ஙனம்?

(அ) உடலுக்கடுத்த தேவைகள் குறித்த கவலையை அகற்றுங்கள் (வச 22,29,30)

(ஆ) இறையரசிற்கு முதலிடம் கொடுங்கள் (வச 31,32)

(இ) எளியவர்க்கு வாரி வழங்குங்கள் (வச 33,34).

அழிக்க முடியாத, திருடப்பட முடியாத, பணப்பை இதுவே.

இதைத்தான் தீமோத்தேயுவுக்குப் பவுல் அப்போஸ்தலன் எழுதினார்: 1 தீமோ 6:6-8, ''போதும் எனும் மனதுடனுள்ள தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திற்குள் நாம் ஒன்றும் கொண்டுவந்ததும் இல்லை, இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதும் இல்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு இருந்தால் அது போதும் என்றிருப்போம்.''

கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாய், எலியாவின் ஆவியும் பலமும் உடையவராய், யோவான் வந்தார். பரிசுத்த ஆவி யானவரின் வல்லமை உடையதாய்த் திருச்சபை கிறிஸ்துவின் இரண் டாம் வருகைக்கு முன்னோடியாய்ச் செயல்படுகிறது. யோவானது செய்தி இன்றும் என்றும் பொருந்தும். மனந்திரும்புதலுக்கேற்ற கனி களைக் கொடுக்கும்படி அவர் மக்களுக்கு அழைப்பு விடுத்தபோது குறிப்பாக என்ன செய்யவேண்டுமென்று மக்கள் அவரிடம் வின வினர் (லூக் 3:10-14). அவ்விதம் வினவியவர்கள் மூன்று வகை யினர்: சாதா மக்கள், வரிக்காரர், படை வீரர். இந்த மூன்று வகையின ருக்கும் யோவான் கொடுத்த பதில் பணத்தை அடுத்ததே. திரு முழுக்கு கொடுக்குமுன் இவ்வித ஆலோசனைகள் கொடுக்கும் சுவிசேஷகர்கள், ஆயர்கள் உண்டோ? நாம் பினாமி ஞானஸ்நானம் கூட கொடுக்கிறோம் — அதாவது, ஒன்றுமறியா குழந்தைகளின் சார் பில் பெற்றோர் சத்தற்ற அறிக்கை செய்துவிடுகின்றனர்! ஐயகோ, எவ்வளவாய் நாம் பின்வாங்கிவிட்டோம்!



திருவசனங்களை அவற்றின் சூழமைவிலிருந்து வெளியே எடுத்து (Text out of context) வியாக்கியானிப்பதில் இத்தலைமுறைக் கிறிஸ்தவர்க்கு நிகர் எவருமில்லை. இதோ, சில எடுத்துக்காட்டு கள் —

□ மத் 19:26, ''மனிதரால் இது கூடாததுதான்; தேவனால் எல்லாம் கூடும்.'' இவ்வசனத்தின் கருத்துச் சூழமைவு என்னவெனில் இறையரசிற்குள் செல்வந்தர் நுழைவது எங்ஙனம் என்பதைப் பற் றியது (வச 23-25). இவ்வசனம் உபதேசிப்பது என்னவென்றால், தேவன் ஓர் அற்புதம் செய்தால்தான் செல்வந்தன் இறையரசிற்குள் நுழைய முடியும்.

□ பிலி 4:13. ''என்னை வலுப்படுத்தும் கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குத் திறன் உண்டு.'' நிறைவோ குறைவோ எப்படியிருந்தாலும் நான் சமாளித்துக்கொள்வேன் என் பதே இவ்வசனக் கருத்துச் சூழமைவு. திரட்சியோ வறட்சியோ எனக்குக் காரியமில்லை (வச 11,12).

□ எபி 13:5, ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.'' பொருளாசை இல்லாது போதும் எனும் மனதுடன் இருக்கவேண்டும் என்பதே இவ்வசனப் பகுதியின் போதனை.

பண ஆசையிலிருந்து விடுதலை பெறுவதை ''இரண்டாம் இரட்சிப்பு'' (Second Salvation) என்று அழைக்கத் துணிகிறேன்! ஜெபத்தின் மூலமாகவோ சிகிச்சையின் வாயிலாகவோ வியாதி களைக் குணமாக்கிவிடலாம். ஆனால் பொருளாசை எனும் புற்று நோயைத் தேவனது அற்புத வல்லமை மட்டுமே சுகமாக்க முடியும். பணத்தை இயேசு ''உலகப் பொருள்'' என்றழைத்தார். இதற்கு மூலப் பொருள் ''பணத் தேவதை'' (mammon) என்பதாகும் (மத் 6:24). இந்தப் பணப் பிசாசிடமிருந்து மக்களை விடுவிக்கச் சுவிசேஷகர்கள் கூட்டங்கள் நடத்தினால் நலமாயிருக்குமே என ஏங்குகிறேன்!

''தியாகம்'' எனும் உபதேசத்தைக் காலா காலமாய் நாம் போது மான அளவு வலியுறுத்தாததால், ''சுகபோகம்'' எனும் உபதேசமாகிய (Prosperity Doctrine) களையை எதிரி விதைத்துவிட்டான். திருச்சபை தூங்கும்போதுதான் களைகளை எதிரி விதைத்துச் செல்கிறான் (மத்

13:24.25). சுகபோக வாழ்வு உபதேசம் என்பது கதிர் போலவே தெரியும் பதர். இதுதான் ''வேறொரு சுவிசேஷம்'' என்பது. அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று சொல்லி ஒருபோதும் மக்களை இயேசு கவர்ந்திழுக்கவில்லை. எனவேதான் பின்னர் சீமோன் பேதுரு அவரிடம் கேட்ட கேள்வி: மத் 19:27, ''இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?'' ''நித்தியத்தில்'' அவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதையே அவர் உத்திரவாதமாகக் கூறினார் (வச 29). அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்வதைப்பற்றி இன்று நாம் பேசுகிறோம்; இயேசுவோ கிரயத்தைக் கணக்குப் பார்க்க வேண்டுமென்பதை வலியுறுத்தினார் (லூக் 14:27-33). (Confirming the call vs. Counting the cost). பூர்வ பாதைகளை நாம் மறந்துவிட்டதால் நமது கிறிஸ்தவம் இன்று எவ்வளவு திருக்கப்பட்டுவிட்டது!

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன்னர் ஒரு முக்கியமான கேள்விக்குப் பதில் தரவேண்டும்: பொருளாசை என்பது தியாகத்திற்கு எதிரானது என்றால், எந்தக் கிறிஸ்தவனும் செல்வந்தனாக முடியாதோ? அப்படியல்ல, நீங்கள் செல்வந்தராகலாம், ஆனால் —

□ ''செல்வம் பெருகினால் உன் மனதை (இருதயத்தை) அதின்மீது வைக்காதே'' (சங் 62:10).

□ பிறர்க்குப் பகிர்ந்தளிப்பதில் தயாளனாயிருங்கள். ''வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்'' (நீதி 11:24,25). ''சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் ... உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடம் தேவன் பிரியமாயிருக்கிறார் ... வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனது நீதி என்றென்றும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்'' (2 கொரி 9:6,7,9). சோதோமின் பாவத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (எசேக் 16:49)!



□ இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும், என்ற சோதனைக்கு இடங்கொடாதீர்கள். ''பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே'' (பிர 5:10). பணம் என்பது கடல் நீர் போன்றது; அதைக் குடிக்கக் குடிக்கத் தாகம் கூடத்தான் செய்யும்! ''செல்வராக வேண்டுமென்று பாடுபட்டு உருக்குலைந்து போகாதே; அதனால் உனது அறிவை இழந்துவிடாதே'' (நீதி 23:4).

## ஒரு விண்ணப்பம்

''இரண்டு மனுக்கள் உம்மிடம் கேட்கிறேன்; நான் இறக்கும்வரை அவற்றை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும் பொய்யையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையோ செல்வத்தையோ எனக்குக் கொடாதிரும். நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்காதபடிக்கும் எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும்'' (நீதி 30:7-9). அளவுக்கு மீறியும் வேண்டாம்; தேவைக்குக் குறைவாகவும் வேண்டாம்!

## ஒரு முழக்கம்

பிறர்க்காய்ச் செலவழிப்போம்; செலவழிவோம்!

"Spend and be spent for others!"

(2 கொரி 12:15)

# 7

# ஆத்துமாதாயம் எனும் பூர்வ பாதை

Old Path of Soulwinning





7

ஆத்துமாதாயம் எனும் பூர்வ பாதை

Old Path of Soulwinning

**ஒவ்வொருவரும்** ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்பதே ஆதி முதல் தேவனது சித்தம். இவ்வுண்மையைத் தெளிவாய்க் குறிப்பிடும் கீழ்க்கண்ட திருமறைப் பகுதிகளைக் கவனியுங்கள்: ஆபிரகாமைத் தேவன் அழைத்தபோது அவரிடம் வாக்குப்பண்ணியது: ''பூவுலகிலுள்ள மக்களினங்கள் **எல்லாம்** உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' (ஆதி 12:3). தீர்க்கன் ஏசாயா மூலம் வந்த இறையழைப்பு: ''ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் **எல்லாரும்** தண்ணீர்களருகே வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்'' (ஏசா 55:1). போலி மேய்ப்பர்களிடமிருந்து தமது ஆடுகளைக் காக்கவேண்டுமென்ற தேவனது ஆர்வத்தில், அவர் தீர்க்கன் எசேக்கியேல் மூலம் பேசியது: ''நான் எனது ஆடுகளையும் என் மேட்டின் (எல்லாச்) சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்குவேன்'' (எசேக் 34:26).

இயேசுவின் பிறப்பு தேவதூதர்களால் வயல் வெளிகளிலிருந்த ஆட்டிடையர்களுக்கு இவ்விதம் அறிவிக்கப்பட்டது: லூக் 2:10, ''பயப்படாதிருங்கள்; இதோ, **எல்லா** மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.'' இரவு வேளை ஒன்றில் நிக்கொதேமுவுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது அவரிடம் இயேசு சொன்னது: ''தேவன் தமது ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் **எவனோ** அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்'' (யோ 3:16). எல்லா மக்களுக்காகவும்

இறைவேண்டல் செய்யவேண்டுமென்று நமக்கு அழைப்பு விடுத்த போது, அப்போஸ்தலன் பவுல் பரிபூரண இறைச்சித்தத்தை இவ் விதம் வெளிப்படுத்தினார்: ''**எல்லா மனிதரும்** இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியும் அறிவை அடையவும், சித்தமுள்ளவராயிருக் கும் நமது இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது'' (1 தீமோ 2:3,4).

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக மட்டுமே உலகை தேவன் ஆசீர்வதிக்க முடியும். ரோம் நகரில் சுவிசேஷத்தைப் பிரங் கிக்கத் தனக்கிருக்கும் துடிப்பைப் பவுல் அறிவித்தபோது, அதற்கான காரணத்தை இவ்விதம் விளக்குகிறார்: ரோ 1:15,16, ''முன்பு யூத ரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் **எவனோ** அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்குக் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவ பலமா யிருக்கிறது.'' சுவிசேஷமானது 2000 ஆண்டுகளுக்கு மேல் பழை மையானதெனினும், இந்தியாவில் மட்டுமல்ல, அகிலவுலகிலும் இதை 50 சதவீதத்தினருக்குமேல் கேள்விப்படவில்லை. ஏன்? தேவன் காட்டியுள்ள பூர்வ பாதைகளைத் திருச்சபையானது தவற விட்டதே அதற்குக் காரணம். அனைத்துலகும் நமது தலைமுறை யில் சுவிசேஷத்தைக் கேட்டுவிட நாம் பூர்வ பாதைகளுக்குத் திரும்புவதற்கான அழைப்பை இவ்வத்தியாயத்தில் விளக்கமாய்ப் பார்ப்போம்.

## ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஈடுபாடு கொள்ளவேண்டும்.

நாம் நெருக்கடியானதொரு காலத்தில் இருக்கிறோம். நமது வாழ்வுக்கடுத்தவற்றையும் நமது நிறுவனக் கட்டமைப்புகளையும் சத்துரு சின்னாபின்னமாக்கிக்கொண்டிருக்கிறான். எருசலேமின் மதில்களும் ஆலயமும் தகர்ந்துகிடந்தது போன்றதே இன்றைய நிலை. நாம் ஏனோதானோ என்றிருக்கக் கூடாது. சோம்பேறித்தன மாயிருக்க இது காலமல்ல. நாம் ஒவ்வொருவரும் கலப்பையைப் பிடிக்கவேண்டும். எவரும் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. எஸ்றா மற்றும் நெகேமியாவின் தலைமையில் மதில்களும் ஆல



யமும் திரும்பக் கட்டப்பட்டபோது நாம் காண்பது இதுவே. யாரெல்லாம் கட்டிட வேலையில் நேரடியாய் ஈடுபட்டனர் என்று பார்ப்போம் —

நெகே 3:1, ''பிரதான *ஆச்சாரியனும்* அவனது சகோதரராகிய ஆச்சாரியர்களும் எழுந்து ஆட்டு வாசலைக் கட்டினார்கள்.'' வண்ண மிகு தொங்கு வஸ்திரங்களையே பிரதான ஆச்சாரியன் உடுத்தியிருப் பான். இப்பொழுதோ அவன் அவற்றையெல்லாம் கழற்றிவைத்து விட்டுக் கட்டிட வேலைக்காய்ச் சாந்துக் கரண்டியைக் கையிலெ டுத்தான். 3:8,31, *''தட்டாரில்* ஒருவனாகிய ஊசியேல் என்பவன் பழுதுபார்த்துக் கட்டினான் ... தட்டானின் குமாரன் மல்கியா பழுது பார்த்துக் கட்டினான்.'' தங்கம் வெள்ளியில் மாணிக்கக் கற்களைப் பதிக்கும் நுண்ணிய வேலைக்காரர் இங்கு கனமான கற்களை எடுத்துக் கட்டிட வேலை செய்தனர். 3:8, *''தைலக்காரரில்* ஒருவனது குமாரனாகிய அனனியா பழுதுபார்த்துக் கட்டினான்.'' விலையுயர்ந்த தைலங்கள் தயாரித்துக் கவர்ச்சிமிகு பாட்டில்களில் அடைக்கும் தைலக்காரர் இங்கு என்ன வேலை செய்கிறார்கள் பாருங்கள்! இப்பொழுது அவர்கள் வாளி நிறையத் தண்ணீரும், சட்டி நிறையச் சாந்தும் சுமந்து பழுதுபார்க்கின்றனர். 3:9,17, ''எருசலேம் நகரின் பாதிக்குப் *பிரபுவாகிய* ஊரின் குமாரன் ரெப்பாயா பழுதுபார்த்துக் கட்டினான் ... பிரபுவாகிய அசபியாவும் பழுதுபார்த்துக் கட்டினான்.'' இப்பிரபுக்களை நமது மாவட்ட ஆட்சியர்களுக்கு ஒப்பிடலாம். இவர் கள் பெரும்பாலும் அலுவலகங்களில் உட்கார்ந்து நிர்வாகப் பணி களைக் கவனிப்பார்கள். இங்கேயோ அவர்கள் திறந்த வானத்தின் கீழ் சாதாரண வேலைகள் எனப்படுபவற்றைச் செய்கின்றனர். 3:32, *''மளிகைக்காரரும்* பழுதுபார்த்துக் கட்டினார்கள்.'' வணிகத் துறையை விட்டுக் கட்டிடத் தொழிலில் இறங்கினர். இதில் இன்னும் சுவாரஸ்யமான காரியம் என்னவெனில், எல்லாருக்கும் தலைவனா யிருந்த நெகேமியாவும் வேலையில் இறங்கினார். அவரது சாட் சியைக் கேளுங்கள்: 4:23, ''நானோ, என் சகோதரரோ, என் வேலை யாட்களோ, என்னைப் பின்பற்றிக் காவல் காக்கும் சேவகரோ எங்

கள் ஆடைகளைத் துவைப்பதற்கேயன்றி கழற்றாதிருந்தோம்.'' பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தோரைப் பற்றிய சுருக்கமான கூற்று: 4:6, ''*மக்கள்* வேலை செய்ய ஆவலாயிருந்தார்கள்.''

இதுவே ஆதிச்சபையின் செயல்பாட்டு முறையாகவும் இருந்தது. திருச்சபைக்கு எதிராகக் கொடூரமான உபத்திரவத்தைத் தேவன் அனுமதித்தார். இதை அப்போஸ்தலர் 8இல் லூக்கா எழுதிவைத்துள்ளார்: வச 1,4, ''எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா நாடுகளில் சிதறப்பட்டுப்போனார்கள் ... சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.'' சபையார் ''அனைவரும்'' நேரடிச் சுவிசேஷப் பணியில் இறங்கவேண்டியதொரு சூழலை ஆண்டவர் ஏற்படுத்தினார். இல்லையேல், அப்போஸ்தலர் மட்டுமே நற்செய்தியறிவித்துக்கொண்டிருந்திருப்பர். இன்றைய நற்செய்திப்பணி பெரும்பாலும் ஆயர்கள், மற்றும் முழு நேரப் பணியாளர்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது கவலைக்குரியது. ''ஒவ்வொருவரும் இன்னொருவருக்கு நற்செய்தி அறிவிப்போம்'' (Each one, reach one!) எனும் முழக்கத்தை மறந்துவிட்டோம். இது எப்படி நடந்தது?

கி.பி. 476இல் திருச்சபையானது தனது இருண்ட காலத்திற்குள் (Dark Ages) நுழைந்தது. சபையையும் நாட்டையும் மன்னன் கான்ஸ்டன்டைன் ஒன்றிணைத்தபோது 4 சதவீதத்தினராக மட்டுமே இருந்த கிறிஸ்தவர் 80 சதவீதத்தினராயினர். சபையினர் கூடிவரப் பெரிய கட்டிடங்களும், அவர்கள் பரிபாலிக்கப்படக் குருக்களும், பிஷப்களும் தேவைப்பட்டனர். ஆனால் ஏறத்தாழ 1000 ஆண்டுகள் கழித்து மார்ட்டின் லூத்தர், ஜான் கால்வின் இன்னும் சிலரது தலைமையில் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் (Protestant Reformation) துவங்கியது. ''ஒரே நாளில் ரோம் நகர் கட்டப்படவில்லை'' என்ற கூற்றைப் போல, ஒரே நாளில் அதைத் தகர்க்கவும் முடியவில்லை. 18ஆம் நூற்றாண்டில் ஜான் வெஸ்லி, சார்ல்ஸ் பின்னி போன்ற எழுப்புதல் வீரர் எழும்பினர். 1901 முதல் பெந்தெகொஸ்தே இயக்கம் உருவெடுத்



தது. இழந்த பல காரியங்களைத் திருச்சபை திரும்பப் பெற்றது; ஆனாலும் புத்துயிர் பெறாத அதிமுக்கிய உபதேசம் ''அனைத்து விசுவாசிகளின் ஆச்சாரியத்துவம்'' (Priesthood of all believers) என்பதாகும்.

கிறிஸ்துவின் மூலம் நமக்குத் தேவனோடுள்ள உறவைப் புரிந்துகொள்வதற்கு ''அனைத்து விசுவாசிகளின் ஆச்சாரியத்துவம்'' எனும் உபதேசம் அதிமுக்கியமானது. தனது முதலாம் நிருபத்தில் அப்போஸ்தலன் பேதுரு இதைத் தெளிவாக்கியுள்ளார். ஏசாயா 28:16இன் அடிப்படையில் அவர் கிறிஸ்துவை ''ஜீவனுள்ள கல்'' (Living Stone) என அழைக்கிறார் (1 பேது 2:4). அங்கு நிறுத்தாமல், நாமும் ''ஜீவனுள்ள கற்களாய்'' (living stones) மாற்றப்பட்டுள்ளோம் என்று தொடர்ந்து எழுதுகிறார் (வச 5). ஒரே வித்தியாசம் என்னவெனில், கிறிஸ்து ''மூலைக்குத் தலைக்கல்'' (Cornerstone) ஆனவர்; அப்போஸ்தலும் தீர்க்கரும் ''அடித்தளக் கற்கள்'' (foundation stones) ஆனவர்கள் (எபே 2:20; வெளி 21:14); நாமோ மேற்கட்டிடத்திற்குக் கற்கள் ஆகிறோம். ''பரிசுத்த ஆச்சாரியக் கூட்டமாக'' நாம் ஆவிக்குரிய மாளிகையாகக் கட்டப்படுவதற்கான ஒழுங்கு இது. விசுவாசிகளைப் பேதுரு முதலாவது ''பரிசுத்த'' ஆச்சாரியக் கூட்டம் என்றும், அடுத்து ''ராஜரீக'' ஆச்சாரியக் கூட்டம் என்றும் அழைக்கிறார் (1 பேது 2:5,9). பரிசுத்த ஆச்சாரியக் கூட்டமாய் நாம் அவரைத் ''துதிக்க'' வேண்டும்; ராஜரீக ஆச்சாரியக் கூட்டமாய் நாம் அவரது ''தூதறிவிக்க'' வேண்டும். இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடம் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரின் மகிமையான சிலாக்கியம் இது (வச 9). இது ''தேவ மக்கள்'' அனைவரின் பிறப்புரிமை (வச 10). இறைவார்த்தையைத் தியானிப்பதின் அவசியத்தை வலியுறுத்தும் போதெல்லாம் 1 பேதுரு 2:1-3ஐ மேற்கோள் காட்டுகிறோம். ஆனாலும், இறைமக்களைப் பரிசுத்த ஆச்சாரியர்கள் என்றும், ராஜரீக ஆச்சாரியர்கள் என்றும் வர்ணிக்கும் 5ஆம் மற்றும் 9ஆம் வசனங்களை விளக்காதது ஏனோ? யாருக்குப் பயப்படுகிறோம்? பரிசுத்த ஆச்சாரியராக நாம் தேவனை ''ஆராதிக்கவும்,'' ராஜரீக ஆச்சாரியராக அவரை ''அறிவிக்கவும்'' நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (வச 5,9).

ஆராதனை என்பது ஓரளவுக்குப் புத்துயிர் பெற்றுள்ளது; அந்த அளவுக்குச் சாட்சிபகர்தலில் புத்தார்வம் ஏற்படவில்லை. மேலே குறிப்பிட்டுள்ள இச்சத்தியம் முழுமையாக அமுலுக்கு வரும்வரை, தேவன் நமக்கு இன்னொரு 2000 ஆண்டுகள் தந்தாலும், உலகை நாம் நற்செய்திமயமாக்கிட முடியாது!

திருச்சபையானது கிறிஸ்துவைப் ''பிரதான ஆச்சாரியர்'' எனப் போற்றுகிறது. அவர் ''பிரதான ஆச்சாரியர்'' என்று நமக்கு எப்படித் தெரியும்? திருமறை அப்படிச் சொல்லுகிறது என்பதால்தானே? (எபி 3:1; 4:14). அதே வேளையில், கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் ''ஆச்சாரியர்கள்'' என்பதை ஏற்றுக்கொள்ளத் திருச்சபை தயங்குவதேன்? அதே திருமறைதானே கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவரையும் ''ஆச்சாரியர்கள்'' என்றழைக்கிறது? (1 பேது 2:5,9). ஆசீர்வாதமான இந்த நிலை பரலோக அரசாட்சியின்போது மட்டுமல்ல (வெளி 1:6), பூலோக வாழ்வின்போதும் நமக்குரியது (1 பேது 2:9,11). ஆச்சாரியர் மற்றும் ஆச்சாரியரல்லாதோர் (clergy & laity) என்று இறைமக்களைத் திருமறை எங்கு பிரிக்கிறது? புதிய ஏற்பாட்டுச் சபையில் ஆச்சாரியல்லாதோர் கிடையவே கிடையாது. இவ்விதம் வேதத்திற்கு முரண்பட்டு நாம் தேவ மக்களை இரு வகுப்பினராய்ப் பிரிப்பதால்தான், அவர்கள் ஒரு சேனையாய் (army) இருப்பதற்குப் பதிலாக வெறும் நேயர்களாய் (audience) இருக்கின்றனர். ஆச்சாரியல்லாதோர் எனப் பெருங்கூட்டத்தினர் பிரிக்கப்பட்டுவிட்டதால், அவர்கள் நற்செய்திப்பணியில் நேரடியாய் ஈடுபடாமல், சாகாவிடினும் முடமாகி, ''அலங்கார வாசலில்'' படுத்துக் கிடக்கிறார்கள்! ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிலுவை வீரனாகச் சுவிசேஷக் கொடியேந்தவேண்டும். பழங்காலத்து இஸ்ரவேலரின் பழக்கம் இதுவே (எண் 1:2,3). ஒவ்வொரு வாலிபனும் இராணுவத்தில் குறுகிய காலப் பயிற்சி எடுக்கவேண்டுமென்பது சிங்கப்பூரில் சட்டம். திருச்சபை எப்பொழுது தூக்கத்திலிருந்து எழுந்திருக்குமோ?

திருச்சபையைப் பாதித்துள்ள இன்னொரு சோக நிலையுண்டு. தங்களையும் தங்கள் திட்டங்களையும் தாங்கும்படித்தான் பெரும்



பாலான சுவிசேஷகர் அழைப்பு விடுக்கின்றனர். அதாவது, மக்களிடமிருந்து பணம் பிடுங்கப்படுகிறது. ஆனால் வேதம் போதிப்பதின்படி இதுவல்ல சுவிசேஷகனின் பணி. எபேசியர் நிருபத்திலுள்ள தெளிவான போதனையைக் கவனியுங்கள்: 4:12,13, ''**சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகக்** கிறிஸ்துவின் உடலாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக, அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் **சுவிசேஷகராகவும்**, சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.'' அனைத்துலகத் திருச்சபைக்கான பொதுவான நிருபம் இது. சுவிசேஷகராய் அழைக்கப்பட்டவர்கள் நேரடியாய்ச் சுவிசேஷம் அறிவித்து, அத்துடன் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஆத்துமாதாயகனாக்கி நற்செய்திப்பணியில் நேரடியாய் ஈடுபடப் பழக்குவிக்கவேண்டும். இந்தப் பொறுப்பு கவனியாது விடப்பட்டுள்ளது. எந்தவொரு சுவிசேஷகனும் ஒரு சபைக்குப் பிரசங்கிக்க வரும்போது, ஒரு நபரைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவது எப்படி என்று சபையினருக்குப் போதிக்கவேண்டும். ஆனால் இன்று நடப்பதென்ன? வந்துபோகும் சுவிசேஷகர்கள் சுவிசேஷத்தைக் கேட்டவர்களுக்கே சுவிசேஷத்தைத் திரும்பத் திரும்ப அறிவித்து அவர்களை இருக்கைகளிலேயே இருந்துவிடச் செய்கின்றனர். மிஷனரி நிறுவனங்களும் இதே தவற்றைச் செய்கின்றனர். ஆத்துமாதாயகர்களை எழுப்புவதைவிட ஆதரவாளர்களைத் திரட்டுவதிலேயே அவர்களுக்கு ஆர்வம். தனியாள் ஆத்துமாதாயப் பணியிலும், நற்செய்தியறிவிப்புப் படை முயற்சிகளிலும் மிஷனரி நிறுவனங்களும் நற்செய்திச் சங்கங்களும் பழக்கப்பட்டவர்கள். இவர்கள் ஏன் திருச்சபையாரை நற்செய்திப்பணிக்குப் பழக்குவிக்கக்கூடாது? இப்படிச் செய்தால் மட்டுமே, முழுச் சபையும் முழுச் சுவிசேஷத்தை முழு உலகிற்கும் எடுத்துச் செல்ல முடியும்! ஒவ்வொரு விசுவாசியையும் ஓர் ஊழியனாக்குவதே ஒவ்வொரு ஊழியனின் ஊழியமாயிருக்க வேண்டும் (எபே 4:12.13).

பிரிய கிறிஸ்தவ நண்பரே, பிறரை இரட்சிக்கவே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள். பிறரை இரட்சிக்கவே நீங்கள் பரிசுத்தமாக்கப்

பட்டீர்கள். பிறரைக் கிறிஸ்தவராக்கவே நீங்கள் கிறிஸ்தவராயி ருக்கிறீர்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவதின் ''பிரதான'' நோக்கம் இதுவே (மத் 4:19). மற்றவையெல்லாம் இரண்டாம் தரமானவையே. 1970 முதல் பிரசங்கபீடங்களிலிருந்து நான் இச்சத்தியத்தை முழங்கிக்கொண்டிருக்கிறேன். திருச்சபை ஆயர்களில் ஒரு சிலரே இதனைப் புரிந்துகொண்டு, ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணப் பாவிகள் இருக்குமிடத்திற்கே தங்கள் சபை உறுப்பினர்களை உந்தித் தள்ளி வருகின்றனர். குட்டி போடவேண்டியது ஆடுதானேயன்றி, ஆயரல்ல என்பதைப் பலர் மறந்துவிட்டனர்! தெசலோனிக்கேயா சபையைப் பாருங்கள். திருவசனம் அவர்களிடமிருந்து பரம்பி ''எங் கும்'' ஒலித்தது. அப்போஸ்தலர் ஒன்றும் சொல்லத் தேவையில்லாத அளவு அச்சபையினரின் நற்செய்திப்பணி தீவிரமாயிருந்தது எனச் சாட்சி பெற்றனர் (1 தெச 1:8). 1970களின் துவக்க ஆண்டுகளில் வாலிபரில் பலர் இத்தரிசனத்தைப் பெற்றுக்கொண்டு தீவிரமாய்ச் செயல்படத் தொடங்கினர். ஆனால் நாளாவட்டத்தில் அவர்கள் குளிர்ந்துபோய்விட்டனர். அதற்கு இதோ சில காரணங்கள் —

## 1. நற்செய்தியைக் குறித்த பரவசம் இழப்பு

நற்செய்தியைக் குறித்த பரவசத்தை அப்போஸ்தலன் பவுல் எப்பொழுதும் இழக்காதிருந்ததே நற்செய்திப்பணியில் அவரது அமோக வெற்றிக்கு அடிப்படைக் காரணம். அவரது எழுத்துக்களில் நாம் இதைக் காணலாம். இதற்கு 1 தீமோத்தேயு 1:11-18 சிறந்ததோர் எடுத்துக்காட்டு. தனது செய்தியை அவர் ''மகிமையான'' சுவிசேஷம் என்கிறார் (வச 11); மட்டுமல்ல, அது ''நித்தியானந்த'' தேவனுடைய சுவிசேஷம் என்று பெருமிதம் கொள்கிறார் (வச 11); ''பரிபூரண மாய்ப்'' பெருகிய தேவனது கிருபையைக் கொண்டாடுகிறார் (வச 14); இக்கிருபை ''விசுவாசத்தோடும் அன்போடும்'' அவரிடம் பெருகிற்றாம் (வச 14); பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் எனும் கூற்று ''உண்மையானது,'' எல்லா ஒப்பு தலுக்கும் ''ஏற்றது'' என அடித்துக் கூறுகிறார் (வச 15); தன்னை அவர் பாவிகளில் ''பிரதான'' பாவி என்றழைக்கிறார் (வச 15). சுவி



சேஷத்தின் ஈர்ப்புக்குள் அவர் வருமுன் அவர் எப்படியிருந்தார் என்பதை நினைவுபடுத்துகிறார்: ''தூஷிப்பவன், துன்புறுத்துகிறவன், கொடுமை செய்பவன்'' (வச 13). நமது உருக்குலைவை உணரும் அளவிற்குத்தான் சுவிசேஷத்தின் உன்னதத்தைப் பாராட்ட முடியும்! ''என்னைப் போன்ற ஒருவன் இரட்சிக்கப்பட முடியுமானால், உலகில் எவரும் இரட்சிக்கப்பட்டுவிடலாம்'' என்கிறார் பவுல். இனி விசு வாசிக்கப்போகிறவர்களுக்கு அவர் தன்னை ஓர் ''எடுத்துக்காட்டு'' (திருஷ்டாந்தம்) என்கிறார் (வச 16). உண்மையைச் சொன்னால், இதுவே எனது அறிக்கை! ''ஸ்டான்லி இரட்சிக்கப்படக்கூடுமானால் உலகில் எவரும் இரட்சிக்கப்பட முடியும்!'' 1 தீமோ 1:11-17இலுள்ள வசனப்பகுதியில் நாம் காணும் பவுலின் பரவசமானது 17ஆம் வசனத்தில் ஓர் ஆராதனையில் உச்சம் எட்டுகிறது: ''நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமும் உள்ள இராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்குக் கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்!'' ஒரு கடிதத்தை முடிக்கும்போதுதான் ஓர் ஆராதனைக் கூற்றை எழுதுவது வழக்கம்; இங்கேயோ துவக்க அத்தியாயத்திலேயே தொழுகைக்குள் அப் போஸ்தலன் பறந்து செல்கிறார்!

தேவனது கிருபையின் சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்படுமுன் நாம் எப்படியிருந்தோம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. முழு பைபிளையும் நான் நேசிக்கிறேன்; ஆனாலும் எனக்கு அலா திப் பிரியமான சில வசனங்கள் உண்டு. அவற்றில் ஒன்று சங்கீதம் 136:23, ''நமது தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.'' ஒவ்வொரு முறை இந்த வசனத்தைப் பார்க் கும்போதும் என் கண்கள் குளமாகின்றன. என்னைவிட நல்லவர்கள், புனிதர்கள், மேம்பட்டவர்களில் பலர் இன்னும் இரட்சிக்கப்பட வில்லை. என்னை ஏன் தேவன் இரட்சித்து அவர் பிள்ளையாக்கினார் என்று எனக்குப் புரியவில்லை. மன்னன் எசேக்கியாவிற்கு இவ்வித அனுபவம் இருந்தது. அவர் சீக்கிரம் இறந்துபோவார் என்று தீர்க்கன் ஏசாயா அவருக்கு அறிவித்தபோது, தேவனுக்குமுன் எசேக்கியா

மனங்கசந்து அழுதார். தேவ கிருபை அவருக்கு இன்னும் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக்கொடுத்தது. அவர் தனது ஆத்துமாவின் கசப்பை எப்பொழுதும் நினைவிலிருத்தி மேட்டிமையின்றி, மென்மையாய்த், தேவனுக்குமுன் நடந்துகொள்வதாக வாக்களித்தார் (ஏசா 38:15-17). விலையுயர்ந்த வாசனைத் திரவியத்தை இயேசுவின் பாதங்களில் மரியாள் ஊற்றியபோது, அவளது தியாகச் செயலை விளங்கிக்கொள்ள முடியாத சீமோனிடம் ஆண்டவர் சொன்னது: ‘‘இவள் செய்த அநேகப் பாவங்கள் மன்னிக்கப்பட்டன; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்’’ (லூக் 7:47). மற்றவர்களைவிட அவள் பெரிய பாவி என்பதல்ல, மற்றவர்களைவிடத் தனது பாவ நிலையை அவள் அதிகம் உணர்ந்தாள் என்பதே இதன் பொருள்!

அப்போஸ்தலன் பவுல் தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில்தான் தீமோத்தேயுவுக்கு நிருபங்கள் எழுதினார். ஆனாலும் அவர் தனது கடந்த காலத்தின் தாழ்வான நிலையை மறக்கவேயில்லை (1 தீமோ 1:13,15). சுவிசேஷத்தின் மையத்துவத்தையும் (centrality) நிச்சயத்தையும் (certainty) அவர் எப்பொழுதும் தமது கண் முன் நிறுத்தியிருந்தார். சுவிசேஷம் ‘‘உண்மையுள்ளது,’’ அது ‘‘அங்கீகரிக்கப்பட்டது’’ என்கிறார் (வச 15). இந்த நிச்சயம் நம்மில் மங்குமானால் சுவிசேஷத்தின்மீதுள்ள நமது பரவசம் குறையும். நித்தியத்தைக் குறித்து வேத அடிப்படையிலான உங்கள் நிச்சயத்தை இன்றையச் சமூக நிகழ்வுகள் அசைத்துவிடாதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள். இந்த நித்திய ஜீவனை வாக்களித்துள்ளது யார்? ‘‘பொய்யுரையாத தேவன்’’ (தீத்து 1:3). அது வாக்களிக்கப்பட்டது எப்போது? ‘‘ஆதி காலம் முதல்!’’ இது நித்திய ஜீவனின் நிச்சயத்தைப் (certainty) பற்றியது. அதன் மையத்துவத்தைப் (centrality) பற்றி என்ன? ‘‘நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள இராஜனது’’ சரிதையே சுவிசேஷம் (1 தீமோ 1:11,17). எனவேதான் அது ‘‘இராஜ்யத்தின் சுவிசேஷம் என்றழைக்கப்படுகிறது. யோவானும் இயேசுவும் சுவிசேஷத்தை இராஜாவாகிய தேவனின் செய்தியாய் அறிவித்தனர்



(மத் 3:3; 4:23). நித்தியமான இராஜாவின் தூதுவனாயிருப்பதை விடப் பரவசமான பணி கிறிஸ்தவனுக்கு இருக்க முடியுமா?

இயேசுவின் உயிர்த்தெழுதலினாலேயே சுவிசேஷம் மேன்மையும் மகத்துவமும் நிறைந்ததாகிறது. ஆனால் நமது நற்செய்தியறிவிப்புகளில் இது இடம்பெறுவதில்லை. கிறிஸ்து உயிர்த்தார் என ஆதி அப்போஸ்தலர் ஒருபோதும் முழங்கத் தவறவில்லை. நடபடிகள் புத்தகத்திலிருந்து மாதிரிக்காய் சில வசனப்பகுதிகளைக் காண்போம். இயேசுவின் **‘‘உயிர்த்தெழுதலுக்குச்’’** சாட்சியாகவே யூதாசுக்குப் பதிலாக மத்தியா தெரிந்தெடுக்கப்பட்டான் (1:22). ‘‘இந்த இயேசுவைத் தேவன் **எழுப்பினார்**; அதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகள்’’ என்று பெந்தெகொஸ்தேயன்று பேதுரு அழுத்திக் கூறினார் (2:32). ‘‘கர்த்தராகிய இயேசுவின் **உயிர்த்தெழுதலைக்** குறித்து அப்போஸ்தலர் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்’’ என்று வாசிக்கிறோம் (4:33). ‘‘இயேசுவையும் **உயிர்த்தெழுதலையும்’’** குறித்து அத்தேனே நகரில் பவுல் பிரசங்கித்தார் (17:18). ‘‘மரித்தோரின் **உயிர்த்தெழுதல்’’** என்பதைக் கேட்டவுடன்தான் கேட்போரிடையே பிளவுண்டாயிற்று (17:32). ‘‘கிறிஸ்து **எழுந்திராவிட்டால்** எங்கள் பிரசங்கமும் வீண், உங்கள் விசுவாசமும் வீண்’’ என்று கொரிந்தியருக்குப் பவுல் திட்டவட்டமாய் எழுதினார் (1 கொரி 15:14,17). நாம் பிரசங்கிக்கும்போது உயிர்த்தெழுதலைக் குறிப்பிடாவிட்டால் அது பூஜ்ய சுவிசேஷம். ‘‘இயேசு நேசிக்கிறார்,’’ ‘‘இயேசு சுகமளிக்கிறார்’’ என்று மட்டும் நாம் ‘‘இன்ப இயேசுவை’’ அறிவித்துக் கொண்டிருந்தால் எதிர்ப்பே வராது! நமக்குப் பதிலாக அவர் சிலுவையில் அறையப்பட்டதையும், மகிமையாய் உயிர்த்தெழுந்ததையும் பறைசாற்றும்போதுதான் அதை ஏற்க மக்கள் சிரமப்படுகின்றனர். ஆனால் அதுதான் பழைய சுவிசேஷம் (1 கொரி 15:3,4).

சுவிசேஷத்தின் சாராம்சத்தின்மீது நமக்கிருக்கும் பரவசமே ஆத்துமாதாயத்தின் ‘‘மகிழ்ச்சியைத்’’ தக்கவைத்துக்கொள்ள நமக்குதவும். ஆத்துமாதாயத்தைப்போல் நமக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது கிறிஸ்தவ ஊழியச் செயல்பாடுகளில் எதுவுமில்லை. மக்களிடமிருந்து வரவேற்பு இருந்ததோ, இல்லையோ, சுவிசேஷத்தை ஆதிச் சீடர் சுமந்து

சென்றிடங்களிலெல்லாம் ஆரவாரமாயிருந்தனர். தடைச் சட்டத்தை மீறி அவர்கள் பிரசங்கித்ததால் உதைக்கப்பட்டபோது, ''கிறிஸ்துவின் பெயருக்காய்த் தாங்கள் அவமானமடைவதற்குத் தகுதியுள்ளவர் களாய்க் கருதப்பட்டபடியினால் **சந்தோஷமாய்** ஆலோசனைச் சங் கத்தை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள்'' (அப் 5:40,41). சமாரி யாவில் சுவிசேஷத்தைப் பிலிப்பு பிரசங்கித்தபோது, ''அந்நகரில் மிகுந்த **சந்தோஷம்** உண்டாயிற்று'' (8:8). அந்தியோகியாவிலுள்ள திரளானோர் மீது தேவ கிருபை அருளப்பட்டதைக் கண்ட பர்னபா **''சந்தோஷம்''** அடைந்தார் (11:23). சுவிசேஷமானது தங்களுக்கு வெளிச்சத்தையும் இரட்சிப்பையும் கொண்டுவரும் என்ற தீர்க்க தரிசன வார்த்தைகளைப் புறவினத்தார் கேள்விப்பட்டபோது, ''**சந் தோஷப்பட்டுக்** கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள்'' (13:47,48). சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காய்ப் பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலிருந்து துரத்திவிடப்பட்டபோது, ''சீடர்கள் **சந்தோஷத்தினாலும்** பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப் பட்டார்கள்'' (13:50-52). புறவினத்தாரின் மனந்திரும்புதல் சகோதரர் எல்லாருக்கும் ''மிகுந்த **சந்தோஷத்தை**'' உண்டாக்கியது (15:3).

தொலைந்துபோன தனது மகன் இல்லம் திரும்பும்போது தந்தைக்கு உண்டாகும் மகிழ்ச்சிதான் ஆத்துமாதாயம் தரும் மகிழ்ச்சி (லூக் 15:23). தொலைந்துபோன தனது ஆட்டைக் கண்டுபிடிக்கும் போது மேய்ப்பனுக்கு இருக்கும் மகிழ்ச்சிதான் அது (வச 6). தொலைந்துபோன தனது வெள்ளிக்காசைக் கண்டெடுக்கும் பெண் மணிக்கு ஏற்படும் மகிழ்ச்சி அது (வச 9). இம்மூன்று உவமானங்கள் மூலம் ஆத்துமாதாயத்தின் மகிழ்ச்சியை இயேசு விளக்கினார். மண்ணுலகில் மனந்திரும்பும் ஒரு பாவிக்காய் விண்ணுலகிலுள்ள தூதர் நடுவில் அவ்வளவு ஆரவாரம் உண்டாகுமானால், மண்ணுல கில் நம்மைச் சுற்றியுள்ள தூதர் நடுவில் ஏற்படும் ஆனந்தத்தை அளவிட முடியுமோ? (வச 7,10). இந்த மகிழ்ச்சியில் நாம் பங்கேற்க மாட்டோமோ? நற்செய்திப்பணியில் பரவசமும் ஆர்வமும் குறையும் போது, ஆத்துமாக்கள் மீதுள்ள நமது கரிசனையும் பாரமும் குறை கின்றன. இதன் விளைவு என்ன தெரியுமா? திருச்சபைக்கு வெளியே



ஆற்றவேண்டிய பணிகளைவிடத் திருச்சபைக்கு உள்ளேயே நடக்கும் செயல்பாடுகளிலேயே நமது ஈடுபாடு அதிகரிக்கும் (ஆமோஸ் 6:3-6).

ஆத்துமாதாயப்பணியிலும் நற்செய்தியறிவிப்பிலும் நாம் குளிர்ந்துபோவதற்கு இன்னொரு காரணம் —

## 2. கிரயம் செலுத்தத் தயக்கம்

ஆத்துமாதாயப்பணி பரவசமாயிருந்தாலும், அதில் வேதனை யும் உண்டு. கிறிஸ்துவுக்காய் மக்களைப் பிடிப்பதில் ஆனந்தமும் உண்டு, சிரமமும் உண்டு. தனி மனிதனின் இரட்சிப்பானது மறு பிறப்பு என்றழைக்கப்படுவதால், தனி நபர்களை இவ்வனுபவத்திற் குள் கொண்டுவருபவர்களுக்குப் பிரசவ வேதனை உண்டு (யோ 3:3). ''கனி மரத்துக்குத்தான் கல்'' என்பது முதுமொழி. யோசேப்பைக் குறித்த தீர்க்கதரிசனம் இதுதானே? ஆதி 49:22,23, ''யோசேப்பு கனி தரும் செடி; அவன் நீரூற்றருகே கனி தரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மீது படரும். வில் வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள்.'' விண்தந்தையானவரும் தீவிர ஆத்மாதாயகரை வேதனைகளின் வழியே நடத்திச் செல்கிறார். கனி தரும் கொடிகளைத் தோட்டக்காரராகிய அவர் கிளை நறுக்கிச் சுத்தம்பண்ணுகிறார் (யோ 15:2). கிளை நறுக்கும்போது வேதனை இல்லாதிருக்குமா? ''கண்ணீருடன்'' விதைப்பவன் என்று ஆத்து மாதாயகனைச் சங்கீதம் 126:5,6, வருணிக்கிறது. ''தமது ஆத்தும **வருத்தத்தின்** பலனைக் கண்டு அவர் திருப்தியாவார்; என் தாசனா கிய நீதிபரர் தம்மைப்பற்றிய அறிவினால் அநேகரை நீதிமான்களாக்கு வார்'' என்று பாடனுபவிக்கும் நமது இரட்சகரைக் குறித்துத் தீர்க்க தரிசனத்தில் வாசிக்கிறோம் (ஏசா 53:11). ''பிரசவ வேதனைப்படு முன் பெற்றாள், கர்ப்ப வேதனை வருமுன் ஆண் பிள்ளையைப் பெற் றாள். இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப் பட்டவைகளைக் கண்டது யார்?'' என்று திருமறை நம்மிடம் கேட் கிறது (ஏசா 66:7,8). ஆன்மீகப் பசிதாகத்தினால் மடிவோருக்காய்க் கண்ணீருடன் நமது இருதயத்தை மன்றாட்டில் ஊற்றவேண்டு

மென்று தேவன் நம்மை அழைக்கிறார் (புல 2:18,19). கலாத்திய விசுவாசிகள் பின்மாற்றமடைந்துவிட்டதால் பவுலின் புலம்பலைக் கவனியுங்கள்: கலா 4:19, ''கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்.'' ஆத்துமா தாயகன் இவ்விதமான பிரசவ வேதனை அனுபவித்தாலும், அதின் விளைவு அவனை அளவிட முடியாத மகிழ்ச்சியினால் நிரப்பும். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தவுடன் தாய்க்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு இயேசு அதனை ஒப்பிடுகிறார் (யோ 16:21).

ஆத்துமாதாயப்பணியில் வேதனை என்பது பல வகைகளில் வெளிப்படும். கிண்டலும் கேலியும்தான் முதலாம் வகை. மக்கள் நம்மை நிந்திப்பதால் அமைதியாய் உட்கார்ந்துவிடுவது சகஜம். என வேதான் தம்மையும் தமது வார்த்தைகளையும் குறித்து வெட்கப்படுவதற்கு எதிராக இயேசு நம்மை எச்சரித்துள்ளார். இது ''விபசாரமும் பாவமும் நிறைந்த தலைமுறை'' என்று எவரும் ஒப்புக்கொள்வர். இவ்வித உலகம் நமக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு தருமோ? நற்செய்தித் துண்டுப் பிரசுரங்களை (tracts) விநியோகிப்பதே இன்று கடினமாயிற்று. பஸ்காவை ஆசரிக்க எருசலேமிற்கு வரும்படி இஸ்ரவேல் மற்றும் யூதா மக்களுக்கு மன்னன் எசேக்கியா அஞ்சல்காரர் மூலம் அழைப்பு விடுத்தபோது, அவர்களைப் பலரும் அசட்டைபண்ணிக் கேலி செய்தனர். ஒரு சிலரே அரசனது அழைப்பை மதித்துத் தாழ்மையுடன் எருசலேமிற்கு வந்தனர் (2 நாளா 30:1,10,11).

அடுத்து எதிர்ப்பும் துன்புறுத்தலும் வரும். பிரியமானவர்களே, அமர்ந்துவிடாதீர்கள், அனல் மூட்டுங்கள்! 2 தீமோ 1:7,8, ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் நமது கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தோ, அவருக்காய்க் கட்டப்பட்டிருக்கும் என்னைக் குறித்தோ, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காய் என்னுடன் தீங்கு அனுபவி.'' அப்படியானால் ஒரு கேள்வி எழுகிறது: நமது தலைமயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன என்று ஆண்டவர் உறுதியளிக்க



வில்லையா? (லூக் 21:18). அவரது அனுமதியும் அறிவும் இல்லாது எதுவும் நடக்காது என்பதே அவர் தந்த உத்திரவாதம். சித்திரவதைக்கும் மரணத்திற்கும் தப்புவோம் என்று அவர் உறுதியளிக்கவில்லை (வச 16). நமது உடல் அல்ல, ''ஆத்துமாவே'' காக்கப்படும் என்பதே உத்திரவாதம் (வச 19; லூக் 12:3-5). ஆண்டுக்கு ஐந்து இலட்சம் கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாய் இறக்கிறார்கள் தெரியுமா?

அடுத்து, நமது குடும்பத்தினரிடமிருந்து வரும் இடர்பாடுகள். பன்னிருவரைப் பணிக்கும்போதே இயேசு முன்னறிவித்தது: ''சகோதரன் தன் சகோதரனையும், தந்தை தன் பிள்ளையையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றோருக்கு எதிராகப் பிள்ளைகள் எழுந்து அவர்களைக் கொலை செய்வார்கள் ... ஒரு மனிதனுக்கு எதிரிகள் அவன் வீட்டாரே'' (மத் 10:21,36). நற்செய்திக் கூட்டங்களுக்கு நீங்கள் போவதை அவர்கள் தடுக்கமாட்டார்கள்; ஆனால் நீங்கள் தீவிர நற்செய்திப்பணியில் ஈடுபடத் தொடங்கினால் தாங்கமாட்டார்கள். இங்குதான் தெரிவு செய்வது கடினமாகிறது. ''தந்தையையாவது தாயையாவது என்னைவிட அதிகம் நேசிக்கிறவன் எனக்குத் தகுதியானவன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னைவிட அதிகம் நேசிக்கிறவன் எனக்குத் தகுதியானவன் அல்ல'' என்ற இயேசுவின் கூற்றில் குழப்பம் எதுவுமில்லை (வச 37). உற்சாகமாய்த் தொடங்கும் பலர் சீக்கிரம் உலர்ந்துபோவது இதனால்தான்.

*இயேசுவின் நிந்தையைச் சுமப்போம்*
*வாசலுக்குப் புறம்பே போவோம்*

*சன்பல்லா தொபியா சக்கந்தங்களையும்*
*துன்புறுத்தும் தீயர் கேள்விகளையும்*
*அன்பருடனே இன்பமாய் ஏற்போம்*
*புறப்பட்டுப் போகக்கடவோம்.*

*ஸ்தேவான் மேல் விழுந்த கற்களை நினைத்து*
*சீடர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து*
*மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்*
*புறப்பட்டுப் போகக்கடவோம்*

*கள்ளச் சகோதரர் கைவிடுவார்கள்*
*சொல்லாதவைகளைச் சுமத்திடுவார்கள்*
*நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள்*
*புறப்பட்டுப் போகக்கடவோம்*

*கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும்*
*வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும்*
*நாளெல்லாம் நரரால் நசுக்கப்பட்டாலும்*
*புறப்பட்டுப் போகக்கடவோம்*

*வருத்தங்கள் வகைவகையாகவே வரும்*
*திருத்தங்கள் சிலரால் பொருத்தமாய் சேரும்*
*செருக்கானவர்களால் நெருக்குதல் நேரும்*
*புறப்பட்டுப் போகக்கடவோம்*

*அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும்*
*விக்கினங்கள் வெகுவாய்ச் சூழ்ந்தாலும்*
*அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தே*
*புறப்பட்டுப் போகக்கடவோம்*

*அமர்ந்திருந்து அவர் கர்த்தரென்றறியுங்கள்*
*நடந்திடும் யுத்தம் நாதனுடைதே*
*ஸ்தோத்திர பலியை நேர்த்தியாய்ச் செலுத்தி*
*அல்லேலூயா பாடக்கடவோம்*

தனியாள் ஆத்துமாதாயப்பணியை அநேகர் விட்டுவிட்டதற்கு இன்னொரு காரணம் —

### 3. பிரபலம் நாட்டம்

இன்றே ''நட்சத்திரம்'' ஆகிவிடவேண்டுமென்று துடிக்காதீர்; இன்று தாழ்மையும் உண்மையுமான ''ஆத்துமாதாயகனாய்'' இருங்கள்; நித்தியத்தில் ''நட்சத்திரமாய்'' மின்னுவீர்கள்! தானியேல் புத்தகத்தில் மகிமையானதொரு திருவாக்கு உண்டு: 12:3, ''ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளி போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துவோர் நட்சத்திரங்கள் போலவும் என்றென்றுமுள்ள சதா



காலங்களிலும் பிரகாசிப்பார்கள்.'' பாராட்டையும் விளம்பரத்தையும் நாடியலையாதீர். கிராமங்களிலேயே இந்தியா வாழ்கிறது. தள்ளப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர், எளியோர் போன்றோராலேயே இக்கிராமங்கள் பெரும்பாலும் நிறைந்திருக்கின்றன. தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படட்டும் (லூக் 4:18; மத் 11:5). பெரு நகர்களை நட்சத்திரப் பிரசங்கிமாருக்கு விட்டுவிடுங்கள். கிராமப்புற ஊழியம் பெரும்பாலும் கவனிப்பாரற்றே கிடக்கின்றது; ஆனால் அங்கு மாணிக்கங்கள் உண்டு. வாலிபர், நங்கையர் குழுக்கள் அமைத்துப் புறப்பட்டுச் செல்லுங்கள். 1960களில் கல்லூரி வளாகத்திலிருந்து நாங்கள் ஒரு குழுவாகக் காரைக்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு வாரயிறுதிகளில் நற்செய்தி அறிவிக்கச் செல்லுவோம். ஒரு கொட்டும் சிங்கியும்தான் எங்கள் வாத்தியக் கருவிகள். மின்கல ஒலி பெருக்கி (battery megaphone) வாங்க வசதியில்லாததால், உள்ளூரிலேயே தகரத்தில் ஒன்றைச் செய்துகொண்டோம். நான்தான் அதற்கு நீல நிறம் பூசியது நினைவுக்கு வருகிறது! எங்கள் சைக்கிள்களில் உள்ள பிரம்புக் கூடைகளில் நற்செய்திப் பிரசுரங்கள் சுமந்து சென்றோம். சாதாரண வாலிபராகிய எங்கள் மூலம் தேவன் தமது அசாதாரண வல்லமையை வெளிப்படுத்தினார். ஊழியம் செய்துவிட்டு இயேசுவிடம் திரும்பி வந்த எழுபது சீடரின் குதூகலமே எங்களுடையதாயுமிருந்தது (லூக் 10:17). பிசாசுகளைத் துரத்த கிராமங்களில்தான் கற்றுக்கொண்டோம். மூடப் பழக்கங்கள் நிறைந்துள்ள கிராமப்பகுதிகளில்தான் பிசாசு பிடித்தோர் அதிகம் (மத் 4:13-16). புகைப்படம் எடுக்கத் தேவையில்லை!

கிறிஸ்தவத்தை வாட்டிவதைக்கும் அரசியலில் இறங்கிவிடாதீர். அதினால் நேரமும் பலமும்தான் வீண். இயேசுவின் சீடர் நடுவிலும் அரசியல் போட்டி இருந்தது உண்மைதான். விண்ணகத்தில் இயேசுவின் வலதிடது பக்க ஆசனங்கள் தங்களுக்கு வேண்டுமென்று யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாயார் இயேசுவிடம் வேண்டினாள் (மத் 20:24-28). பிரிவினைகளையும் போட்டிகளையுமே உண்டாக்கும் இவ்வித ஆசைகளை இயேசு அங்கீகரிக்கவில்லை. பிறர்க்குச் ''சேவை'' செய்ய நமது ''வாழ்வை'' ஊற்றிவிடவேண்டுமென்பதே நமது துடிப்பாயிருக்கவேண்டும். நெகேமியாவைக்

கலந்துரையாடலுக்கு எதிரிகள் அழைத்தபோது, அவரது உடனடிப் பதில்: ‘‘நான் பெரிய வேலையைச் செய்கிறேன்; நான் இறங்கிவரக் கூடாது’’ (நெகே 6:3). 1976இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) ஆறாம் வருடாந்திர ஆசீர்வாத முகாமில் (Blesso ’76) ஆயிரம் பேருக்கு இக்கருப்பொருளில் மூன்று நாள் பிரசங்கித்தேன். இந்த மனத் துணிவையும் தரிசனத்தையும் பெற்றுக்கொண்ட வாலிபரில் அநேகர் இன்றுவரை திசைதிரும்பாது செயல்பட்டுவருகின்றனர்.

பண ஆசை குறித்துக் கவனமாயிருங்கள்! ‘‘ஊழியத்திற்காய்த் தான் பணம்; பணத்திற்காய் ஊழியம் அல்ல’’ என்பதே உங்கள் கோட்பாடாய் இருக்கட்டும். (Money for Ministry; not Ministry for Money!) இளம் ஊழியன் தீமோத்தேயுவுக்கு மூத்த அப்போஸ்தலன் கொடுத்த எச்சரிப்பை மறந்துவிடாதீர்கள் (1 தீமோ 6:9-11). ஊழியத்தில் தேவை ஏதாவது எழுமானால் உடனே முழங்காலிட்டு ஜெபிக்கச் செல்லுங்கள்; உடனே திட்டங்கள் தீட்டிப் புது வழிகள் கண்டுபிடித்துவிடாதீர்கள். மக்கள் ஊழியத்திற்காய் உங்களிடம் பணம் கொடுத்தால் அது இருக்கவேண்டிய இடம் உங்களது ‘‘பாக்கெட்’’ அல்ல, உங்களது ‘‘பாதங்கள்!’’ (At your feet and not in your fist!) அப்போஸ்தலரது வெற்றிகரமான ஊழியத்தின் இரகசியம் இதுவே (அப் 4:33,37). அப்பொழுதுதான் பரலோகின் பசுமைச் செய்திகள் எப்பொழுதும் உங்களிடம் இருக்கும் (லூக் 16:11). எப்பொழுது பணத்தை நாடி உங்கள் இருதயம் செல்கிறதோ, அப்பொழுதே உங்கள் பிரசங்கங்களில் கூர்மை மழுங்கிவிடும். தீர்க்கன் எரேமியாவின் காலத்தில் நடந்தது இதுவே. ‘‘அவர்களில் சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் வரை ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, எனது மக்களின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்’’ (எரே 6:13,14). இவ்விதச் சூழலில் தான் கர்த்தர் உரைத்தது: ‘‘வழிகளில் நின்று, **பூர்வ பாதைகள்** எவை என்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடந்திடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆன்மாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்’’ (வச 16).



# OLD PATHS பூர்வ பாதைகள்

***2010 அக்டோபர் 1-3இல்***
***காரைக்குடியில் நடந்த பூர்வ பாதைகள் முகாமில்***
***கொடுக்கப்பட்ட ஆறு அருளுரைகள்.***

ஆங்கிலத்திலிருந்து தமிழ்

(இச்செய்திகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன.)

வாழ்விலும் பணியிலும்
திருமறையின் தரத்திற்குத் திரும்பி வரும்படி ஓர் அழைப்பு!

6 ஒளித்தட்டுகள், 15 மணி நேரம்,
கவர்ச்சிகரமான தொகுப்பு

விலை ரூ. 250/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

தனித் தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் சிறந்தது!

R. Stanley
13 Church Colony
Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*




# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
***1970-1990***

*by R. ஸ்டான்லி*

☐ *160 இதயம் பேசும் கடிதங்கள்* ☐
☐ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* ☐
☐ *30 எழுப்புதல் அறிக்கைகள்* ☐
☐ *50 சவால் நிறை கட்டுரைகள்* ☐
☐ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* ☐
☐ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* ☐

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**




# நாளொரு மேனி

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும் ...***
***அனைத்து வயதினரும் ...***
***அனைத்துத் துறையினரும் ...***
***விரும்பி வாசிக்கும்***
***ஒரு புதிய படைப்பு!***

432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,*
*மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***
Stanley talks heart to heart with the Visitors of this Website.
❐
***General Messages***
Enlightening Articles for Christian Growth
❐
***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching
❐
***Bible Studies***
Studies on specific themes and select books of the Bible
❐
***Doctrinal Essays***
Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible
❐
***Youth Matters***
Practical Guidelines to Young Men and Young Women for Successful Living
❐
***Leaders Column***
Biblical Insights and Practical Lessons on Christian Leadership
❐
***Missionary Challenge***
Calling Christians to obey the Great Commission of Christ
❐
***My Answers***
Answers to Questions frequently asked but rarely answered
❐
***Quotable Quotes***
Stanley’s analytical Statements about Christian Life and Ministry
❐
***Video Talks***
Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive daily devotions & updates instantly.)*



**முடிவு வரிகள் ...**

- ☐ எழுப்புதல் என்பது முதலாவது கிறிஸ்தவர் ஒவ்வொருவரின் தனி வாழ்வில் துவங்கவேண்டும். இக்கருத்தே இந்நூலில் வலியுறுத் தப்பட்டுள்ளது. இந்நூலை ஒரு முறை வாசித்த பின்னர் இன் னொரு முறை நாளொன்றுக்கு ஓர் அத்தியாயம் என்று, முடிந்தால் மாலை உணவை ஒதுக்கி, வாசியுங்கள். முக்கியமில்லாத மற்ற வேலைகளை இந்த ஒரு வார காலத்தில் ஒதுக்கிவையுங்கள். இதனால் ஏற்படும் விளைவுக்கு நீங்களே சாட்சியாவீர்கள்.

- ☐ திருச்சபைச் சீர்திருத்தத்தின் (Protestant Reformation) 500ஆம் ஆண்டாகிய 2017இல் வெளியிடப்படும் இந்நூல் காலத்திற் கேற்றது.

- ☐ குறைந்தது 10 பிரதிகள் வாங்கி உங்கள் கிறிஸ்தவ நண்பர்களுக்கு அன்பளியுங்கள். எழுப்புதல் தீ எங்கும் பரவட்டும். திருச்சபை ஆதிநிலைக்குத் திரும்பட்டும். ஒரு பிரதியின் விலை ரூ. 60/-. பத்து பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி. அனுப்பச் செலவு தனி.